

# கோபுரம்

தகவல் இதழ்


விஜய வருடம் - ஆவணி 2013

புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோபுரம்

## தகவல் இதழ்

## விஜய வருடம் – ஆகஸ்ட் 2013

*மலர்: 22* *இதழ்: 02*

இதழாசிரியர்

**திருமதி தேவகுமாரி ஹரன்**
*சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர்*

மலர்க்குழு

**திருமதி சாந்தி நாவுக்கரசன்**
*பணிப்பாளர்*

**திரு. ம. சண்முகநாதன்**
உதவிப் பணிப்பாளர் (ஆலயம்)

**திருமதி ஹேமலோஜினி குமரன்**
உதவிப் பணிப்பாளர், (அறநெறிப் பாடசாலைகள்)

வெளியீடு - ஆய்வுப் பிரிவு

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**

இல. 248 1/1, காலி வீதி, கொழும்பு - *04*
தொலைபேசி: 2552641 / 2552643
தொலைநகல்: 2552825. மின்னஞ்சல்: hindudir@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| திணைக்களச் செய்திகள் | 1 - 24 |
| ஆடிப்பூர நாளில் அம்பிகையைப் பணிவோம் | 25 |
| பிள்ளையார் வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் | 26 - 28 |
| வள்ளுவர் பார்வையில் பணியாளர் கடைமைகள் | 29 - 31 |
| நம்பாடுவான் | 32 - 34 |
| தமிழக நுண்கலை வரலாற்றில் நகரத்தார் பங்கு | 35 - 37 |
| காலம் அறிந்து செயல்படுங்கள் | 38 - 39 |
| அதிஷ்டானம்: கட்டுமான வடிவமைப்பு | 40 - 42 |
| பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும் | 43 - 52 |
| கோறளைப்பற்று தெற்கு பிரதேசம் | 53 - 56 |
| ஆடி அமாவாசை விரதம் | 57 - 58 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணைக்களச் செய்திகள்

## ஆய்வுப்பிரிவின் செயற்பாடுகள்

### இந்து சமய தமிழ் இலக்கிய ஆய்வரங்கு

#### மூவர் தமிழும் சைவநெறியும்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தனது ஆய்வுப் பிரிவின் செயற்பாடுகளில் ஒன்றாக வருடாந்தம் இந்து சமய தமிழிலக்கிய ஆய்வரங்கினை நடாத்தி வருகின்றது. இவ்வாய்வரங்குகள் இந்து சமயம், பண்பாடு, தமிழ் இலக்கியம் தொடர்பான பல்வேறு விடயங்களை பல்வகைப்பட்ட பரிணாம நோக்கில் ஆராயும் வகையில் அமைகின்றன. அவ்வகையில் இவ்வருடம் மூவர் தமிழும் சைவநெறியும் என்னும் தலைப்பில் யூன் மாதம் 28, 29, 30ஆம் திகதிகளில் கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் ஆய்வரங்கு நடைப்பெற்றது.

ஆய்வரங்கின் தொடக்க வைபவம் 28-06-2013 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைப்பெற்றது. இத்தொடக்க வைபவத்தின் பிரதம விருந்தினராக முன்னாள் மலேசிய பிரதியமைச்சர் தான் ஸ்ரீ குமரன் அவர்களும், அவரது பாரியாரும் கலந்துக் கொண்டனர். இவ்வாய்வரங்கின் வரவேற்புரையை திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. ம. சண்முகநாதன் அவர்களும், தொடக்க உரையை பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களும், தலைமையுரையை பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களும் ஆய்வரங்கின் ஆதார சுருதி உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்களும், ஆசியுரையை சிவ ஸ்ரீ குகானந்த சர்மா அவர்களும் நிகழ்த்தினர். இவ்வைபவத்தில் மூவர் தமிழ்நெறியெனும் ஆய்வரங்கச் சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. தென்னிந்திய புதுச்சேரி பன்னிரு திருமுறை மன்றத்தைச் சார்ந்த 15க்கு மேற்பட்ட பேராளர்கள் பார்வையாளர்கள் கலந்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவர்களில் திரு வயி நாராயணசாமி, முனைவர் எஸ் முத்துலக்சுமி, முனைவர். பா. சுப்ரமணியம், முனைவர் உ. பாலசுப்ரமணியம், முனைவர் சுடலி தியாகராஜன் ஆகியோர் தமது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

இலங்கை பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்களும் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்திருந்தனர். ஆய்வரங்கு தேவாரமும், சமய நடைமுறைகளும், தேவாரமும் தத்துவமும் தேவாரமும் கலைகளும், தேவாரமும் சமூகமும் எனும் உபதலைப்புகளின் கீழ் 14 அமர்வுகள் நடைப்பெற்றன. இவற்றில் 50 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இறுதிநாள் வைபவம் 30.06.2013ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைப்பெற்றது. இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. எம். கே.பி. திஸ்நாயக்க அவர்கள் கலந்துக் கொண்டு சிறப்பித்தார். இவ்வைபவத்தில் கடந்தவருட ஆய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்பான "இந்து சமயமும் அவைதிக நெறிகளும்" என்னும் நூல் வெளியிடப்பட்டது. இவ்வைபவத்தில் தென்னிந்திய கலைஞர்களான திரு. இராமச்சந்திரன் பிரவீன் குழுவினரின் பண்ணிசை கச்சேரியும், பரதகலா வித்தகர் திவ்யா சிவநேசனின் மாணவிகளின் அரன்புகழ் பாடும் அருமறை என்னும் நாட்டிய நாடகமும் நடைபெற்றன.

#### இந்து நாகரீகம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பயிலரங்கு

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உயர்தர வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பயிலரங்கு 28.01.2013 தொடக்கம் 30.01.2013 ஆம் திகதி வரை 3 தினங்களுக்கு மட்டக்களப்பு நாவற்குடா இந்து கலாசார மண்டபத்தில் நடைப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பயிலரங்கின் விரிவுரைகளை பேராசிரியர் சி. பத்மநாதன், பேராசிரியர் வ. மகேஸ்வரன், திரு. எஸ். முகுந்தன், திரு. க. இரகுபரன், கலாநிதி கிருஸ்ணவேணி நோபேட், திருமதி சாந்தி கேசவன் ஆகியோர் நிகழ்த்தினர். திருமதி தேவகுமாரி ஹரன் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிப் பயிலரங்கின் தொடக்க வைபவத்தில் பிரதம விருந்தினராக மட்டகளப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். விமலநாதன் அவர்கள் கலந்துக் கொண்டார். இப்பயிற்சிப் பயிலரங்கில் சுமார் 85க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துப் பயன்பெற்றனர். அவர்களுக்குத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட உசாத்துணை நூல்கள் வழங்கப்பட்டன.

### சாசனவியல் பயிலரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஆய்வுப் பிரிவின் செயற் திட்டங்களில் ஒன்றாக நடத்தப்படும் சாசனவியல் பயிலரங்கு ஏப்ரல் மாதம் 02 திகதி தொடக்கம் 09ஆம் திகதி வரை மட்டக்களப்பு நாவற்குடா இந்து கலாசார மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இப்பயிலரங்கு ஆரம்ப நிலைப் பயிலரங்காக இம்முறை நடத்தப்பட்டது. இப்பயிற்சி நெறியின் விரிவுரைகளை பேராசிரியர் சி.பத்மநாதன் (தகைசார் பேராசிரியர், வரலாற்றுத்துறை, பேராதனைப்பல்கலைகழகம்), பேராசிரியர் பியதிஸ்ஸ சேனாநாயக்கா, வரலாற்றுத் துறை, பேராதனை பல்கலைக் கழகம்), பேராசிரியர் வ. மகோஸ்வரன் (தலைவர், தமிழ்துறை, பேராதனை பல்கலைக்கலகம்), போராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர், பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், செல்வி நிலாந்தி பொன்னுத்துரை, செல்வி கௌரி புண்ணியமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர். இப்பயிற்சிப் பயிலரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைகழக தொல்லியல், வரலாறு, தமிழ், இந்து நாகரிகத்துறை மாணவர்களும், கிழக்குப் பல்கலைக்கழக வரலாறு, தமிழ், இந்து நாகரிகத்துறை மாணவர்களும் தென்கிழக்குப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை மாணவர் களும் மொத்தமாக 95 மாணவர்கள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.

### சமஸ்கிருத வகுப்புகள்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்து சமய நிறுவனங்களின் வேண்டுகோளுக்கமைய இம்முறை சமஸ்கிருத வகுப்புகள் ஒழுங்கு செய்து நடாத்தப்படுகின்றன. ஜூன் மாதம் 9ம் திகதி ஆரம்பமாகிய இவ்வகுப்புகள் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் நடத்தப்படவுள்ளது. யாழ்ப்பாணத்தில் ஆனைப்பந்தி குருகுல மண்டபத்திலும், கொழும்பில் திணைகள கேட்போர் கூடத்திலும் இவ்வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் நல்லூர் பிரதேச செயலாளர் திரு. செந்தில்நந்தனன், திருமதி சுகுணநிதி தெய்வேந்திரன், பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர். இவ்வைபவத்தில் ஆசியுரையை நல்லை ஆதீன சுவாமிகளும் சிவஸ்ரீ பிரணார்த்தி ஹரகுருக்களும் நிகழ்த்தினர். இவ்வகுப்பில் 50க்கும் மேற்பட்டவர்கள் சமஸ்கிருத மொழியினை கற்று வருகின்றனர். இதன் விரிவுரைகளை பிரம்மஸ்ரீ குமரேசசர்மா, திரு. நவநீதகிருஷ்ணன் ஆகியோர் மேற்கொள்கின்றனர். இந்துகலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி மா. அனந்தலக்சுமி இவ்வகுப்புகளின் ஒருங்கிணைப்பாளராக செயற் படுகின்றார். கொழும்பில் நடைபெறும் சமஸ்கிருத வகுப்பில் 15க்கும் மேற்பட்டவர்கள் கற்கின்றனர். இதன் வகுப்புகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் சமஸ்கிருத விரிவுரையாளர் திருமதி இந்திரா சதானந்தன் அவர்கள் நிகழ்த்துகின்றார்.

### உள்ளூர் எழுத்தாளர் ஊக்குவிப்புத் திட்டம்

இலங்கை எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களால் எழுதப்பட்ட நூல்களை திணைக்களம் கொள்வனவு செய்து வருகின்றது. அவ்வகையில் இவ்வருடம் உள்ளூர் எழுத்தாளர்கள் 31 பேரிடமிருந்து 2013ஆம் ஆண்டு 947 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

### சைவ சித்தாந்த வகுப்பு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடம் தோறும் நடத்தப்பட்டு வருகின்ற சைவசித்தாந்த வகுப்புகள் இந்த வருடம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நாவற்குடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து கலாசார நிலையத்தில் 15.07.2013 ஆம் திகதி தொடக்கம் 24.07.2013ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 10 தினங்கள் நடத்தப்பட்டது.

மேற்படி வகுப்புகள் தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதின பேராசிரியர் சித்தாந்தத வித்யாநிதி திரு.க.சண்முகம் அவர்களால் நடத்தப்பட்டது.

சைவசித்தாந்த பயிற்சி வகுப்பின் ஆரம்ப தின வைபவம் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி.ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெற்றது. ஆரம்பதின வைபவத்தில் உதவி மாவட்டச் செயலாளர் திரு. வ. வாசுதேவன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

தொடர்ச்சியாக 10 நாட்கள் நடைபெற்ற பயிற்சி வகுப்புகளில் சைவப்புலவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலைகளில் இந்து நாகரிகம் சைவ சமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், ஆலய தர்ம கர்த்தாக்கள் என 50க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவு நாள் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு ம.சண்முகநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சின் தேசிய இணைப்பாளர் செல்வி. கா. தங்கேஸ்வரி அவர்களும் உதவி மாவட்ட செயலாளர் திரு. வாசுதேவன் அவர்களும் அதிதிகளாக கலந்துக் கொண்டனர். இவர்களுடன் சிவயோகச் செல்வன் சாம்பசிவம் சிவாச்சாரியார் அவர்களும் கலந்துக் கொண்டார்.

அன்றைய நிகழ்வில் பயிற்சி வகுப்பில் கலந்துக் கொண்டவர்கள் சார்பாகவும், திணைக்களத்தின் சார்பாகவும் பயிற்சி வகுப்புகளை நடத்திய பேராசிரியருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பு வழங்கப்பட்டது. அத்துடன் பயிற்சி வகுப்பில் கலந்துக் கொண்டவர்களுக்கு திணைக்களத்தால் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

## திணைக்கள நூல்கள் வெயியீடுகள்

### பஞ்சாங்கம் வெளியீடு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்துப் பொதுமக்களின் பயன்பாடு கருதி வருடாந்தம் பஞ்சாங்கம் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றது. அவ்வகையில் இவ்வருடம் 12,000 பஞ்சாங்க பிரதி அச்சடிக்கபட்டடு இலங்கையில் பல்வேறு பாகங்களிலும் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்டன.



### இந்து சமயமும் அவைதீக நெறிகளும்

2012ம் ஆண்டு ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் இவ்வருட ஆய்வரங்கில் வெளியிடப் பட்டது. இந்நூல் சமய மரபுகள், சிந்தனை மரபுகள், கலை மரபுகள் ஆகிய அத்தியாயங்களுடன் 29 கட்டுரைகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியர்கள் திரு. க.ரகுபரன், கலாநிதி. ஸ்ரீ பிரசாந்தன் ஆகும். இந்நூலின் விலை 700 ரூபாவாகும்.



### மூவர் தமிழ் நெறி

2013ஆம் ஆண்டு மூவர் தமிழும், சைவநெறியும் என்னும் ஆய்வரங்கு தொடர்பாக இச்சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. இச்சிறப்பு மலர் திருஞானசம்பந்தர் தேவாரம், திருநாவுக்கரசர்தேவாரம், சுந்தரர் தேவாரம், பாடல் பெற்ற தலங்கள், சைவமறுமலர்ச்சியின் சம்பந்தர் சமய பிரசாரமும், திருமுறைகளில் இலக்கிய வளம், முதல் திருமுறையில் ஆடல் குறிப்புகள், தேவாரமும் சிற்பக்கலையும், தமிழிசைக்கு ஞானசம்பந்தர் தந்த புதுமைப் பண், தேவாரப்பணகள் வரலாற்றில் திருமுறை ஓதுவார்கள், தேவார மூவர் இசைத் தொண்டு அப்பரடிகளும் சமண சமயமும், தேவாரப்பாடப் பெற்ற சிவத்தலங்கள் ஆகிய கட்டுரைகளை உள்ளடக்கிஇம்மலர்வெளிவந்துள்ளது. இம்மலரின் தொகுப்பாசிரியர்கள் திருமதி சாந்தி நாவுக்கரசன், திருமதி தேவகுமாரி கரன் ஆகியோர். இந்நூலின் விலை 300 ரூபாவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து விவகாரப் பிரிவின் செயந்திட்டங்கள்

## தைப்பொங்கல் விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய விவகாரப் பிரிவின் ஊடாக இந்து சமய நம்பிக்கைகளையும், பாராம்பரியங்களையும் பேணும் பொருட்டுப் பல்வேறு செயற்பாடுகளை மாவட்டங்கள்தோறும் செயற்படுத்தி வருகிறது. அதன் ஓர் அம்சமாக தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் விழா வருடம்தோறும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பல்வேறு மாவட்டங்களில் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அவ்வகையில் இவ்வருடம் அதி மேதகு ஜனாதிபதியின் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையில் 16.01.2013 ஆம் திகதி பொங்கல் விழா விமர்சையாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் விசேட கலை நிகழ்ச்சிகளாக இராஜமாணிக்கம் ரவிசங்கர் குழுவினரின் மங்கள இசையும், பரதகலா வித்தகர் செல்வி திவ்யா சிவனேசனது அபிநயஷேத்ரா நடனப்பள்ளி மாணவர்களது நடனநிகழ்ச்சியும் இடம் பெற்றன.

இதைத்தவிர மட்டக்களப்பு, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, இரத்தினபுரி, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் மாவட்ட செயலகங்களும் இணைந்து தைபொங்கல் விழாவினை கொண்டாடியுள்ளனர் யாழ் மாவட்டத்தில் ஊர்காவற்றுறை தம்பாட்டி முத்து மாரியம்மன் அறநெறிப் பாடசாலையில் 18-0-2013 ஆம் திகதியும் தொண்டமானாறு பிள்ளையார் அறநெறிப் பாடசாலையில் 20-01-2013 ஆம் திகதியும், கோண்டாவில் வேதபாராயனாண அறநெறிப் பாடசாலையில் 19-01-2013 ஆம் திகதியும் திணைக்களத்தினால் தைபொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## 63 ஆவது சுதந்திரதின விழா

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 63வது சுதந்திர தின விழாவினை முன்னிட்டு 04.02.2013 அன்று திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் காலை 6.30 மணிமுதல் இந்துசமய அனுஷ்டானங்களுடன் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன. இவ்விசேட பூசை நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என் டக்ளஸ் தேவானந்தா (M.P) அவர்களும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. சந்திரகுமார் அவர்களும், புத்தசாசன அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி ரமணி குணவர்த்தன, புத்த சாசனம் மற்றும் மதவிவகாரச் செயலாளரின் பிரத்தியேகச் செயலாளர், திருகோணமலை மாவட்டப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். இவர்களோடு திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன், நிர்வாக அலுவலர் திரு. T. ஜெயசோதி, கலாசார அலுவலர் திரு மகேந்திரராஜா, அபிவிருத்தி உதவியாளர் திருமதி பவானி முகுந்தன். முகாமைத்துவ உதவியாளர் செல்வி P. தனுசா ஆகியோர் கலந்துக் கொண்டனர். விசேட அபிஷேகம், பூசை என்பன சிறப்பாக நடைப்பெற்றதுடன் அமைச்சர், பிரமுகர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றது.

## மகாசிவராத்திரி விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான நிர்வாகத்தினரும் இணைந்து நடத்திய மகாசிவராத்திரி விழா 10-03-2013 ஆலய முன்றலில் மாலை 7.00 மணியளவில் ஆரம்பமாகியது. திணைக்கள பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் பிரதியமைச்சர் கௌரவ M.K.A.D.S குணவர்தன அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். சிறப்பு விருந்தினர்களாக புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் அமைச்சர் மாண்புமிகு பிரதமர் அவர்களின் இணைப்புச் செயலாளர் திரு. ஜெயசூரிய, சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் திரு காமினி த. சில்வா, பிரதி பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரட்ண, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபினி வரதலிங்கம், வலிவடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் மு. ஸ்ரீமோகனன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தான பிரதமகுரு இராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். இவ்வாண்டு போல் தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் நகுலேஸ்வரப் பெருமானின் ஆலயத்திலேயே சிவராத்திரி விழாவினை நடத்த வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன் வைத்தார்.

பிரதம விருந்தினர் உரையாற்றும் போது ஜனாதிபதியவர்கள் தமிழ் மக்கள் தமது வழிபாட்டு முறைகளை கடைப்பிடிக்க தாம் எவ்வாறு உதவலாம் என்பதற்கு ஆலோசனை வழங்கி வருகிறார் என்றும் அவரதும், பிரதமரதும் வாழ்த்துக்களையும் பகிர்ந்துக் கொண்டார்.

தலைமையுரையாற்றிய திணைக்களப் பணிப்பாளர் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான கீரிமலையின் சிறப்பையும், சிவராத்திரி வழிபாட்டின் சிறப்பையும் விரிவாக எடுத்தியம்பினார். வரவேற்புரையை திணைக்கள உதவிபணிப்பாளர் திரு ம. சண்முகநாதன் அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. இரவு 9.30 மணிமுதல் 2.00 மணிவரை எமது அழைப்பின் பேரில் அங்கு வருகை தந்த நேத்ரா தொலைகாட்சி நிறுவனத்தினர் நேரடி ஒளிபரப்பையும் செய்தனர். நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவும் தரமானதாகவும் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றனவாகவும் அமைந்தன. இச்சிவராத்திரி நிகழ்வில் திணைக்கள உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## புண்ணியகிராம செயற்திட்டம்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் பல்வேறு செயற்திட்டங்களில் ஒன்றாக புண்ணிய கிராம செயற்திட்டம் அமைகிறது. இளைய சமுதாயத்தினரிடையே நற்பண்புகளை ஊக்குவிப்பதுடன் ஒழுக்கம் மிக்க நற்பிரஜைகளை உருவாக்கும் செயற்திட்டமாக இது அமைகிறது. இத்திட்டம் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் மஹிந்த சிந்தனையில் கமநெகும அபிவிருத்தி திட்டத்தின் செயற்பாடாகும்

இச்செயற்திட்டம் திணைக்களத்தினால் மாவட்டங்கள்தோறும் பலவேறு இடங்களில் நடத்தப்படுகின்றது. அவ்வகையில் இவ்வருடம் புண்ணியகிராம செயற்திட்டம் பொலன்னறுவை, அம்பாறை, இரத்தினபுரி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளன. அவை தொடர்பான விவரம் வருமாறு,

### அம்பாறை

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியினை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள நாவிதன் வெளி இந்து ஆலயங்களின் ஒன்றியத்துடன் இணைந்து தமிழ் மகா வித்தியாலய கல்லூரி மண்டபத்தில் 2013.01.20 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை காலை 8.30 மணியளவில் மேற்படி புண்ணியகிராம செயலமர்வு நடைப்பெற்றது. இந்நிகழ்வில் முக்கிய பிரமுகர்கள், விரிவுரையாளர்கள், அரச பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அறநெறிபாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், ஆலய பரிபாலன சபையினர்கள் பெற்றோர்கள், பெரியோர்கள் ஏறத்தாழ 250ற்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

இச்செயற்திட்டத்தின் முதற்கட்டமாக ஊர்வலம் இடம்பெற்றது. இந்த ஊர்வலத்தில் முக்கிய பிரமுகர்கள், ஆர்வலர்கள், அந்தணப்பெருமக்கள், ஆலய நிர்வாகிகள், அரச பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பெற்றோர்கள், பெரியவர்கள் பங்குபற்றினர். ஊர்வலத்தின் பின்னர் அபிவிருத்தி உதவியாளர் திரு. கி. குணநாயகம் அவர்களால் நந்திக் கொடி ஏற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலும், தேவாரமும் இடம்பெற்றன.

தேவாரத்தினை தொடர்ந்து இந்து ஆலய ஒன்றியத்தின் குருக்களான சிவஸ்ரீ தி. தேவகுமார் அவர்களது ஆசியுரையும், சிவஸ்ரீ கபிதாஸ் அவர்களது விசேட உரையும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கலாசார உத்தியோகத்தர் திருமதி. நிர்மலா கருணானந்தராஜாவின் வரவேற்புரையும், அபிவிருத்தி உதவியாளர் திரு. கி. குணநாயகம் அவர்களது தலைமையுரையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை ஆசிரியர் திரு. வி. உதயகுமார் அவர்களது சிறப்புரையும் இடம்பெற்றன. தொடர்ந்து திருமதி நித்தியவதி நித்தியானந்தன் அவர்கள் "பசு வதையை தடை செய்தல்" "பெரியோரைக் கனம் பண்ணல்" எனும் தலைப்பிலும், இராமகிருஷ்ண பாடசாலை ஆசிரியர் திரு. எம். பிரதாப் அவர்கள் "மதமாற்றம்" எனும் தலைப்பிலும் விரிவுரைகளை ஆற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களது வரவேற்பு நடனம் இடம்பெற்றது. இறுதி நிகழ்வாக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய செயலாளர் திரு. பி. சுரேஸ் அவர்களது நன்றியுரை, பாடசாலை மாணவிகளது தேவாரத்துடன் நிகழ்ச்சிகள் யாவும் இனிதே நிறைவு பெற்றன

## பொலனறுவை புண்ணியக்கிராம செயலமர்வு

பொலனறுவை சமன்பிட்டி கறப்பனை ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயமும் திணைக்களமும் இணைந்து நடாத்திய புண்ணிய கிராம செயலமர்வு 2013.01.19ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. இச்செயலமர்வில் பிரதம விருந்தினராக மன்னம்பிட்டி தமிழ் வித்தியாலய முன்னாள் அதிபர் திரு. க. கனகராஜா கலந்துக் கொண்டார். இச் செயலமர்விற்கு திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் அவர்கள் தலைமை தாங்கினார் இச்செயலமர்வில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், ஆலயநிர்வாகிகள், பெற்றோர்கள் பெரியோர்கள் ஏறத்தாழ 150க்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

முதலில் விசேட பூஜை இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. தொடர்ந்து மாணவிகளது தேவாரம், ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய அறநெறிப்பாடசாலை பொறுப்பாசிரியர் திரு எஸ். சுதாகரது வரவேற்புரை, திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் அவர்களது தலைமையுரை, பிரதம விருந்தினர் திரு. க. கனகராஜா அவர்களது உரை ஆகியன இடம்பெற்றன.

மேலும் "புண்ணியமும் கிராமம் பற்றிய விளக்கமும் அதனூடக பெறப்படும் சமூக விழுமியமும்" எனும் தலைப்பில் வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன், "போதைப் பொருள் ஒழிப்பு" "பெரியோரைக் கனம் பண்ணல்" என்னும் தலைப்பில் சைவப்புலவர் திரு. எஸ்.துஷ்யந் ஆகியோர் விரிவுரையாற்றினர். தொடர்ந்து அறநெறிப்பாடசாலை மாணவர்களது கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இறுதியாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள கலாசார உத்தியோகத்தர் திருமதி நிர்மலா கருணானந்தராஜாவின் நன்றியுரை, பாடசாலை மாணவர்களது தேவாரம் ஆகியவற்றுடன் நிகழ்ச்சி இனிது முடிவு பெற்றன.

**ஏனைய இடங்களில் இடம்பெற்ற செயலமர்வுகளின் விபரம் வருமாறு:-**

இரத்தினபுரி மாவட்டத்தில் 16-02-2013 ஆம் திகதி இரத்தினபுரி கிரிபத்கல தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கொழும்பு மாவட்டத்தில் 23-02-2013 ஆம் திகதி புவக்பிட்டிய CC தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 17-03-2013 ஆம் திகதி முழங்காவில் வெங்கடேஸ்வரப் பெருமாள் கோவிலில் இடம் பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 24-03-2013 ஆம் திகதி அரியாலை ஸ்ரீதுரவடிப் பிள்ளையார் கோவிலில் இடம்பெற்றது.

## சமய சொற்பொழிவுகள்

பாடசாலை மாணவர்கள் பெற்றோர்கள், ஆகியோருக்கு சமய விழிப்புணர்வு ஊட்டும் வகையில் சமயத்துறையில் ஆழ்ந்த புலமையும், அறிவும் உள்ள பெரியவர்களை அழைத்துச் சென்று ஆங்காங்கே சமய சொற்பொழிவுகளை நடத்துவித்தல் திணைக்களச் செயற்பாட்டில் ஒன்றாகும். அந்தவகையில் இவ்வாண்டு கொழும்பு மாவட்டத்தில் 25-01-2013 சாமுண்டேஸ்வரி அம்பாள் ஆலயத்திலும் திருமதி வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அவர்களும், பிரசங்க பூஷணம், சைவசித்தாந்த பண்டிதர் திரு. கு. சிவராஜசர்மா அவர்களும் சொற்பொழிவை நிகழ்த்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருபூசைகள்

சைவ சமய நாயன்மார்கள், இந்துசமய ஞானிகள், பெரியார்கள் ஆகியோர்க்குரிய குருபூசைதினங்கள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டும் கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பின்வரும் குருபூசைகள் நடைப்பெற்றுள்ளன.

| மாவட்டம் | காலம் | குருபூசைக்குரியவர் | இடம் |
|---|---|---|---|
| 1. மட்டக்களப்பு | 03-03-2013 | திருவள்ளுவர் | ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலை |
| 2. திருகோணமலை | 27-02-2013 | திருவள்ளுவர் | சுவாமி தந்திரதேவா இல்லம் |
| 3. கொழும்பு | 25-02-2013 | திருவள்ளுவர் | அகில இலங்கை ஆனந்த ஜயப்பன். |
| 4. யாழ்ப்பாணம் | 09-02-2013 | அபிராமி பட்டர் | தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆலயம் |
| 5. மட்டக்களப்பு | 17-02-2013 | அப்பூதியடிகள் | கலைமகள் அறநெறிப் பாடசாலை |
| 6. புத்தளம் | 23-02-2013 | கச்சியப்பர் | குசலைமுத்து மாரியம்மன் அறநெறிப் பாடசாலை |
| 7. புத்தளம் | 28-02-2013 | திருவள்ளுவர் | கருங்காலிச் சோலை கல்யாண முருகன் ஆலயம் |
| 8. யாழ்ப்பாணம் | 24-02-2013 | திருவள்ளுவர் | ஆறுமுக நாவலர் மணிமண்டபம் |
| 9. யாழ்ப்பாணம் | 02-03-2013 | திருவள்ளுவர் | ஸ்ரீகாமாட்சியம்மன் கல்யாண மண்டபம் |
| 10. யாழ்ப்பாணம் | 03-03-2013 | திருவள்ளுவர் | நாவற்குளி அறிவொளி மன்ற அறநெறிப் பாடசாலை |
| 11. கொழும்பு | 03-03-2013 | திருவள்ளுவர் | வரதவிநாயகர் அறநெறிப் பாடசாலை |
| 12. மட்டக்களப்பு | 24-02-2013 | கச்சியப்பர் | சின்னஊறணி மாவடிப் பிள்ளையார் ஆலயம் |
| 13. மட்டக்களப்பு | 02-02-2013 | விவேகானந்தர் | சித்தாண்டி சிவசக்தி அறநெறிப் பாடசாலை |
| 14. புத்தளம் | 05-04-2013 | காரைக்காலம்மையார் | ஏத்தாளை ஸ்ரீகாமாட்சியம்மன் |
| 15. கொழும்பு | 20-01-2013 | அருணகிரிநாதர் | கொழும்பு இராமகிருஸ்ணா மிஷன் சிறிய மண்டபம். |

உலக இயந்திரத்தின் சக்கரங்களிலிருந்து தப்பி ஓடாதே. மாறாக, அதன் உள்ளே நின்று கொண்டு, கர்மயோகத்தின் இரகசியத்தைக் கற்றுக் கொள், இயந்திரத்தின் உள்ளே சரியானபடி வேலை செய்வதன் மூலமே அதிலிருந்து வெளியே வந்துவிடுவது சாத்தியமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிப் பிரிவின் செயற்பாடுகள் 2013

நாடளாவிய ரீதியில் இந்து அறநெறிப் பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன. இதன் செயற்பாடுகளுக்கு உரிய ஆலயங்களும் நிறுவனங்களும் பொறுப்பாக விளங்குகின்றன. இப்பாடசாலைகளைப் பதிவு செய்து மேற்பார்வை செய்வதுடன் அதன் செயற்பாடுகளுக்கு தேவையான உதவிகளை திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. திணைக்கள நிதி ஏற்பாட்டிற்கு அமைய மாவட்டம் தோறும் இச்சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சேவையின் கீழ் மாவட்டம் தோறும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு நடத்துதல், மாணவர்களுக்கான சீருடை விநியோகம், ஆசிரியர்களுக்கான நூல்கள் வாங்குவதற்கான கொடுப்பனவுகள், இந்து சமயப் பொதுஅறிவுப் போட்டிப் பரீட்சை நடத்துதல், சொற்பொழிவுகள் மேற்கொள்ளல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இத்திட்டங்கள் மூலம் அறநெறி பாடசாலைகள் வளர்த்து நல்லதொரு இளைய சமுதாயத்தை உருவாக்க வழிவகுப்பதே இதன் நோக்கமாகும். அவ்வகையில் இவ்வருட முதலாம், இரண்டாம் காலாண்டுகளில் நடை பெற்ற வேலைத்திட்டங்கள் வருமாறு:

## தர்மாசிரியர் கருத்தரங்குகள்

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படும் இந்து தர்மாசிரியர் பரீட்சையை ஒட்டி கருத்தரங்குகளை எமது திணைக்களம் நடாத்தி வருகின்றது. அவ்வகையில் இந்து தர்மாசிரியர் கருத்தரங்கு மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் நடைப்பெற்றன. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பொலனறுவை ஆகிய மாவட்டங்களை சார்ந்தவர்களுக்கான வதிவிட கருத்தரங்கு ஜனவரி 19-20 ஆம் திகதிகளில் மட்டகளப்பு நாவற்குடா இந்து கலாசார நிலையத்தில் நடைப்பெற்றது. உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பேராசிரியர் எஸ். பத்மநாதன் கிழக்குப்பல்கலைக்கழக விரிவுரையாளரும் இந்து நாகரிகதுறை இணைப்பாளருமான திரு. ச.முகுந்தன், சைவப்புலவர் எஸ்.துஷ்யந், சைவபுலவர் திரு. எஸ்.கோபாலபிள்ளை. திருமதி நித்தியவதி நித்தியானந்தன் ஆகியோர் விரிவுரையாற்றினர். இக்கருத்தரங்கில் சுமார் 250 பரீட்சார்த்திகள் கலந்து பயன் பெற்றனர். இக்கருத்தரங்கில் பங்குபற்றியோருக்கு கடந்தகால தர்மாசிரியர் வினாவிடை புத்தகமும் பாடத்திட்ட நூல்களும் இலவசமாக வழங்கப்பட்டன.

கொழும்பு, கம்பஹா, புத்தளம், குருநாகல், மாத்தறை, கோகலை, களுத்துறை மொனராகலை ஆகிய 9 மாவட்டங்களைச் சார்ந்தவர்களுக்கான தர்மாசிரியர் கருத்தரங்கு ஜனவரி மாதம் 25,26 திகதிகளில் வதிவிடக் கருத்தரங்காக கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்திநாவுக்கரசன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பேராசிரியர் சி. பத்மநாதன், சைவப்புலவர் எஸ். செல்லதுரை, வித்துவான் வசந்தா வைத்திய நாதன், திருமதி. நித்தியவதி நித்தியானந்தன், சைவப்புவர் திரு துஷ்யந்த ஆகியோர் விரிவுரையாற்றினர். இக்கருத்தரங்கில் 200 பேர் கலந்துக்கொண்டு பயன்பெற்றனர். இக்கருத்தரங்கில் பங்கு பற்றியோருக்கு மாதிரி வினாவிடை புத்தகமும், பாடநூல்களும் இலவசமாக வழங்கப்பட்டன.

கண்டி, மாத்தளை, பதுளை, நுவரெலியா, இரத்தினபுரி, மாத்தறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்களுக்கான கருத்தரங்கு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் பெப்ரவரி 9,10ஆம் திகதிகளில் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைப்பெற்றது. இக்கருத்தரங்கில் விரிவுரைகளுடன், பாடநூல்களும் வழங்கப்பட்டன.

வட மாகாணத்துக்குரிய தர்மாசிரியர் கருத்தரங்கு யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க மண்டபத்தில் பெப்ரவரி 16, 17ஆம் திகதிகளில் நடைப்பெற்றது. இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த ஆசிரியர்கள் கலந்து பயன்பெற்றனர். இக் கருத்தரங்கில் விரிவுரைகளுடன், உசாத்துணை நூல்களும் வழங்கப்பட்டன.

## இந்து அறநெறி ஆசிரியர்களுக்கான வதிவிடக் கருத்தரங்கு 2013

இந்து அறநெறிப் பாடசாலைகள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு எமது பாடதிட்டத்துக்கு அமைவாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வாசிரியர்கள் ஒரு நெறிமுறைமைக்கு ஏற்ப கற்பித்தல் செயற்பாட்டினை ஏற்படுத்துவதற்காக வதிவிடக் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப் படுகின்றன. இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களை சார்ந்த சுமார் 125 ஆசிரியர்கள் கலந்துக் கொண்டனர். இக்கருத்தரங்கு 29 மார்ச் 2013 தொடக்கம் 02 ஏப்ரல் வரையான ஐந்து நாட்கள் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைப்பெற்றது.

இக்கருத்தரங்கில் யோகாசன பயிற்சி, பண்ணிசைப் பயிற்சி, எமது பாரம்பரிய கலைகளான வாய்ப்பாட்டு, கதாபிரசங்கம், புராண படலம், பேன்றவற்றில் பயிற்சிகளும், சமய இலக்கியம், வாழ்வியல் பற்றிய விரிவுரைகளும் ஆலய தரிசனமும் அதன் விளக்கமும் எனும் தலைப்பில் ஆகம முறையில் அமைந்த கொழும்பு பொன்னம்பலவானேஸ்வரர் ஆலய தரிசனமும் இடம்பெற்றன. அத்துடன் ஆன்மீக சிந்தனையாக இராம கிருஸ்ணமிஷன் சுவாமிகளதும் சாரதா மிஷன் மாதாஜி அவர்களின் அருளுரைகளும் இடம்பெற்றன. பங்குபற்றிய ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும் நடைப்பெற்றது.

## இந்து இளைஞர் யுவதிகளுக்கான ஆன்மீக எழுச்சிப் பட்டறை

இப்பயிற்சிப் பட்டறை 26 ஏப்ரல் 2013 தொடக்கம் 28 ஏப்ரல் வரை மூன்று நாட்கள் மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வர சிவராத்திரி மண்டபத்தில் நடைப்பெற்றது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 250 இளைஞர் யுவதிகள் கலந்து பயன்பெற்றனர். யோகாசனம், மனவளக்கலை, குழுச் செயற்பாடுகள், விரிவுரைகள் என்பன நடைப்பெற்றன. இதனூடாக மாவட்டம்தோறும் இளைஞர் அணி ஒன்று உருவாக்கப்பட்டது. இவர்களுடாக இவர்களது கிராமம்தோறும் சமய பணிகளை ஆற்றுவதற்கு வழிசமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கை சிறப்பாக நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் மன்னார் மாவட்ட நலிவுற்றோர் நலங்காப்பு நிறுவனம், அறநெறிப் பாடசாலைகளின் ஒன்றியம், சிவபூமி இந்து இளைஞர் ஒன்றியம் ஆகிய அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## இந்துசமய பொது அறிவுப் போட்டி பரீட்சை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து அறநெறிப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களிடையே இந்து சமயம் தொடர்பான அறிவை விருத்தி செய்யும் முகமாக வருடாந்தம் இந்துசமயப் பொது அறிவுப் போட்டிப் பரீட்சையொன்று நடத்தப்படுகின்றது. இவ்வருடம் அகில இலங்கை ரீதியான சுமார் 50000 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் செப்டம்பர் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 தொடக்கம் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

## சீருடை, இசைக்கருவி கொள்வனவு

அறநெறிப் பாடசாலை மாணவர்களது சீருடைகள், ஆசிரியர்களுக்கான சீருடைகள் இலவசமாக திணைக்களத்தால் வழங்கப் படுகின்றன. அவ்வகையில் இவ்வாண்டுக்கான மாணவர் சீருடை கொள்வனவு பணி நிறைவடைந்துள்ளதுடன் ஆண், பெண் இருபாலருக்குமான சீருடைத் துணிகள் ஜுலை மாதமளவில் மட்டக்களப்பு, அம்பாறை, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இசைக்கருவியாக சுருதிப் பெட்டியும், தாளமும் வழங்கப்படுகிறது. இவ்வருடம்97 சுருதிப்பெட்டியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளமும் கொள்வனவு செய்யப்பட்டு அகில இலங்கை ரீதியாக இதுவரைப் பெற்றுக் கொள்ளாத அறநெறி பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன. அத்துடன் அறநெறி ஆசிரியர்களுக்கான சீருடைகள் மாவட்ட ரீதியில் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் யாழ்ப்பாணம், புத்தளம், கொழும்பு, கம்பஹா, மட்டக்களப்பு, திருகோணமலை, களுத்துறை, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான நூல்கள் அச்சிடல்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல்கள் அச்சிட்டு திணைக்களம் வழங்கி வருகிறது. அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சைவபோதினிபாலர் பிரிவு 5000 பிரதிகள் கீழ்ப்பிரிவு 5000 பிரதிகள், மத்திய பிரிவு 3000 பிரதிகள், மேற்பிரிவு 2000 பிரதிகள் வீதம் அச்சிட்டு மாவட்ட ரீதியாக ஒவ்வொரு அறநெறிப் பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இப்பாடநூல்களில் உள்ள பாடத்திட்டத்துக்கமையவே இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சை நடைபெறும். அத்துடன் இவற்றுக்கு மேலதிக நல்ல அறிநெறிக் கருத்துக்களைக் கூறும் ஔவையார் அருளிய தொகுப்பு "ஔவையார் அறிவுச் செல்வம்" எனும் பெயருடன் நூலாக அச்சிடப்பட்டு ஒவ்வொரு அறநெறி பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நூல்கள் கொள்வனவு

இந்து அறநெறி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களின் சமய அறிவினை மேம்படுத்தும் நோக்குடனும், இந்து இறுதிநிலை, இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கு மாணவர்களை தயாராக்கும் நோக்கினையும் கருத்தில் கொண்டு சிறந்த நூல்களை கொள்வனவு செய்து திணைக்களம் வழங்குகின்றது. இந்த வகையில் பின்வரும் நூல்கள் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

1. இந்து மக்களுக்கு ஒரு கையேடு - 500
2. சைவநற்சிந்தனை களஞ்சியம் - 500
3. சைவ கோயில்களும் மனித உடலும் - 500
4. ஆன்மீக மங்களம் அறுபது - 500
5. அறநெறி அமுதம் - 1000
6. மகாபாரதம் (ஐந்து தொகுகள்) - 500
7. ஆளுமை வளர்ச்சி - 125

இந்நூல்கள் மிகவும் சிறப்பாக செயற்பட்டு வரும் அறநெறி பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பண்ணிசை வகுப்புகள்

மாவட்டம்தோறும் சிறந்த பண்ணிசை ஆசிரியர்களை நியமித்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு பண்ணுடன், பஞ்சபுராணம் ஓதும் முறையும், திருப்பாடல்களை இசைக்கும் முறையும் கற்பிக்கப்படுகின்றது. இந்த வகையில் மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்பாணம் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இப்பண்ணிசை வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.

## ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு.

இந்து அறநெறி ஆசிரியர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் முகமாக நூல்கள் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. இவ் ஆசிரியர்களுக்கு ரூபா 2,000 வீதம் இக்கொடுப்பனவு வருடத்திற்கு ஒருமுறை வழங்கப்பட்டு வருகின்றது.

## அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான புதிய நியமனம் வழங்கல்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான புதிய நியமனம் 62 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜூன் மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை இவர்களுக்கான பயிற்சி செயலமர்வு திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைப் பெற்றது. பயிற்சி முடிவின் பின்னர் அவர்களுக்கான பதவி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. இவ்வுத்தியோகத்தர்கள் நாட்டின் பல்வேறு பிரதேச செயலகங்களிலும் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூவர் தமிழும் சைவநெறியும் ஆய்வரங்கத் தொடக்க வைபவம்















ஆய்வரங்கத்தின் தொடக்க வைபவத்தில் பணிப்பாளர் தொடக்க உரையை நிகழ்த்துவதையும், மேடையில் அதிதிகள் அமர்ந்திருப்பதனையும், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் உரையாற்றுவதையும் அவர்களுக்கான கௌரவிப்பினையும் ஆய்வரங்கச் சிறப்பு மலர் வெளியிட்டு வைப்பதனையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வரங்கு நிறைவுநாள் வைபவம்















நிறைவு நாள் வைபவத்தில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறுவதையும், கலைஞர்கள் கௌரவிக்கப்படுவதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து நாகரிகம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு - 2013

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாசனவியல் பயிலரங்கு















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஸ்கிருத மொழி வகுப்பு















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ சித்தாந்த வகுப்பு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருபூசை நிகழ்வுகள்





கிளிநொச்சி மாவட்ட அறநெறிப் பாடசாலைகள் ஒன்றியத்தினால் எழுச்சி பூர்வமாக கொண்டாடப்பட்ட திருநாவுக்கரச நாயனார் குருபூசை நிகழ்வின் போது பங்கு பற்றியவர்கள் மற்றும் ஊர்வலம்









04-05-2013 அன்று உடப்புக் கலாசார மண்டபத்தில் நடைப்பெற்ற திருநாவுக்கரச நாயனார் குருபூசை நிகழ்வின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து இளைஞர் யுவதிகளுக்கான ஆன்மீக எழுச்சிப் பட்டறை













திருக்கோதீஸ்வரம் சிவராத்திரி மண்டபத்தில் இடம் பெற்ற ஆன்மீக பயிற்சி பட்டறையில் உதவிப் பணிப்பாளர் திரு. ம சண்முகநாதன், திருமதி கு.ஹேமலோஜினி ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்துக் கொண்ட இளைஞர் யுவதிகளையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புண்ணிய கிராம செயற்திட்டம்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூவர் தமிழும் சைவநெறியும் ஆய்வரங்கத் தொடக்க வைபவம்








இந்தியப் பேராளர் திரு. வை. நாராயணசாமி அவர்களால் பேராசிரியர் சி. பதமநாதன், பணிப்பாள் ஆகியோர் கௌரவிக்கப்படுவதையும் அமர்வுகள் நடைபெறுவதையும் பார்வையாளர்களையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வரங்கு நிறைவுநாள் வைபவம்



30.06.2013ஆம் திகதி நடைபெற்ற நிறைவு விழாவில் செயலாளர் கடந்தவருட ஆய்வரங்கு கட்டுரைகளின் தொகுப்பான இந்து சமயமும் அவைதீக நெறிகளும் எனும் நூலினை வெளியீட்டு வைப்பதனையும் விழாவில் கலந்துக் கொண்ட பார்வையாளர்களையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பதவி நியமனக் கடிதம் வழங்கும் வைபவம்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிப்பூர நாளில் அம்பிகையைப் பணிவோம்

ஆடிப்பூர நன்னாளானது அம்பிகைக்குரிய பொன்னாளாகும். அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியான அன்னை ஆதிபராசக்தி அருள்மிகு அம்பிகையின் ருது சாந்தி வைபவம் வெகு விமரிசையாக இடம்பெறும் நாள் ஆடிப்பூர நாளாகும். இப்பரந்த நிலவுலகுக்கெல்லாம் தாயாக விளங்குகின்ற லோகமாதாவாகிய அன்னை தனது பேரருட் பிரவாகத்தை அகிலமெங்கும் அண்டசராசரங்களெல்லாம் பரிணமிக்கும்படி அருள் சுரக்கும் நாள் ஆடிப்பூரம்.

உலகைக் காக்கும் பரம்பொருளாக விளங்குகின்ற சிவபெருமான் ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங்கருணையினால் பஞ்சகிருத்திய நடனம் செய்கின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களையும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் முதலாகிய மூர்த்தங்களைக் கொண்டு செய்விக்கின்றார். ஆனால், இந்தத் தொழில்களைச் செய்வதற்கு சக்தி வேண்டும். சிவபெருமான் கூட சக்தியில்லாமல் இயங்க மாட்டார். மின்சக்தி பாய்ந்தால் தான் வெளிச்சம் கிடைக்கும். மின்சாரம் ஊடுறுவினால் தான் ஒலிவாங்கி இயங்கும். ஒலிபெருக்கி கேட்கும். வானொலியோ, தொலைக்காட்சியோ மின்சாரம் இல்லாமல் தொழிற்படமாட்டாது.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் மின்சாரம் மிக முக்கிய தேவையாகவும் அடிப்படைச் சக்தியாகவும் மிளிர்கின்றது. அதேபோல எல்லாவற்றுக்கும் மேலாக சகலதையும் ஆட்டிப் படைக்கும் ஆதி பராசக்தியாக அன்னையின் திருவருட்சக்தி விளங்குகின்றது.

"சக்தி இருந்தால் செய் இல்லையேல் சிவனே என்று இரு" என்ற மகாவாக்கியம் இங்கு நினைவுகூறத்தக்கது.

எல்லாவற்றையுமே பெண்ணாக உருவகிப்பது நம் முன்னோர் வழக்கமாகும். கல்விக்கு சரஸ்வதியையும், செல்வத்துக்கு இலக்குமியையும் வீரத்திற்கு துர்க்கையையும் வழிபாடியற்றுவது நமது சைவ சமயம். நிலத்தைக் கூட பூமாதேவியென்று பெண்ணாகத்தான் உருவகித்துள்ளனர். நித்திரையையும் நித்திராதேவி என்று தான் வர்ணிக்கப்படுகிறது. இப்படி சர்வமும் சக்தி மயமாக விளங்குவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

அம்பிகைக்குரிய தினம் வெள்ளிக்கிழமை. சுக்கிரவாரத்தில் அம்பாளைக் கண்டு தரிசிப்பவர்கள். சகல சௌபாக்கியங்களும் கைவரப்பெற்று பூலோகத்தில் சுகமாக வாழ்வர்.

"பூத்தவளே புவனம் பதின்னான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே" என்று அழகாக கூறுகின்றார் அபிராமிப்பட்டர். நம்மையெல்லாம் காத்து இரட்சிக்கின்றவளான அம்பிகையைச் சரணடைந்துவிட்டால் அவள் நம்மை கைவிடமாட்டாள். நம்பி அவளைக் கைத்தொழுதால் அம்பிகை நிச்சயம் அருள் புரிவாள். அவளது தனிப்பெருங்கருணையினால் தான் நாம் இப்பூவுலகில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். அம்பிகையை இந்த ஆடிப்பூர நாளில் தேடிச்சென்று நாடித் துதித்து நின்றால் கோடி சூரியபிரகாசம் வாழ்வில் கிட்டும் என்பது ஆன்றோரது நம்பிக்கை.

"தனந்தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா மனந் தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா இனந்தரும்..." என்று நாம் உண்மையான பக்தியுடன் அம்பிகையைப் பணிந்தால் கோடி நன்மை ஆடிப்பூரத்தில் நம்மைத் தேடி வரும். நாடித் தேடித் திரிவார்பால் ஞானத்தாயாக நின்று திருவருள் புரியும் அன்னையை நாம் அடிதொழுது அருள்பெற பூர்வஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

இந்தப்புண்ணிய பூமியில் மானிட ஜென்மம் எடுத்தவர்களாகிய நாம் இன்னல்கள், இடுக்கண்கள், துன்பங்கள், துயரங்கள் முதலியவற்றிலிருந்து விடுபடுவதற்காக அம்பாள் தோற்றம் எடுத்த நாள் தான் இந்த ஆடிப்பூரமாகும் என்று கருதுவாருமுளர். அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்.

ஆகவே ஆடிப்பூர நன்னாளில் அம்பிகையைக் குறித்து விரதம் அனுஷ்டித்து உபவாசமிருந்து அம்பாள் தோத்திரங்களைப் பராயணஞ் செய்து தேவியின் திருவருளுக்குப் பாத்திரமாகி பேரின்பப் பெருவாழ்வுக்கு வழிகோலுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்



தமிழர் வாழும் இடமெல்லாம் இன்று தழைத்துப் பெருகியிருக்கும் பிள்ளையார் வழிபாடு, தமிழ்நாட்டில் எந்தக்காலத்தில் தோன்றியதென்பது குறித்துப் பல ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. எனினும், அவற்றுள் எந்த ஆய்வும் திடமான முடிவுகளை முன்வைக்காமை பெருங்குறையே.

தமிழர் வரலாறு போதுமான சான்றுகளைக் கொண்டு தொடங்குவது சங்க காலத்திலிருந்துத் தான். கி.மு மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி இரண்டாம் நூற்றாண்டு வரை செழித்திருந்த இச்சங்க காலத் தமிழர் வரலாற்றை தெளிவுற அறிய இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் அகழ்வாய்வுச் சான்றுகளும் நன்கு உதவுகின்றன.

இக்காலகட்டத் தமிழர் சமய வரலாறு பல்துறை அறிஞர்களால் தொகுக்கப்பெற்றுள்ளது. சேயோன் (முருகன்), மாயோன் (திருமால்), வேந்தன் (இந்திரன்), வருணன், பழையோள் (கொற்றவை), முக்கண்ணன் (சிவபெருமான்), பாலராமன், உமை எனத் தமிழர் வழிபட்ட தெய்வங்களைச் சங்க இலக்கியங்கள் பல பாக்களால் அறிமுகப்படுத்தப் படுகின்றன.

சங்க இலக்கியங்களுள் காலத்தால் பிற்பட்டனவாகக் கருதப்படும் கலித்தொகை, பரிபாடல் ஆகிய இரண்டும் இறை சார்ந்த பல தொன்மங்களை விளக்குகின்றன. சங்க காலத்திற்குச் சற்று முற்பட்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தொல்காப்பியமும் தமிழர் வழிபாட்டுச் சிந்தனைகளை முன் வைக்கிறது. இவ்விலக்கியங்களில் ஒன்று கூட, மறை பொருளாகவேனும் பிள்ளையார் வழிபாட்டைப் பற்றி யாண்டும் குறிப்பிடாமை நினைவு கொள்ளத்தக்கது. "நல்லவும் தீயவும் அல்ல குவியிணர்ப் புல்லிலை எருக்கமாயினும் உடையவை கடவுள் பேணேம் என்னா" என்னும்புறநானூற்றுப் பாடலடி (106) கொண்டு, அதன் பொருளை உணர்ந்தும் உணரார் போல் சிலர் சங்க காலத்தில் பிள்ளையார் வழிபாடு இருந்ததாக கூறுவது பிழையாகும்.

"நல்லதென்றும், தீயதென்றும் வகைப்படுத்த இயலாத எருக்கம்பூ தரினும் தெய்வங்கள் அவற்றை மறுப்பதில்லை" எனும் பொருளமைந்த இப்பாடல், தெய்வங் களின் சார்பற்ற தன்மையைச் சுட்டுகிறதே தவிர, பிள்ளையார் வழிபாட்டை அல்ல. எருக்கம்பூ, சிவபெருமானால் விரும்பிச் சூடிக்கொள்ளப்பட்ட பூவாக அப்பர் பெருமானால் சுட்டப்படுவது நோக்க. பின்னாளிலேயே இது பிள்ளையாருக்கு உகந்த பூவாக மாற்றப்பட்டமை தெளிவாகும். எவ்வித அடிப்படைச் சுட்டலும் இல்லாத இப்பாடலடி கொண்டு, பிள்ளையார் வழிபாடு சங்ககாலந்தொட்டே இருந்தது எனக் கூறுவார் கூற்று எவ்விததானும் உண்மையாகாமை கண்கூடு.

தமிழ்நாடு முழுவதுமாய் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் இக்காலகட்டச் சான்றுகளை பலவாய்த் தந்திருந்தாலும், பிள்ளையார் வழிபாட்டை குறிக்கும் எத்தகு அடையாளங்களையும் இன்று வரை தரவில்லை. தமிழ்நாட்டின் இயற்கைக் குகைத்தளங்களில் காணப்படும் இக்காலகட்ட தமிழிக் கல்வெட்டுக்களும் இது குறித்து மௌனமாகவே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலத்தை அடுத்தமைந்த மூன்று நூற்றாண்டுகளில் (கி.பி 200 - கி.பி 500) தமிழ்நாடு தமிழர் கையிலிருந்து மாறிப் பல்லவர், களப்பிரர் வயமாயிற்று. இக்காலகட்ட வரலாற்றை அறிய பல்லவர்களின் பிராகிருத, வடமொழிச் செப்பேடுகளும் இலக்கியங்களும் உதவுகின்றன.

பல்வேறு அறிவியல் பூர்வமான சான்றுகளின் அடிப்படையில் தமிழ்நாடு, இலங்கை, ஜப்பான் சார்ந்த அறிஞர் பெருமக்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் முதலிய இலக்கியங்களை இக்கால கட்டம் சார்ந்தவை என அடையாளப்படுத்தியுள்ளனர். இவ்விலக்கியங்களுள், தமிழர் சமய வரலாறு குறித்து அரிய பல தரவுகளை உள்ளடக்கியிருக்கும் சிலப்பதிகாரம் புகாரிலும் மதுரையிலும் இருந்த இறைக் கோயில்களை வகைப்படுத்தியும் வரிசைப் படுத்தியும் காட்டுகிறது.

பிறவா யாக்கை பெரியோன் (சிவபெருமான்), அறுமுகச் செவ்வேள் (முருகன்), வாலியோன் (பலராமன்), நெடியோன் (திருமால்), இந்திரன், கொற்றவை, உமை, கதிரவன் எனப் பல்வேறு முதன்மைத் தெய்வங்களைச் சிலப்பதிகாரம், தருக்கோட்டம், வெள்யானைக் கோட்டம், வேற்கோட்டம், வச்சிரக் கோட்டம் என இறை சார்ந்தவற்றிற்கு அமைந்த கோயில்களையும் காட்டுகிறது.

சிறுதெய்வவணக்கம்பற்றியும்விரித்துரைக்கும் இவ்விலக்கியத்தில் பேரூர் சார்ந்தோ, சிற்றூர் சார்ந்தோ எவ்விடத்தும் பிள்ளையார் வழிபாடு பேசப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் பூலாங்குறிச்சி கல்வெட்டு, கோயில்களைப் பற்றியும் இறைவழிபாடு பற்றியும் கூறினாலும் பிள்ளையார் பற்றிய குறிப்புகளைக் கொண்டிருக்காமை கருதத்தக்கது. இக்காலப் பகுதிக்கு உரியனவாக அடையாளம் காணப்பட்டிருக்கும் வட்டெழுத்துக் கல்வெட்டுகளிலும் பிள்ளையார் சுட்டல் இல்லை.

பிள்ளையாரை முதன் முதலாக அறிமுகப்படுத்தும் இலக்கியங்கள் அப்பர், சம்பந்தர் திருமுறைகளே. இந்த ஆறு திருமுறைகளிலும் அப்பரும் சம்பந்தரும் பிள்ளையாரைப் பற்றி மிகக் குறைவான இடங்களிலேயே குறிப்புத் தருகின்றனர். இப்பெருமக்களின் காலம் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம் என அறிஞர் கொள்வர்.

இக்குறிப்புகளால், பிள்ளையார் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவர் என்பதையும் கயாசுரனைப் போரில் வென்றவர் என்பதையும் அறியமுடிவதுடன், அவரது தோற்றம் பற்றிய வர்ணனைகளையும் ஓரளவிற்குப் பெறமுடிகிறது.

உமை பெண் யானையின் வடிவம் கொள்ள, சிவபெருமான் ஆண்யானையின் வடிவம் கொண்டு இணைந்ததன் பயனாய்ப் பிறந்தவர் பிள்ளையார் என்பதை இரண்டு பதிகங்களால் விளக்குகிறார் சம்பந்தர். தம்மை வழிபடும் அடியவர் தம் இடர்களைத் தீர்ப்பதற்காக இறைவன் அருளிய கொடையே கணபதி என்று பிள்ளையாரின் பிறப்பிற்கு காரணம் காட்டும் சம்பந்தர் (சம் 1:123:5, 126:6), "தந்த மதத்தவன் தாதை" (1:115:2) "மருப்புறுவன் தாதை" (1:117:8) "கரியின் மாமுகமுடைய கணபதி தாதை" (2:232:3) என்று சிவபெருமானைச் சிறப்புச் செய்யுமாறு பிள்ளையாரின் தோற்றம் காட்டுகிறார்.

நாவுக்கரசர், சம்பந்தரின் கூற்றைக் "கைவேழ முகத்தவனைப் படைத்தார்" (6:53-4) "வினாயகர் தோன்றக் கண்டேன்" (4:2:5) "ஆனைமுகற்கு அப்பன்" (6:74:7) "கணபதி எனும் களிறு" (4:2:5) எனும் பல்வேறு தொடர்களால் உறுதிப்படுத்துகிறார்.

கயாசுரனைக் கொல்லச் சிவபெருமான் பிள்ளையாரைப் பயன்படுத்திக் கொண்ட தகவலைத் தரும் நாவுக்கரசர், அதற்காகவே பிள்ளையார் பிறப்பிக்கப்பட்டார் எனக் கருதுமாறு பாடல் அமைத்துள்ளார். (6:53:4)

முருகப் பெருமானைப் பற்றி நாற்பத்தேழு இடங்களில் விதந்தோதும் இவ்விரு சமயக் குரவரும், பிள்ளையாரைப் பற்றி மிகக் குறைவான அளவிலேயே குறிப்புகள் தந்திருப்பதை நோக்க, இவர்தம் காலத்திற்குச் சற்று முன்னதாகவே பிள்ளையார் வழிபாடு தமிழ்நாட்டில் கால் கொண்டதாக கருதலாம்.

தமிழ்நாட்டில் இன்றைக்கும் காணப்படும் இறைக் கோயில்களுள் காலத்தால் பழமையானவை குடைவரைகளே. குன்றுகளை குடைந்தும், பாறைகளை செதுக்கியும் இத்தகு குடைவரைகள் அமைக்கப்பட்டன. வடதமிழ்நாட்டில் இத்திருப்பணியைத் தொடங்கியவர் பல்லவப் பேரரசனான முதலாம் மகேந்திரவர்மர். இவர் குடைவரைகள் எவற்றிலும் பிள்ளையார் சிற்பம் இடம்பெறவில்லை.

திருக்கழுகுன்றத்தில் உள்ள ஒருகல் மண்டபம் முதலாம் நரசிம்மவர்மரின் திருப்பணியாக் கருதப்படுகிறது. இதிலும் பிள்ளையாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமில்லை. இராஜசிம்மரின் குடைவரைகளிலும் பிள்ளையாரின் சிற்பம் இறைவடிவமாகக் காட்டப்படவில்லை என்றாலும், மாமல்லபுரம் இராமநுஜர் குடைவரையின் பூதவரியில் பிள்ளையார் இடம் பெற்றுள்ளார்.

இராஜசிம்மர் பணியான மாமல்லபுரம் தருமராஜர் ரதத்தின் பூதவரியிலும் பிள்ளையார் எனக் கொள்ளத்தக்க வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. இராஜசிம்மரின் கற்றளிகளில் கூடுகளிலும் கோட்டங்களிலும் பிள்ளையார் இடம்பெறத் தொடங்குகிறார்.

சிராப்பள்ளியிலுள்ள கீழ்குடைவரை, சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பட்டூர்க் கயிலாசநாதர் கோயில், செங்கற்பட்டு மாவட்டம் வல்லத்திலுள்ள கந்தசேனரின் குடைவரை ஆகியவற்றில் பிள்ளையார் கோட்டத் தெய்வமாகக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்காலக்கட்டத்தைக் கி.பி எட்டாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியாகக் கொள்ளலாம். இதனால் வடதமிழ்நாட்டு இறைக்கோயில்களில் பிள்ளையாரின் சிற்பங்கள் சம்பந்தர், அப்பர் காலத்திற்கு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்குப் பிறகே இடம்பெறத் தொடங்கியமை தெளியப்படும்.

தென்தமிழ்நாட்டில் பாண்டியர், முத்தரையர் கைவண்ணமாகப் பிறந்த குடைவரைகள் பலவற்றில் பிள்ளையாரின் சிற்பம் காணப்படுகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்கது பிள்ளையார் பட்டி அங்குள்ள பிள்ளையார் இன்றைக்கு முதன்மைத் தெய்வமாக வழிப்படப்பட்டாலும் உருவான் காலத்தில் சிவபெருமானுக்கான குடைவரையின் முன் பக்கவாட்டில் விரியும் சுவரில் கோட்டத் தெய்வமாகச் செதுக்கப்பட்டவரே ஆவார். இக்குடைவரையில் இடம் பெற்றுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு "எக்காட்டூர்க் கோன் பெருந்தசன்" எனும் பெயரைத் தருகிறது. இக்கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இதை ஆறாம் நூற்றாண்டென்பர் அறிஞர்கள்.

இக்கருத்து ஏற்புடையதாயின் பிள்ளையார் பட்டிக் குடைவரையின் காலமும் ஆறாம் நூற்றாண்டாகிவிடும். எனில் தமிழ்நாட்டின் காலத்தால் முற்பட்ட பிள்ளையார் சிற்பமாகப் பிள்ளையார்பட்டிக் குடைவரைப் பிள்ளையாரையே கொள்ள வேண்டிவரும். குடைவரையின் அமைப்பு சிற்பங்களின் செதுக்கு நேர்த்திக் கொண்டு இக்குடைவரையின் காலத்தை ஏழாம் நூற்றாண்டாக கொள்வோரும் உண்டு. இரண்டில் எதை ஏற்பினும் இப்பிள்ளையாரே தமிழ்நாட்டின் காலத்தால் முற்பட்ட பிள்ளையார் என்பதில் ஐயமில்லை.

திருமலைப்புரம், செவல்பட்டி, தேவர்மலை, அரிட்டாபட்டி, மலையக் கோயில், திருக்கோளக்குடி, திருப்பரங்குன்றம், மலையடிப்பட்டி, குன்றக்குடி, கோகர்ணம் முதலிய பல பாண்டியர், முத்தரையர் குடைவரைகளில் பிள்ளையார் சிற்பம் இடம் பெற்றுள்ளமையை நோக்க, தமிழ்நாட்டில் பிள்ளையார் வழிபாடு காலூன்றிய முதல் இடமாகப் பாண்டிய மண்ணையே கொள்ள வேண்டியுள்ளது. கி.பி. ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளில் சிராப்பள்ளிக்குத் தெற்கே காலூன்றிப் பரவிய இப்பிள்ளையார் வழிபாடு எட்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தான் வட தமிழ்நாட்டுக்குள் குடிபுகுந்தது.

எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகும் தமிழ்நாட்டுச் சமய வரலாற்றில் முருகப் பெருமானுக்குக் கிடைத்த இடம் பிள்ளையாருக்குக் கிடைக்கவில்லை என்பதே உண்மை. பல்லவர், பாண்டியர், முத்தரையர் குடைவரைகளில் கோட்டத் தெய்வமாக இடம்பெற்ற பிள்ளையார் தொடக்க கால பல்லவர் கற்றளிகளில் ஆங்காங்கே இடம் பெற்றாலும், அபராஜிதர் கால கற்றளிகளில் தான் உள்மண்டபத் தென்கோட்டத் தெய்வமாக நிலைபெற்றார். இந்நிலைப்பேறு சோழர்காலத்தில் உறுதியாக்கப்பட்டது.

சோழர்காலக் கற்றளிகளின் திருச்சுற்றில் சுற்றாலைக் கோயில்கள் உருவானபோது எண்பரிவாரத்துள் ஒன்றாகப் பிள்ளையாருக்கும் இடம் கிடைத்தது.

திருச்சுற்றின் தென்மேற்கு மூலை பிள்ளையாருக்கு உகந்த இடமாக ஒதுக்கப்பட்டு அவருக்கெனத் தனி திருமுன் அமைக்கப்பட்டது. இத்தகு பிள்ளையார் திருமுன்களைச் சோழர் கற்றளிகளிலும் பின்னால் வந்த பிற மரபுப் பேரரசு கால கற்றளிகளிலும் இன்றும் காணலாம்.

கோட்டத் தெய்வமாகவோ, சுற்றாலை தெய்வமாகவோ மட்டுமே அமைந்த பிள்ளையாருக்குத் தனிக்கோயில் அமைக்கும் பழக்கம் மிகப்பிற்பட்ட காலத்திலேயே ஏற்பட்டது. தமிழ்நாட்டுக் கோயில்களில் கிடைக்கும் பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுக்களும் அதையே உறுதிசெய்கின்றன.

**நன்றி**
**கலாநிதி இரா. கலைக்கோவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் பார்வையில் பணியாளர் கடமைகள்

**– பெரு. உடையப்பன் –**

ஒரு சிறந்த நிர்வாக அமைப்பே ஒரு சிறப்பான ஆட்சியை அளிக்க முடியும். அமைச்சர் முதல் அலுவலக ஊழியர் வரை அனைத்துப் பொறுப்புக்களிலும் ஆற்றல் வாய்ந்தவர்கள் அமரும் போதே திறம் வாய்ந்த நிர்வாகம் நடைபெற முடியும். வள்ளுவர் வாழ்ந்தக் காலம் மன்னராட்சிக் காலம். எனவே அவர் கூறும் ஆட்சிமுறை பற்றிய வழிமுறைகள் மன்னராட்சியை ஒட்டி மலர்ந்தவைகள். ஆயினும் அந்நெறிமுறைகள் இன்றைய மக்களாட்சி நிர்வாகத்திற்கும் நிறுவன மேலாண்மைக்கும் முழுமையாகப் பொருந்தி வருகின்றன. அவற்றுள் பணியாளர் கடமைகள் குறித்த வள்ளுவரின் கருத்தோட்டங்கள் மட்டும் இங்கு ஆராயப்படுகின்றன.

## அமைதி காத்தல்

பணியாளன் என்பவன் உயரதிகாரிகளின் ஆணைகளைச் செயற்படுத்தும் ஊழியனே தவிர, முடிவுகளை முடிவு செய்யும் தலைவன் அல்ல. எனவே அலுவலகங்களில் தேவையற்ற சொல்லாடல்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அலுவலகத்தில் பணிபுரியும் சக பணியாளர்களைப் பற்றிக் கவலைப்படாமல் பேசமுற்பட்டால் தேவையற்ற சிக்கல்கள் தோன்றி அதன்வழி நிர்வாகச் செயல்பாடுகளே தடைப்படக் கூடும். உயரதிகாரிகளிடம் பேசும்பொழுது அளவறிந்து பேசப் பழக வேண்டும். இதனை வள்ளுவர்,

**அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தெகையறிந்த தூய்மை யவர் (711)**

எனக் குறிப்பிடுகிறார். நல்ல கருத்து என்றாலும் அடுத்தவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுகின்ற வகையில் சொல்லில் தெளிவும், உண்மையும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். சிலநேரங்களில் உண்மையிருப்பினும் சொல்லும் முறை மனக்கசப்பை ஏற்படுத்தி எதிர்ப்பைக் கிளப்பிவிடும். எனவே பணியாளன் அமைதி காப்பதும் அளந்து பேசுவதும் அவசியமாகும்.

## அடக்கம் காத்தல்

பணியாளன் தனக்குரிய பதவிக்குத் தன்னை முழுமையாகத் தகுதியாக்கிக் கொள்ள மனம், மொழி, செயல்களை அடக்கி ஆளத் தெரிந்திருக்க வேண்டும். பணமும் பதவியும் பெரிதென எண்ணி அடக்கத்தை மறுத்தால் அவர் வாழ்வு இருளடையும். பொருளிருந்தால் அறம் செய்யலாம். அடக்கம் இருந்தாலோ ஒருவனுக்கு அதுவே அறமாகி விடுகிறது. நிறைந்த அறிவுடையோர் எப்போதும் அடங்கி வாழ்கின்றனர். "நிறை குடம் தளும்பாது" என்னும் முதுமொழியும் இதைத்தான் எடுத்துரைக்கிறது. ஆரவாரமற்ற செயல்பாடுகளே ஒரு பணியாளனின் பதவி உயர்விற்கு வழிகோலும்.

**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம் அதனின்
ஊங்குஇல்லை உயிர்க்கு (122)**

என்பது வள்ளுவர் வாக்கு. கோபதாபம், அன்பு, சோகம், போன்ற உணர்ச்சிகள் மிகும் போது அடக்கம் அரிதாகிறது. தெளிந்த நெஞ்சையும் அவை திரையிட்டு மறைக்கின்றன. உணர்ச்சிகளின் அலைகழிப்பில் சிந்தனை செயற்பட மறுக்கும். எனவே உணர்ச்சிகள் கூத்தாடும்போது பணியாளன் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தி அடக்கத்தை மேற்கொள்ள வேண்டும். 'அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்' என்பது தானே வள்ளுவம்?

## அழுக்காறு நீக்கல்.

இன்றைய அரசியல் முறையில் அமைதியான சூழ்நிலை அலுவகங்களில் இருப்பதில்லை. அலுவலகம் என்பது பல்வேறு தகுதி நிலைகளில் பணிபுரிவோர் நிறைந்த இடம். இந்த அமைப்பில் பணியாளர்களின் நடுவே கருத்து முரண் தோன்றுவது தவிர்க்க முடியாதது. ஆனால் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து முரண்பாடே பல இடங்களில் அழுக்காறு என்னும் தீய சக்தியை உண்டாக்கி விடுகின்றது. பதவி, பக்கபலம், பணம், சாதி முதலியவற்றின் துணையிருந்தால் அழுக்காற்றின் ஆதிக்கம் மேலும் பெரிதாகிறது.

**அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்**
**தீயுழி உய்த்து விடும். (168)**

என அழுக்காறு குறித்து எடுத்துரைக்கின்றார் திருவள்ளுவர். அழுக்காறு நெஞ்சிலே குடியேறினால் பணியாளர் ஒற்றுமை குலைந்து பணிபுரியும் நிறுவனத்தில் வேற்றுமை வளர்ந்து. நிறுவனமே அழிவுப் பாதையில் காலெடுத்து வைக்க நேரிடும். எனவே ஒவ்வொரு பணியாளரும் நெஞ்சில் அழுக்காறு தோன்றாதவாறு உயர்ந்த நெறியோடு வாழ முன் வர வேண்டும். அழுக்காறு இல்லாத இயல்பை ஓர் ஒழுக்க நெறியாகக் கொள்ள வேண்டும் என்பதே வள்ளுவரின் குறிக்கோள்.

## தீ நட்பு நீக்கல்

பணிபுரியும் இடங்களில் நட்பு மலர்வது இயற்கை. செய்கின்ற பணியெல்லாம் பாராட்டப்படுவதோடு பாதுகாக்கப்படவும் வேண்டு மென்றால் உண்மையான நண்பர்கள் தேவை. சிறந்த நட்பை நாம் பழகித் தான் பெற வேண்டும் என்பதில்லை. மதிப்புணர்ச்சியும் அன்பும் நிலவிய நெஞ்சில் நட்புத் தானாய் வந்து சேரும். ஆனால் இன்றைய நிலையில் உண்மையான நட்பை அடையாளம் காண்பதுதான் பெரிய சிக்கல். போலி நட்பு ஆரவாரத்தோடு அமைந்திருக்கும். பயன் உள்ளபோது உறவாடி, பயனற்றபோது விலகி விடும். உள்ளம் பொருந்தாமல் உறவாடுவோரால் பணிபுரியும் இடங்களின் சுற்றுச் சூழல் மாசுபடும். என்வேதான் வள்ளுவப் பெருமான்,

**கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு**
**சொல்வேறு பட்டார் தொடர்பு (819)**

எனப்பாடி சொல்வது ஒன்றாகவும், செய்வது வேறொன்றாகவும் உள்ளவர்களின் நட்பை தவிர்க்க வேண்டுமென்கிறார். எனவே, ஒரு பணியாளன் தன் கடமையை நிறைவேற்ற வேண்டுமானால் தீ நட்பை நீக்கல் வேண்டும்.

## செயல் திறன் வளர்த்தல்

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அந்நிறுவனப் பணியாளர்களின் செயல்திறனைப் பொறுத்தே அமையும்.பணியாற்றத் தொடங்குமுன் நன்றாகச் சிந்தித்து அன்று மேற்கொள்ள வேண்டிய பணிகளை முடிவுகட்ட வேண்டும். பின்னர் காலம் தாழ்த்தாமல் துணிவோடு செயல் புரியத் தொடங்க வேண்டும். ஒரு முடிவிற்கு வந்தபின்னும் துணிவு கொள்ளாமல் மனம் சோர்ந்து போனால் செயல் உருப்பட வழியில்லை. காலம் தாழ்த்தத் தாழ்த்த எதிர்பாராத திசையிலிருந்து இடையூறுகள் ஏற்படும். எனவே காலத்தாழ்ச்சி செயல்பாட்டிற்குத் தடைவிதிக்கும். இதனை வள்ளுவர்,

**சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு**
**தாழ்ச்சியுள் தங்குதல் தீது. (671)**

என விளக்குகிறார். அவசரப் பணியில் சோர்வும், அவசியமற்றப் பணியில் விரைவும் நிர்வாகத்திற்கு ஏற்றது அல்ல. பயன் உள்ள பணி என்றால் காலம் பார்க்காமல் காரியம் ஆற்றுவதே ஒரு நல்ல பணியாளனின் பண்பாக இருக்கமுடியும். பயன் உள்ள பணிகளில் ஈடுபாட்டையும், ஆர்வத்தையும் வளர்த்துக் கொள்வதே பணியாளனின் முதற்கடமையாக இருத்தல் வேண்டும்.

## பழகும் பாங்கு

அறிவும் ஆற்றலும் பெற்ற பணியாளனுக்கு உயர் அதிகாரிகளோடு பழகுவதற்கு மிகுதியாக வாய்ப்பு ஏற்படும். அப்போது அவரின் இயல்பறிந்து நடந்துக் கொள்ளவில்லையென்றால் வீணாக அவரின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். எனவே வாய்ப்புக் கிடைக்கின்றதே என்பதற்காக அதிகமாக நெருங்கி விடவும் கூடாது. அதேநேரத்தில் அதிக தூரம் விலகிவிடவும் கூடாது. அவர்களிடம் அதிகம் நெருங்கியும் நெருங்காமலும் பழக வேண்டும். தூர விலகினால் பயன் விளையாது. அதிகம் நெருங்கினால் பழியாகவும் நேரிடும். ஆதலால் நெருப்போடு பழகுவது போல் சீராகப் பழகுதல் பணியாளருக்கு நல்லது. இதனை

**அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல்வேந்தர் சேர்ந்தொழுகு வார். (691)**

என்னும் குறள் எடுத்துக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கினால் சுடுகின்ற தீ, விலகி நிற்பவர்களுக்கு வெப்பம் தருவதில்லை. குளிர்காய்ந்து பயன் காணும் ஒருவன் தீயை நெருங்காமல் நெருங்கி அருகில் இருப்பது போல் உயர் அதிகாரிகளிடம் பழகக் கற்றுக் கொண்டால் நன்மையும் உண்டாகும்.

## குறிப்பறிந்த செயல்பாடு.

பணியாளர்களின் கடமையில் குறிப்பறிதலும் ஒன்றாகும். இதுவே பணியாளனை உயர்ந்த நிலைக்கு கொண்டுச் செல்ல உதவும். பணியாளன் உயரதிகாரிகள் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளை உணர்ந்து அதற்கேற்றாற் போல் பணியாற்றுவது மிகவும் அவசியம். உயர் அதிகாரிகளின் பக்கத்தில் பலர் எப்பொழுதும் இருந்துக் கொண்டே இருப்பர். அப்பொழுது அவர் எல்லாச் செய்திகளையும் நேரடியாகக் கூற இயலாது. அச்சமயங்களின் அவர் தமது தேவையைக் குறிப்பால் மட்டுமே உணர்த்த முடியும். அச்சமயங்களின் பணியாளர்கள் அவரின் குறிப்பை உணர்ந்து விரைந்து செயலாற்ற வேண்டும். அதனை வள்ளுவப் பெருந்தகை,

**கூறாமை நோக்கிக் குறிப்புஅறிவான்**
**எஞ்ஞான்றும் மாறாநீர் வையக்கு அணி (701)**

என்று விளக்குகின்றார். இவ்வாறு முகத்தின் குறிப்பைக் கொண்டு உள்ளத்தின் தேவையைக் கண்டறிந்து வினையாற்றுபவன் சிறந்த பணியாளனாக மதிக்கப்படுவான்.

## முடிவுரை

- பணியாளன் அமைதி காப்பதும், அளந்து பேசுவதும் அவசியம்.
- உணர்ச்சிகளை அடக்கத் தெரிந்தவனே உயர்ந்த பணியாளன்.
- அழுக்காறு இல்லாத நெஞ்சோடு பணிபுரிவதே ஒழுக்கநெறி
- பாராட்டுக்குரிய பணிபுரிய ஒருவன் தீ நட்பைத் தவிர்க்க வேண்டும்.
- எடுத்த பணிகளில் ஈடுபாடு கொள்வதே திறம் வாய்ந்த பணிக்குரிய திசையாகும்.
- நெருங்காமல் நெருங்கி பழகுவதே பணியாளன் உயர்வுக்கு வழி.
- குறிப்புணர்ந்த செயல்பாடே பணியாளனின் குறை போக்கும் குணமாகும்.

இவையே வள்ளுவத்தில் இருந்து பணியாளன் பெற்றுக் கொள்ளும் பெருமைக்குரிய கடமைகளாகும்.

## துணை நூல்கள்.


1. டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, திருக்குறள். சிந்தனைகள், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1985.
2. முதறிஞர் வ. சுப. மாணிக்கம், திருக்குறட் சுடர், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1987
3. நா. அருணாசலம் (ப.ஆ) திருக்குறள், தமிழ் சான்றோர் பேரவை, சென்னை 1995


### *அய்யன் வள்ளுவப்பெருமான் அருளிய நூல்கள்*

திருவள்ளுவர், திருக்குறள் உட்பட 16க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

| | |
|---|---|
| 1. ஞானவெட்டியான் - 1500 | 2. திருக்குறள் - 1330 |
| 3. ரத்தினச்சிந்தமணி - 800 | 4. பஞ்சரத்தினம் - 500 |
| 5. கற்பம் - 300 | 6. நாதாந்த சாரம் - 100 |
| 7. நாதாந்த திறவுகோல் - 100 | 8. வைத்திய சூஸ்திரம் - 100 |
| 9. கற்ப குருநூல் - 50 | 10. முப்பு சூஸ்திரம் - 30 |
| 11. வாத சூஸ்திரம் - 16 | 12. முப்புக்குரு - 11 |
| 13. கவுன மணி - 100 | 14. ஏணி ஏற்றம் - 100 |
| 15. குருநூல் - 51 | 16. சிற்ப சிந்தாமணி (ஜோதிட நூல்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பாடுவான்

## - வசந்தா வைத்தியநாதன் -

இவர் பாணர் குடியிலே வித்துவம் தோன்றிய திருமால் பக்தர். திருகுறுங்குடிக்கருகிலுள்ள முனிக்கிராமம் என்ற சிற்றூரில் அவதரித்தவர். பகவானைப் பாடும் பகவத் தோத்தமர். இவர்தாம் நம் பாடுவான்.

இவர் கையிலே வீணையை ஏந்திக் கொண்டு புண்ணிய தினமான ஏகாதசிதோறும் திருக்குறுங்குடி என்னும் திவ்வியத் திருத்தலத்திற்கு வந்து வைணவ நம்பியை சேவிக்கும் அவன் புகழ்பாடும் வழக்கமுடையவன். நம்பாடுவானைப் பார்ப்பதற்கு முன்னால் அவரது உள்ளத்தில் ஆழப்பதிந்த திருக்குறுங்குடிப் பெருமானைப் பற்றித் தெரிந்துக் கொள்வோம்.

நாங்குனேரியிலிருந்து தென்மேற்கே எட்டுக்கல் தொலைவில் உள்ள அழகிய வைணவத் திருத்தலம் திருக்குறுங்குடி மகேந்திர மலையடி வாரத்திலிருந்து இரண்டு மைல்கள் தொலைவில் நம்பி என்னும் ஆற்றின் கரையில் அமைந்துள்ளது இக்குறுங்குடிப் பதி.

இத்தலத்திற்கு வாமன க்ஷேத்திரம் என்ற பெயரும் உண்டு. வாமனன் என்றால் குறுகிய வடிவினன் என்பது பொருள். திருமால் எடுத்த பத்து அவதாரங்களில் வாமனவதாரமும் ஒன்று. குள்ள வாமனனே விண்ணையும் இடரும் திரிவிக்கிரமனாக வளர்ந்தான். இத்திருத்தலத்தில் குறளனாக, வாமனனாகத் தோன்றிய காரணத்தி னால் குறுங்குடியே திருக்குறுங்குடியாகியது.

இப்பதியில் பெருமாள் வைணவ நம்பி என்னும் திருநாமத்துடன் எழுந்தருளியுள்ளார். தாயார் குறுங்குடிவல்லியாக கருணை பூத்து விளங்குகின்றாள்.

இப்பதியில் வைணவ நம்பி, நின்ற நம்பி, இருந்த நம்பி, கிடந்த நம்பி, குறுங்குடி நம்பி, மலைமேல் நம்பி என ஐந்து திருமேனிகளை உடையவராக எழுந்தருளியுள்ளார். முதல் மூன்று திருமேனிகளும் ஆலயத்தின் உள்ளேயே இருக்கிறது. இச்சந்நிதிகளுக்கு இடையில் சிவபெருமான் சந்திதி உள்ளது. குறுங்குடி நம்பியான வாமன நம்பி திருபாற்கடல் தீர்த்தக் கரையில் எழுந்தருளி அருள் புரிகின்றார். மலைமேல் நம்பி சந்நிதி சீனிவாசன் சந்நிதியாக மகேந்திர மலையின் மீது உள்ளது. பக்தர்கள் முடிப் பிரார்த்தனையை இவருக்கே நிறைவேற்றுவர்.

இத்திவ்விய திருத்தலத்தை திருமங்கை யாழ்வார், நம்மாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகிய நால்வரும் மங்களாசாசனம் செய்தருளிய நாற்பது திவ்விய பாசுரங்கள் உள்ளன. அவற்றுள் திருமங்கையாழ்வாரின் ஒரு பாசுரத்தை சிந்தையுடன் கொள்வோம்.

"வல்லிச் சிறு நுண்ணிடை யாரிடை
நீர்வைக்கின்ற
அல்லல் சிந்தை தவிர அடைமினடியீர்காள்
சொல்லில் திருவே யனையார்
கனிவாயெயிறொப்பான்
கொல்லை முல்லை மெல்லரும்பீனும்
குறுங்குடியே."

இதுபோன்று அமிழ்தூறும் அழகிய பாசுரங்களைக் கொண்டது.

திருமங்கையாழ்வார் தமது அந்திம காலத்தை இத்தலத்திலேயே கழித்தார் என்று குருபரம்பரை வரலாறு கூறும். திருவரங்கநாதரே திருமங்கையாழ்வாரை இங்கே அனுப்பினார் என்றும் கூறுவர். நம்மாழ்வாரின் தாய், தந்தையர் மக்கட் பேறு இன்மையால் இப்பகுதிக்கு வந்து நம்பியைச் சேவித்து நிற்க, நம்பி அர்ச்சகர் மீது ஆவிபாவித்து "நாமே பிள்ளையாக பிறக்கின்றோம்" என்று அருள, நம்மாழ்வாரின் திரு அவதாரம் நிகழ்ந்தது. வைணவர்களுக்குத் தெற்கு வீடாகத் திகழ்வது இத்திருப்பதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பதியிலுள்ள வைணவ நம்பியின் திருக்கோயில் மிகப்பெரியதும் பழமை மிகுந்ததுமாகும். திருக்கோயிலின் பிரதான கோபுர வழியாக உட்சென்றால் மட்டை அடி மண்டபமும், அதனையடுத்து மண்டபமும் உள்ளன. இம்மண்டபங்களிலே காணப்படும் சிற்பங்களின் கலைப்பொலிவை வர்ணிக்க வார்த்தைகளே யில்லை. அத்தனையும் ஜீவசிற்பங்கள். உள்ளே கொடிமர மண்டபமும் அதன் வடபுறத்தில் மணவாள மாமுனிகளின் சந்நிதியும் அமைந்துள்ளன. ஆலயத்தின் கொடிமரம் சிறிது வடக்குப்புறமாக விலகியுள்ளதும் நம்பாடுவான் என்ற பக்தனுக்காகத் தான். இச்சம்பவத்தை நம்பாடுவானின் வரலாற்றைக் காணும் போது காணலாம்.

கொடிமர மண்டபத்தைக் கடந்து உள்ளேச் சென்றால் நாம் காண்பது குலசேகர மண்டபம். இம்மண்டபத்தில் நின்றவாறே பஞ்சகேதக விமானத்தின் கீழ் கருவறையில் எழுந்தருளியிருக்கும் மூலவரை சேவிக்கலாம்.

மூலவர் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இவரோடு உபய நாச்சியார், மார்க்கண்டேயர், பிருகு முனிவர் ஆகியோரும் எழுந்தருளி அருள் பாலிக்கின்றனர். அர்த்த மண்டபத்தில் வைணவ நம்பி என்ற திருநாமம் கொண்ட உற்சவர் உபயநாச்சியார் நீளாதேவி, குறுங்குடிவல்லித் தாயார் ஆகியோரது உற்சவமூர்த்திகளும் உள்ளனர்.

தாயாருக்குத் தனிச் சந்நிதி உள்ளது. மேலும் இக்கோயிலில் இலட்சுமி வராகர், இலட்சுமி நரசிம்மர், தசாவதார மூர்த்தங்கள், சீனிவாசன், ஆண்டாள் ஆகியோரையும் ஆனந்தமாக தரிசிக்கலாம்.

இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய வைணவ நம்பியாகிய பெருமாளின் மீது ஆராக்காதல் கொண்டவன் தான் நம்பாடுவான் என்ற பக்த சிரோமணி. அவன் குறுங்குடியை அடுத்த மகேந்திர மலையின் மீது வாழ்ந்த பாணர்குடி மகன்களில் ஒருவன். இயற்கையாகவே பாணர்கள் இசையறிவு மிக்கவர்கள். அரசர்களையோ அல்லது பெருவள்ளல்களையோ நாடிச்சென்று அவர்களை புகழ்ந்துப் பாடி தமது இசைப்புலமையால் பொருள் பெற்று வாழும் சிறப்பு மிக்கவர்கள். இவர்களது இந்த இசைநலத்தால் புலமையால் சங்க இலக்கியங்களிலும் இடம் பிடித்துக் கொண்ட சிறப்பு மிக்கோர். பத்துப்பாட்டெனும் சங்கத் தொகை நூல்களுள் பாணர் சிறப்புரைக்கும் பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாட்டுப் படையும் அடங்கியுள்ளது.

நம்பாடுவான் சிறந்த பக்தன். இசை வல்லோன். ஒவ்வொரு நாளும் வைணவ நம்பியை சேவித்து அவரது புகழை யாழில் இசைத்து மகிழும் நியமம்மிக்கவன். பாணர் குடியினர் ஆலயத்திற்குள் செல்லக் கூடாது. ஆகையால் ஆலயத்தின் புறத்திலிருந்தே திருமேனி வண்ணம் கண்டு மகிழ்பவன். அப்படியொருநாள் கோயிலுக்கு வெளியே நின்று தரிசனம் புரிகையில் பெருமாளின் முழுமையான திருமேனி அழகைக் காண முடியாதவாறு கொடிமரம் மறைத்தது. நம்பாடுவான் உள்ளத்துள் வருந்தினான். பக்தனின் ஏக்கத்தை அறிந்த பெருமாள் கொடிமரத்தை விலகியிருக்குமாறு ஆணையிட்டார். அதனால் கொடிமரமும் வடக்குப் புறமாக சற்றே விலகியது. நம்பாடுவான் பெருமாளை சேவித்து மகிழ்ந்தான். அன்று விலகிய கொடிமரம் இன்றும் விலகியே காட்சியளிக்கின்றது. நந்தனாருக்காக திருப்புன் கூரிலே நந்தியைப் பெருமான் விலகச் செய்தது போல திருக்குறுங்குடியின் பக்தனுக்காகவும் கொடிமரம் விலகியது.

பாணனின் பாடலுக்கு மகிழ்ந்த நம்பி 'இவன் தம்மைப் பாடுவான்' என்னும் பொருள் பட 'நம்பாடுவான்' என்ற திருநாமம் சூட்டி பெருமைப்படுத்தினார்.

நம்பாடுவான் திருமாலுக்குச் சிறந்த நாளான ஒவ்வொரு ஏகாதசி தோறும் திருக்குறுங்குடி சென்று பெருமாளைச் சேவித்து அவன் புகழ்பாடும் திருத்தொண்டினைத் தவறாமல் செய்து வந்தான்.

இப்படி ஏகாதசி தோறும் நியமம் தவறாது தொண்டு செய்யும் நம்பாடுவானைச் சோதிக்கப் பெருமாள் திருவுளம் பற்றினார். கார்த்திகை மாத சுக்ல பக்ஷ ஏகாதசி. நம்பாடுவான் வழக்கம் போலப் பெருமாளைச் சேவிக்க காட்டினிடையாக வரும்பொழுது பூர்வஜென்ம தீவினையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியன் ஒருவன் பிரம்ம ராக்ஷசனாக மாறி அவ்வனத்தில் வாழ்ந்துவந்தவன் நம்பாடுவானைப் பற்றிக் கொண்டு விழுங்க முயன்றான். நம்பாடுவான் அந்த பிரம்ம ராக்ஷசனை வணங்கி ஏகாதசிதோறும் திருக்குறுங்குடி வைணவ நம்பிக்குத் தான் செய்யும் இசையாராதனையைக் கூறி, அந்தப்பணியை நிறைவேற்றிவிட்டு வந்து தன்னை ஒப்படைப்பதாகக் கூற அந்த பிரம்மராக்ஷதனும் நம்பாடுவானின் பேச்சின் உண்மையை உணர்ந்து அவனை விட்டான்.

இராக்ஷதனின் பிடியிலிருந்து மீண்ட நம்பாடுவான் திருக்குறுங்குடிச் சென்று ஏகாதசி தரிசனத்தை ஆனந்தமாகச் செய்துவிட்டு சொன்ன சொல் தவறாமல் அந்த இராக்ஷதனிடம் வந்து தன்னை உண்ணுமாறு கூறினான்.

வேதியனாக தான் பிரம்ம ராக்ஷசனாக மாறிய கதையைக் கூறி, தன்னைத் தான் செய்த கொடும் பாவங்களிலிருந்து விடுவிக்க வேண்டுமென நம்பாடுவானை பணிந்து வேண்ட, மனமிரங்கிய நம்பாடுவானும் தனது கைசிகிப் பண்ணினால் திருக்குறுங்குடி நம்பியை மகிழ்வித்து ஈட்டிய புண்ணியப்பயனை அந்த இராக்ஷதனுக்குத் தர அவனும் அரக்க உருவம் மாறி அந்தண வடிவம் பெற்றான். அன்றுமுதல் நம்பாடுவானின் பெருமையைப் பறைசாற்றும் கார்த்திகை ஏகாதசியை "கைசிகி ஏகாதசி" என்று மக்கள் அழைத்து மகிழ்ந்தனர்.

திருவரங்கத்தில் அரங்கநாதர் திவ்வியாலங்கார பூஷிதராக "கைசிகி ஏகாதசி தினத்தன்று திரு உலா வந்து சேவை சாதிப்பார்"

இந்த கைசிகி ஏகாதசியின் சிறப்பையும், அரங்கன் எழுந்தருளும் அழகுக் காட்சியையும் காண ஆசைப்பட்ட விஜயரங்க சொக்கநாத நாயக்க மன்னன் வருவதற்குள்ளே ஏகாதசி முடிந்து பெருமான் புறப்பாடும் நிறைவேறி திருவாபரணாங்களெல்லாம் களையப்பட்ட கோலத்தில் அரங்கன் விளங்கினான்.

இதனைக் கண்ணுற்ற சொக்கநாத மன்னரின் இதயம் வேதனைக்குள்ளாகியது. மறுபடியும் கைகிசி ஏகாதசி சேவையை தரிசிக்க ஆசைப்பட்டு ஆலயத்தினரை வேண்டினான். ஆனால் ஆலயத்தினர் அதற்கு உடன்படாது அடுத்த ஆண்டு "கைசிகி ஏகாதசியன்று தான் தரிசிக்க முடியும். அதனால் ஒரு ஆண்டு காத்திருக்குமாறு கூறிவிட்டனர். மன்னனும் அதனை மதித்து அவ்வாலயத்திலேயே காத்திருந்தான் என்பது வரலாறு. இன்றும் திருவரங்க ஆலயத்தில் விஜயரங்க சொக்கநாதரின் சிலை வடிவம் அதற்கு சாட்சியாக இருக்கிறது.

- பிரதிபலன் எதையும் சிந்திக்காமல் நாம் உலகிற்கு செலுத்தும் ஒவ்வோர் நல்லெண்ணமும் நமக்குள் சேகரித்து வைக்கப்படுகிறது. அத்தகைய நல்ல எண்ணம் நமது கர்ம சங்கிலியை இணைக்கும் கண்ணி ஒன்றை உடைத்தெறிகிறது. மக்களும் மேலும் தூயவர்களாகும் வரை மேலும் மேலும் அது நம்மை தூய்மைப்படுத்திக் கொண்டே இருக்கிறது.
- ஆனால் நாம் மட்டும் உறுதியாகவும், தூய்மையாகவும், கடவுளிடம் அளவுக் கடந்த நம்பிக்கை உடையவராகவும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் இந்த இடைஞ்சல்கள் எல்லாம் மறைந்துவிடும்.
- நீ உன்னை ஒரு பக்கம் இறைவனது உண்மைக்குத் திறந்து கொண்டு, மற்றொரு பக்கம் பகைச்சக்திகளுக்குக் கதவு திறந்து கொண்டே இருந்தால் இறையருள் உன்னிடம் தங்கும் என்று எதிர்ப்பார்ப்பது வீணாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக நுண்கலை வரலாற்றில் நகரத்தார் பங்கு

நா.வள்ளி

பாண்டிய நாட்டைத் தாயகமாகக் கொண்ட நகரத்தார்கள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலும், புதுக் கோட்டை மாவட்டத்திலும் முன்பு 96 ஊர்களிலும் தற்போது 74 ஊர்களிலும் வசிக்கின்றார்கள். இவர்கள் வசிக்கும் பகுதிக்குச் 'செட்டிநாடு' என்று பெயர். தமிழக வரலாற்றை நோக்கும்போது நாட்டை ஆண்ட மன்னர்களே சிற்பம், கட்டடம், ஓவியம், இசை, இலக்கியம் போன்ற நுண்கலை வளர்க்கும் செவிலித்தாயார்களாக விளங்கியதைக் காண்கின்றோம். அவர்களுக்கும் பிறகு ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் இந்நுண்கலைகள் பேணுவாரின்றிக் கிடந்த போது இக்கலைகளை ஆதரித்தவர் நகரத்தாரே ஆவார்.

## கட்டட சிற்பக்கலைகள்

18, 19ஆம் நூற்றாண்டுகளில் வணிகத்தின் பொருட்டு இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர், வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேசியா முதலிய கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று பெரும் பொருள் ஈட்டி, ஈட்டியதில் ஒரு பகுதியை மகமைப் பணமென எடுத்து வைத்து, அதைக் கோயில் பணிகளுக்குச் செலவிட்டனர்.

அக்காலத்தில் கிறிஸ்துவ, இசுலாமிய சமயங்கள் ஏற்றங்கண்டதாலும், இந்து மன்னர்கள் ஆற்றல் இழந்து பிற சமயத்தினரின் படைத்துணையை நாடி ஓடியதாலும், தமிழகக் கோயில்கள் பாதுகாப்பாரற்றும், பேணுவாரற்றும் கிடந்தன.

தமிழகத்துப் பெருங்கோயில்கள் பல, போர் அணிகள் நிறுத்தப்பட்டிருந்த வாடி வீடுகளாகவும், கொத்தளங்களாகவும் பயன்படுத்தப்பட்டன. உதாரணமாகச் சிதம்பரம் கோவிலில் சாஹூஜி என்ற மராத்தியன் பகைவருக்கு அஞ்சித் தன் படையுடன் அடைக்கலம் புகுந்தான். பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும், ஐதரலியும் மாறி மாறி இக்கோயிலைத் தம் கொத்தளங்களாகப் பயன்படுத்தி வந்தனர். இக்கோயில் தொடர்ந்து 35 ஆண்டுகள் இராணுவத்தினர் வசம் இருந்தது. பீரங்கித் தாக்குதல்களால் இக்கோயில்களின் மண்டபங்களும், சுற்றாலைகளும் இடியுண்டு அழிந்தன.

இதுபோலப் பல காரணங்களால் பாடல் பெற்ற பல தலங்கள் பாழடைந்து கிடந்தன. இக்கோயில்களையெல்லாம் தேடித் தேடி திருப்பணி செய்தனர் நகரத்தார்கள். மேலும் புதிய கல் திருப்பணிகளை மேற்கொண்டும் பல கோயில்களை விரிவுப்படுத்தியும் இந்து சமயத்திற்குப் பெருந்தொண்டாற்றினர். நகரத்தார் திருப்பணி செய்த ஆலயங்கள் திராவிடக் கட்டடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் விளக்கமாகத் திகழ்கின்றன.

இவர்கள் எப்போதும் கோயில் பணிகளில் ஈடுபட்டிருந்ததால் சிற்பக்கலையில் வல்லுனர்களான ஸ்தபதிகள் செட்டிநாட்டுப் பகுதிகளில் எமுவாங்கோட்டை போன்ற ஊர்களில் நிரந்தரமாகக் குடியேறினர். இன்றைக்குச் செட்டிநாடு ஸ்தபதிகளுக்கு உலகமொங்கும் நல்ல மதிப்பிருக்கிறது.

நகரத்தார் காலச் சிற்பங்களை, கட்டடச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், செப்புப்படிமங்கள், சுதைச் சிற்பங்கள், மரச்சிற்பங்கள், வாகனங்கள் என்று பலவாறாக பகுத்து ஆய்வு செய்யுமளவு அவர்களது பணி சிறந்து பரவியிருக்கிறது.

தமிழகத்தில் மட்டுமல்லாது காசி முதலாகப் பல வடநாட்டுக் கோயில்களும் இவர்களால் திருப்பணி செய்யப்பட்டன. காசி விசாலாட்சி கோயில் தென்னாட்டுச் சிற்ப மரபையொட்டி நகரத்தார்களால் கட்டப்பட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் பொருளீட்டச் சென்ற பர்மா, மலேசியா, இலங்கை போன்ற அயல்நாடுகளிலும் தென்னாட்டு முறைப்படி ஏராளமான கோயில்களைக் கட்டி சைவமதத்தையும், திராவிட சிறப மரபையும் பரப்பியுள்ளனர். நகரத்தார் கோயில்களுள் நேமங்கோயில், பிள்ளையார்பட்டி, மாற்றூர், இலுப்பைக்குடி, வைரவன் கோயில்களிலுள்ள தூ ண்களில் செதுக்கப்பட்ட இறை உருவச் சிற்பங்கள் நுணுக்கமான வேலைப்பாடுடையவை.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரமாவதிபுத்தூர்வயிராகரம் குடும்பத்தாரால் அக்காலத்திலேயே 25 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப்பட்டது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலிலுள்ள சிற்பவேலைப்பாடுகள் நிறைந்த கம்பத்தடி மண்டபம் நகரத்தார் திருப்பணியே. இங்கு தூண் ஒன்றிலுள்ள மீனாட்சி அம்மன் திருமணக் கோலச் சிற்பம் உலகப் புகழ்ப் பெற்றது.

நகரத்தார் கருங்கல் திருப்பணி செய்த கோயில்கள் அனைத்தும் பெரும்பாலும் ஒரே மாதிரியான அமைப்புடையவை. பாண்டிய நாட்டு சிற்பிகள் தங்கள் வேலையைத் தொடங்கும் முன்பு ஆவுடையார் கோவில் கொடுங்கை நீங்கலாக, மற்ற எந்தச் சிற்ப வேலையும் தங்களால் செய்ய இயலும் என எழுதிக் கொடுத்தார்களாம்.

ஆனால் நகரத்தாரால் வளர்க்கப்பட்ட சிற்பிகள் வடித்த கோயிற்கொடுங்கைகள் அனைத்துமே ஆவுடையார்கோவில் கொடுங்கைகளுக்கு இணையாகச் சிற்ப நுணுக்கத்துடன் காணப் படுகின்றன.

நகரத்தார் கோயில் கோபுரக் கலையிலும் சிறந்து விளங்கினர். மதுரை மீனாட்சி அம்மன் கோயில் வடக்குக் கோபுரத் திருப்பணி அதற்குச் சான்றாகும். நாற்புறமும் கடல் சூழ்ந்துள்ள இராமேசுவரத் தீவிற்கு கடல்வழியாகக் கற்களைக் கொண்டுச் சென்று இராமேசுவரம் கோயிலின் கிழக்குக் கோபுரத்தைக் கட்டி முடித்தவர்கள், தேவக்கோட்டை ஜமீன்தார் குடும்பத்தார் ஆவர். தேர்கள் மற்றும் ஏராளமான வாகனச் சிற்பங்களை மரத்திலும் வெள்ளியிலும் நகரத்தார் செய்துக் கொடுத்துள்ளனர்.

தங்களுக்கென ஒரு சிற்ப மரபை வளர்த்துக் கொண்ட நகரத்தார்களின் வீடுகளும் கோயில்களைப் போன்று சிற்ப நுணுக்கங்களோடு கட்டப்பட்டன. வீடுகள் மிகப் பெரியவைகளாகக் குடும்பத்தார் அனைவரும் கூடி வாழ்வதற்கேற்பத் திருமணங்கள் போன்ற நிகழ்ச்சிகளை வீட்டிலேயே நடத்துவதற்கேற்பக் கட்டப்பட்டன. பர்மாவிலிருந்து கொண்டுவந்த தேக்கு மரங்களால் சிற்ப வேலைப் பாட்டுடன் கதவுகளையும் தூண்களையும் அமைத்தனர்.

முகப்பு நிலைக் கதவுகளின் மேற்பகுதியின் நடுவில் திருமகளின் சிற்பமும் இருபுறமும் யானைகள் மற்றும் யாளிகள், குதிரைகள், கொடிக்கருக்குகள், பூவேலைப்பாடுகள் ஆகியவையும் காணப்படும்.

இக்கதவுகள் இன்று அதன் சிற்ப வேலைப்பாடுகளுக்காக பல லட்சரூபாய் மதிப்புடையதாகத் திகழ்கின்றன. நகரத்தார் காலத் தூண்களில் போதிகைகள் நன்கு வளர்ந்த நிலையில் வாழைப்பூ போன்று காணப்படும். இவர்களுடைய நகர விடுதி நகரச் சத்திரங்களில் இக்கட்டடக் கலையின் அமைப்பைக் காணலாம். நகரத்தார் இல்லங்களின் வெளிப்புறங்களை சுதைச் சிற்பங்கள் அலங்கரிக்கும்.

சுருக்கக் கூறினால் தமிழகத்தில் தொன்று தொட்டு வந்த கட்டடக்கலையும் சிற்பகலையும் அழிந்து போகாமல் நகரத்தார் காத்தனர் என்பது வரலாற்று உண்மையாகும்.

## ஓவியக்கலை

தாங்கள் திருப்பணி செய்த கோயில் மண்டபங்களின் விதானங்களிலும், கோயில் திருச்சுற்றுகளிலும் பலவித வண்ண ஓவியங்களை நாயக்கர் பணியில் வரைந்துள்ளதைக் காணலாம். மகாபாரத இராமாயணக் காட்சிகளும் திருவிளையாடற் புராண நிகழ்ச்சிகளும் ஓவியங்களாத் தீட்டப்பட்டுள்ளன.

இலுப்பைக் குடிக்கோயில் போன்ற இடங்களில் நகரத்தாரின் ஓவியப்பாணியைக் கண்டு களிக்கலாம். நகரத்தார் தங்கள் வீடுகளில் வளைவு, முகப்பு, கதவு, ஜன்னல் ஆகியவற்றின் மேற்பகுதியில் வண்ண ஓவியங்களை வரைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைக்கலை

நகரத்தார் தமிழிசைக்குச் செய்த தொண்டு பெரிது. தமிழகத்தில் விஜய நகரர், நாயக்கர் ஆட்சி நிலவிய போது தமிழகத்தில் இசைத்துறையில் தெலுங்கும் வடமொழியுமே ஆட்சி செய்தன. நமக்குத் தெரியாத மொழியில் இசையை அனுபவிப்பது மனைவியிடம் வக்கீல் வைத்து பேசுவதற்கு சமமாகும் என்பார் கவியரசர் தாகூர். தமிழகத்தைப் பொருத்தவரை இந்நிலைதான் இருந்தது. தமிழிசைக்கு மதிப்பில்லாமல் இருந்தது. இந்நிலையை மாற்றத் தமிழிசை இயக்கத்தை உருவாக்கினார் அண்ணாமலை அரசர். இதற்கு எதிர்ப்பு கிளம்பியது. எதிர்ப்புகளை திறமையாக சமாளித்த அரசர் தமிழிசைச் சங்கங்கள் ஏற்படுத்தித் தமிழிசை விழாக்கள் நடத்தினார். தமிழிசையை வளர்ப்பதற்கு அண்ணாமலை நகரில் இசைக் கல்லூரியையும் நிறுவினார்.

அவர் தமிழிசைக்கு இட்ட வித்து இன்று நல்ல பலனைத் தந்து நிற்கின்றது. நகரத்தார் தாங்கள் திருப்பணி செய்த கோயில்களையொற்றித் தேவார, திருவாசகப் பாடசாலைகளை ஆங்கங்கே நிறுவி பன்னிரு திருமுறைகளை இசையோடு பாட மாணவர்களுக்கு பயிற்சி அளித்தனர். வேதபாடசாலைகள் கோசாலைகள் ஆகியவற்றையும் அமைத்தனர். நகரத்தார் அமைத்த ஊரணிகள் கலை அழகுடன் இன்றும் பல ஊர்களை அழகுப்படுத்திக் கொண்டுள்ளன.

### விவேகானந்தரின் அறிவுரைகள்

- ஒரு மனிதன் மிகவும் அருமையான நடையில் சிறந்த கருத்துகளைப் பற்றி பேசுபவனாக இருக்கலாம். ஆனால் அது மக்களை கவருவதாக இருக்காது. மற்றொருவன் பேச்சில் அழகிய மொழி கருத்து என்னும் இவற்றுள் எதுவும் இல்லாமலிருக்கலாம். ஆனால் அவனுடைய சொற்கள் கேட்பவர்களுடைய உள்ளங்களை கவர்கின்றன. அவனுடைய ஒவ்வொரு செயலும் சக்தி வாய்ந்தாக இருக்கின்றன. இந்த சக்தி ஓஜஸ்ஸினால் வருவதாகும். கற்பொழுக்கம் உடைய ஆண்களும் பெண்களும் மட்டுமே ஓஜஸ்ஸை மேலே எழும்பி மூளையில் சேமித்து வைக்க முடியும். ஆகையால் தான் பிரம்மசரியம் எப்போதும் மிகவும் உயர்ந்த ஒழுக்கமாகக் கருதப்பட்டு வருகிறது. ஒருவன் பிரம்மசரியத்திலிருந்து தான் வழுவியதாக உணர்ந்தால், ஆன்மீக சக்தி அவனிடமிருந்து போய்விடுகிறது. அத்தகையவன் தன் மனவுறுதியை இழந்து விடுகிறான். இதனால்தான், மகத்தான ஆன்மீக வலிமையைப் பெற்ற பெரியோர்களை உருவாக்கித் தந்த உலகிலுள்ள எல்லா மதச் சம்பிரதாயங்களும் பரிபூரணப் பிரம்மச்சரியத்தை எப்போதும் வலியுறுத்தி வருகின்றன.
- வேதங்கள், பைபிள், குரான் ஆகிய இவற்றுக்கும் அப்பால் மக்களை நாம் அழைத்துப் போக விரும்புகின்றோம். என்றாலும் இந்தச் செயலை வேதங்கள், பைபிள், குரான் ஆகியவற்றை சமரசப்படுத்தி வைப்பதன் மூலமாகத் தான் சாதிக்க முடியும். எல்லா மதங்களும், ஒரு பரம்பொருளான அந்த ஒரே ஒரு மதத்தின் புறத்தோட்டங்களே ஆகும். இந்த உண்மையை மனிதகுலத்திற்குப் போதிக்க வேண்டும். அப்படிச் செய்தால், ஒவ்வொருவனும் தனக்கு மிகவும் பொருத்தமாக உள்ள பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் அறிந்து செயல்படுங்கள்!

வெற்றிக்கு மூன்று விஷயங்கள் தேவை. அவை திறமை, உழைப்பு, காலம் இந்த மூன்றில் முதலிரண்டு தேவைகள் புரிந்த அளவிற்கு மூன்றாவது தேவையான காலம் புரியாமல் இருப்பதே பல திறமையாளர்களும், உழைப்பாளர்களும் தோல்வியடைய காரணம். என்னிடம் இத்தனை திறமை இருந்தும் பயன்படவில்லையே, என்னுடைய இத்தகைய உழைப்பும் வீணாணதே என்று புலம்பும் பலரும் தக்க காலத்தில் தகுந்த விதத்தில் அவற்றைப் பயன்படுத்தியிருகிறோமா என்பதை யோசித்துப் பார்க்கத் தவறி விடுகிறார்கள்.

காலம் மிக முக்கியமானது. விதைக்க ஒரு காலம், விளைய ஒரு காலம், அறுக்க ஒரு காலம் என்று விவசாயத்தில் காலம் முக்கிய பங்கு வகிக்கிறது. காசிருக்கும் போது விதைகள் வாங்கி, மனம் தோன்கிற போது விதைத்து, பொழுது கிடைக்கின்ற போது அறுக்க நினைத்தால் அது எப்பிடி மற்றவர்களின் நகைப்பிற்கிடமாகுமோ அப்படிதான் காலம் பற்றி கவலைப்படாமல் செயற்படுவதும்.

சின்ன பிள்ளைகளுக்கு கூட இது போன்ற விஷயங்களில் அதிக விவரமுண்டு. எந்த நேரத்தில் அப்பாவிடம் காசு கேட்டால் கிடைக்கும், எந்த நேரத்தில் வேண்டிய பொருள்கள் கேட்டால் கிடைக்கும், எந்த நேரத்தில் குறும்பு செய்வது அபாயம் என்பதெல்லாம் அவர்களுக்கு அத்துபடி. அவர்கள் எல்லா நேரத்திலும் எல்லாமே செய்து விட மாட்டார்கள். பெற்றோரின் மனநிலையும், வீட்டின் சூழ்நிலையும் அறிந்து செயல்படுவார்கள் தங்கள் காரியங்களையும் சாதித்துக் கொள்வார்கள். அந்த அளவு சூட்சமமான புத்திசாலிதனம் அவர்களுக்கு பெரும்பாலும் உண்டு.

அதே சூட்சம அறிவு ஒரு வெற்றியாளனுக்கு மிக முக்கியத் தேவை.ஒரு காலத்தில் வெற்றித்தருவது இன்னொரு காலத்தில் அநாவசியமாகி விடலாம். ஒரு காலத்தில் பேசுவது உத்தமமாய் இருக்கும் என்றால் இன்னொரு காலத்தில் பேசுவது வம்பை விலைக்கு வாங்குவது போலத்தான். இப்படி வாழ்க்கையில் பெரும்பாலானவை காலத்திற்கேற்ப மாறுபடுபவையே. எனவே எந்த நேரத்தில் எது பயன் தரும் என்பதை உணர்ந்து அதை செய்தால் ஒழிய ஒருவன் வெற்றி பெற முடியாது.

ஒரு பணக்கார மனிதரை காலம் அறிதல் உலகப் பெரும் பணக்காரராக்கிய ஒரு உதாரணம் பார்க்கலாம். இரும்புத் தொழிலில் நல்ல லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்தார் ஆன்ட்ரூ கார்னிஜி என்ற அமெரிக்க செல்வந்தர். அந்த நேரத்தில் தான் இரும்பிலிருந்து G/S கண்டுபிடிக்கப்பட்டது. இரும்பு உடையும் தன்மையுடையது. ஆனால G/S கோ நன்றாக வளையக் கூடியதாகவும், அதிக உறுதியானதாகவும் இருந்தது. அதனால் G/Sற்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று உணர்ந்த ஆன்ட்ரு கார்னிஜி தன்னுடைய மூலதனத்தை G/Sற்கு மாற்ற எண்ணினார். அவருடன் சேர்ந்து வியாபாரம் செய்துக் கொண்டிருந்த அவருடைய கூட்டாளிகள் அது மிகவும் அபாயகரமானது என்று எண்ணி அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. இப்போதே நல்ல லாபம் ஈட்டும் தொழி இருக்கையில் இந்த புதிய மாற்றம் தேவையில்லாது என்று எண்ணினார்கள்.

ஆன்ட்ரூ கார்னிஜி புதிய கூட்டாளிகளை சேர்த்துக் கொண்டு G/Sத் தொழிலில் முழுமூச்சோடு இறங்கினார். அவருடைய பழைய கூட்டாளிகள் வெறும் பணக்காரர்களாக வளர்ந்து விட்ட போது அவர் உலகப் பெரும் பணக்காரர் என்ற அந்தஸ்தில் உயர்ந்தது அவர் அப்படி அவர் காலம் அறிந்து செயற்பட்டமைதான்.

எனவே காலம் அறிந்து செயற்படுவது மிகவும் முக்கியமானது. காலம் வருவதற்கு முன்போ, காலம் கடந்த பின்போ கடும் முயற்சிகள் எடுப்பதும், காலம் கனியும் போது ஒடுங்கிக் கிடப்பதும் தோல்விக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் வழிகள். கடும் உழைப்பாளிகளில் பலர் கீழ்மட்டத்திலேயே தங்கி இருப்பதைப் பார்க்கின்றோம். நல்ல திறமைசாலிகளில் பலரும் வாழ்க்கையில் சோபிக்காததையும் பார்க்கின்றோம். ஆனால் காலம் அறிந்து அதற்கேற்ற மாதிரி செயல்படுபவர்களுக்கு ஓரளவு திறமையும், ஓரளவு உழைப்பும் இருந்தால் கூட போதும். நல்ல நிலைக்கு விரைவிலேயே உயர்ந்து விடுகிறார்கள். இதுவே யதார்த்தம்.

எனவே காலத்தின் ஓட்டத்தை கவனமாகக் கவனியுங்கள். எல்லாவற்றையும் விட அதிகமான முக்கியத்துவத்தை அதற்கு கொடுங்கள். காலம் கனியும் போது விரைவாகவும், உறுதியாகவும் செயல்படுங்கள். காலம் அறிதல் அதிகாரத்தை மிக அழகாக இப்படிச் சொல்லி திருவள்ளுவர் முடிக்கிறார்.

எனவே திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள். சிறப்பாக உழைக்கவும் தயாராக இருங்கள். ஆனால் காலம் அறிந்து செயற்படுங்கள். அப்படி செயற்படும் போது சந்தேகமோ தயக்கமோ வைத்து கொள்ளாதீர்கள். (உண்மையாக நீங்கள் காலம் அறிந்தவராக இருந்தால் சந்தேகமே, தயக்கமோ வரும் வாய்ப்பில்லை) அப்படி செய்யும் போது காலத்தை உங்கள் துணையாகக் கொள்கிறீர்கள். காலத்தை துணையாகக் கொண்டு செயற்படுபவனுக்கு திருவள்ளுவர் கூறியது போல முடியாத செயல் என்று எதுவுமே இல்லை!

## விவேகானந்தரின் அறிவுரைகள்

மக்கள் ஏன் ஒழுக்கம் உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதை இலௌகிகப் பயன்களை மட்டும் குறிக்கோளாக கொண்டவனுடைய கருத்துக்களால் விளக்கி காட்ட முடியாது. ஏனென்றால் முதலாவதாக அப்படிப்பட்டவனுடைய மனப்பான்மையிலிருந்து எந்த விதமான ஒழுக்க நெறியையும் நாம் பெற முடியாது. மெய்ப் பொருளை நாடிச் செல்லும் நமது முயற்சியும், புலன்களுக்கும் அப்பாற்பட்ட நிலையை அடைவதற்கு மேற்கொள்ளும் முயற்சியும் ஆகிய இவை நடைமுறை வாழ்வுக்கு ஒத்துவராதவை. அசட்டுத்தனமானவை. அவற்றை நாம் புறக்கணித்து கைவிட்டுவிடவேண்டும் என்று அவன் விரும்புகிறான்.

ஆனால் அதே மூச்சில் அவன், நம்மை நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்கும் படியும் உலகிற்கு நன்மை செய்யும்படியும் கூறுகின்றான். உலகத்திற்கு நாம் ஏன் நன்மை செய்ய வேண்டும். நன்மை செய்வது இரண்டாவதாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். முதலில் நமக்கென்று ஓர் இலட்சியம் இருந்தாக வேண்டும். ஒழுக்கமாக இருப்பதே நம்முடைய இலட்சியத்தின் முடிவல்ல. மாறாக, அது ஓர் இலட்சியத்தை அடையச் செய்யும் பாதையாக மட்டும் தான் இருக்கின்றது.

இரண்டாவதாக, இலௌகிகக் பயன் வேண்டும் என்ற அடிப்படை மிகவும் குறுகலானது. இப்படிப் பட்டவர்களின் கருத்துக்கள் தற்காலச் சமுதாயத்தின் சூழ்நிலைகளில் மட்டும் தான் வேலை செய்ய முடியும். இந்தச் சூழ்நிலைகளைக் கடந்து அப்பால் அந்தக் கருத்துகளுக்கு எந்த மதிப்பும் கிடையாது. ஆனால் மதம், ஆன்மீக வாழ்க்கை ஆகியவற்றிலிருந்து பெறப்படும் ஒழுக்கம், நீதி ஆகிய இவை பரந்த மனிதகுலம் முழுவதிலும் புகுந்து நற்செயலாற்ற முடியும். அது ஒரு தனி மனித வாழ்க்கையை எடுத்துக் கொள்கிறது. என்றாலும், அதன் தொடர்புகள் அனைத்தும் அகண்டமான மெய்ப்பொருளோடு தொடர்பு கொண்டவையே ஆகும். ஏனென்றால், சமுதாயம் என்பது இத்தகைய தனி மனிதர்கள் பலருடைய தொகுப்பே தவிர வேறில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிஷ்டானம்: கட்டுமான வடிவமைப்பு

## பல்லவர் கலைப்பாணி - ஓர் ஆய்வு

வே. இராமன் (சிறப்புநிலை ஸ்தபதி, திருச்சி - 1)

### தென்னகக் கோயில்களின் அதிஷ்டானம்

பண்டைக்காலத் தென்னகக் கோயில்கள் சிற்ப நூல் மரபுப் படியே அமைக்கப்பட்டன என்பதனை உத்திரமேரூர்க் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. பொதுவாகத் தென்னகக் கோயில்கள் அதிஷ்டானம், பாதம், பிரஸ்தரம், கண்டம், சிகரம், ஸ்தூபி என்ற ஆறு அடிப்படையான, ஆதாரமான அங்கங்களைப் பெற்றிருப்பதையே காணமுடிகின்றது.

கோயில்கள் எந்த அளவில் அமைக்கப் பெற்றாலும் இவ்வங்கங்கள் யாவும் முறையான அளவுகளைக் கொண்டே எழுப்பப்படும் எனலாம்.

கோயிலமைப்பில் அடித்தளப் பீடமாக அமையும் அங்கத்தை அதிஷ்டானம் என்பர். காசியபம், மயமதம், மானசாரம் போன்ற சிற்பநூல்கள் பல்வேறு அதிஷ்டான அமைப்புகளையும், அவ்வதிஷ்டானத்தில் இடம்பெறும் உறுப்புகளையும் அவ்வுறுப்புக்களின் அளவு முறைகளையும் வரையறுத்துக் கூறுகின்றன. இருப்பினும் பண்டைக்கால கோயில்களில் ஒரு சில அதிஷ்டான அமைப்புக்களே இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.

இவ்வதிஷ்டான அமைப்புகளிலிருந்து மாறுப் பட்ட புதிய வடிவமைப்புக் கொண்ட மேற்கண்ட சிற்பநூல்களில் கூறப்படாத அதிஷ்டானன் கட்டமைப்பைத் திருச்சி மாவட்டம், புள்ளம்பாடி, திருமழபாடி சாலையில் ஆலம்பாக்கம் எனும் வரலாற்று சிறப்பு மிக்க சிற்றூரில் தந்திவர்மன் என்னும் பல்லவ மன்னனால் எடுப்பிக்கப்பட்ட கைலாசநாதர் கோயில் கருவறையமைப்பில் காணமுடிகின்றது. இதுப்போன்ற அதிஷ்டான அமைப்பு முறையினைப் பல்லவர் மற்றும் சோழர்கால கோயில்களில் காண இயலவில்லை. ஏன் இவ்வதிஷ்டான அமைப்பு பின்பற்றப்பட வில்லை என்பதனை சிற்பநூல் கூறும் அதிஷ்டான அமைப்பு முறையோடு இக்கோயில் அதிஷ்டமான அமைப்பு முறையை ஒப்பு நோக்குவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

### கல்வெட்டுகளில் அதிஷ்டானம்

தமிழகத்தின் தொன்மையான தமிழி கல்வெட்டுகள் சிலவற்றில் (கருவூர், சித்தன்னவாசல்) அதிட் அனம் என்ற சொல் இடம் பெறுகின்றது. இவை காணப்படும் இடங்கள் சமயத்துறவியருக்கென அமைக்கப்பட்ட கற்படுக்கைகளாக இருப்பதால் ஒரு கல்மேடை, கல்தளம் என்ற பொருளை அதிஷ்டானம் குறித்து நின்றது எனலாம்.

### அதிஷ்டானத்தைக் குறிக்கும் பிறசொற்கள்

சிற்பநூல்கள் அதிஷ்டானத்தை பூமி, தரணி, புவனம், ஆதாரம், தலம், வஸ்து, பிருதிவி ஆதியங்கம் எனப் பலவகையாகக் குறிப்பிடுகின்றன. கருவறையில் அமைக்கப்பெறும் திருமேனியின் இருக்கையிடமாகவே அதிஷ்டானத் தின் அமைப்பு பொருந்தியிருப்பதால் இதனை 'இருக்கை திட்டமைப்பு' 'கருவறை கட்டுமான அடிப்படை நிறுவகம்' 'தாங்குத்தளம்' எனப் பொருள் கொள்வாரும் உண்டு.

### அதிஷ்டானம் அமைவிடங்கள்

அதிஷ்டான உறுப்புக்களை அமையப் பெறும் இடத்திற்கேற்ப கூட்டியும், குறைத்தும் அமைப்பதை கோயில் கட்டட அமைப்பில் பரவலாகக் காணமுடிகின்றது. கருவறை அமைப்பின் எழிலோடு அமைப்பது ஒருவகை, கோபுர அமைப்பில் அதன் உன்னதத் தோற்றத்தை எழில் கூட்ட, கலையுணர்வுத் தோற்றமாக அமைத்தல் பிறிதொருவகை. எழில்மிகு மண்டபங்களில் எடுப்பிப்பது ஒரு வகை. உண்ணாழியில் இறையுணர்வோடு ஆவுடையராக இடம் பெறச் செய்வது பிறிதொரு வகையென்றும் நந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபம், பலிபீடம் அமைப்பில் அமைப்பது ஒரு வகையென்றும் அதிஷ்டான அமைப்பைப் பலவகைப்படுத்தலாம்.

## அதிஷ்டான அமைப்பும், கணக்கீடு விதிமுறைகளும்

அதிஷ்டானமானது கருவறையில் இடம்பெறும் பாதச்சுவருக்குக் கீழும் நிலமட்டத்திற்கு மேலும் அமையும் ஒரு கட்டுமானப் பகுதியாகும். பல்லவர் கால குடைவரைக் கோயில் மற்றும் ஒற்றைக் கற்கோயில்களில் அவ்வதிஷ்டான அமைப்பு எப்படி அமைந்தாலும்ஏற்படும்பளுவினால்கட்டடம்பாதிக்க வாய்ப்பு இல்லை. ஆனால் பல உறுப்புக்களை இணைத்துஎழுப்பப்படும்கட்டுமானக்கோயில்களில் அதிஷ்டான அமைப்பானது தம்மேல் எழுப்பப்படும் கட்டடம் முழுவதையும் தாங்கும் திறன் கொண்டதாக அமைத்திடல் வேண்டும். கோயில் எடுப்பிக்கப்படும் காலத்தே கட்டிடத்தின் நீளம், அகலம் மற்றும் உயர அளவுகளை நிர்ணயம் செய்யும் போது அக்கட்டட அதிஷ்டானத்தின் மேல்வரும் பாதச்சுவர், கூரைச்சுவர் மற்றும் மேல்தளங்களின் பளு முதலானவற்றை கணக்கீடு செய்து அதிஷ்டானத்தின் உயரத்தை நிர்ணயம் செய்வர். கட்டுமானக் கோயில் அமைப்பானது சிற்பகலைஞனின் ஆக்கத்திறன், சிந்தனை, அனுபவம் முதலானவற்றின் அடிப்படையில் எழுவதாகும். அதில் தொழில் நுணுக்கம், அறிவியல் மற்றும் தத்துவங்களும் அடங்கும் எனலாம்.

நம் முன்னோர்களால் எடுப்பிக்கப்பட்ட கட்டுமானங்களை கணித்து அளந்து அவற்றிற்கெல்லாம் இலக்கணம் கண்டனர் முன்னோர். அவ்விலக்கணங்களிலே சில வேறுபாடுகள் இருப்பினும் மாறுபாடுகள் ஏதுமில்லை. இவ்வாறு தலைமுறை தலைமுறையாகப் பெற்றிட்ட அனுபவங்களை ஒன்று திரட்டி இலக்கணமாகச், சிற்ப நூல்களாக நமக்குத் தந்துள்ளனர் சிற்பநூலோர். இந்நூல்களின் துணைக் கொண்டு எழுப்பப்படும். கோயிலின் உயரத்திற்கேற்ப அதிஷ்டான உயரத்தை நிர்ணயம் செய்திடுவர். அவ்வதிஷ்டான அங்கங்களின் உயரம் மற்றும் நீட்சி அளவீடுகளை அந்நூல்கள் வரையறுத்துக் கூறுகின்றன. இங்கனம் உயரளவைக் கொண்டு கணக்கீடு செய்யும் அமைப்பை சாந்திகம், பௌஷ்டிகம், ஜயதயம், அத்புதம், சார்வகாமிகம் என வகைப்படுத்தியுள்ளனர். இவைகள் மூலம் சிற்பக் கலைஞனின் செயலாக்கத் திறனுக்கேற்ப அதிஷ்டானக் கட்டுமானங்களின் உயரளவை மிகத்தெளிவாக நிர்ணயம் செய்திடுவர் எனலாம். மேலும் இவ்வதிஷ்டானது உயரமானது பாதச்சுவரின் உயரளவில் மிகத் தெளிவாக நிர்ணயம் செய்திடுவர் எனலாம். மேலும் இவ்வதிஷ்டான உயரமானது பாதச்சுவரில் உயரளவில் ஆறில் ஒரு பங்கு, ஏழில் ஒரு பங்கு, எட்டில் ஒரு பங்கு குறைத்தோ, பாதச்சுவரின் உயரளவில் பாதியோ தேவையை அனுசரித்து உயரம் கொள்வர். இக்கட்டுமானம் இடத்திற்கேற்பவும், பொருளுக்கேற்பவும்வேறுபடும் என்பது பொது விதி.

## அதிஷ்டான பேதங்கள்

சிற்பநூல்கள் அதிஷ்டானங்களை இருவகைப் படுத்திக் கூறுகின்றன. அவைமுறையே 'பாதபந்தம்' 'பிரதிபந்தம்' எனப்பெயர் பெறும். சிற்ப நூல்களில் கூறப்படும் அதிஷ்டானங்கள் யாவும் இப்பெரும் பிரிவுக்குள்ளே தான் அடங்கும். சிற்பநூல்களில் கூறப்படும்அதிஷ்டானஅங்கங்களையும், அவற்றில் இடம்பெறும் சிற்றுறுப்புகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது உபானம், ஜகதி, குமுதம், கண்டம் மற்றும் பட்டிகை என்ற அங்கங்களைக் கொண்ட ஒருவகை அமைப்பையும், உபானம், மகாபத்மம், குமுதம், பட்டிகை அல்லது யாளி என்ற அங்கங்களோடு கூடிய ஒருவகை அதிஷ்டான அமைப்பையும் எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ளது எனலாம்.

## பாதபந்தம்

உபானம், ஜகதி, குமுதம், கம்பு, கண்டம், கம்பு, மகாபட்டிகை, கம்பு ஆகிய எட்டு உறுப்புகளைக் கொண்ட அதிஷ்டானமே மாமல்லபுரம் முகுந்த நாயனார் கோயில், திருப்பத்தூர் கைலாசநாதர் கோயில் மற்றும் உத்திரமேரூர் சுந்தரவரதப் பெருமாள் கோயில் ஆகிய கோயில்களின் கருவறையமைப்பின் கட்டுமானங்களில் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வளவில் கூறப்பட்டவை அதிஷ்டான அமைவிடம், அமைப்பு, கணக்கீடு, பிரிவு, உறுப்பு இவைகளின் ஒரு சில விளக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிஷ்டான அமைப்பை அறிகிறதற்குச் சுட்டிக் காட்டப்பட்டவையாகும். இனி தந்திவர்மன் கலைப்பாணியில் அமைந்துள்ள அதிஷ்டானத் தோடு ஒப்பு நோக்குவோம்.

## தந்திவர்மன் கலைப்பாணி

ஆலம்பாக்கம் ஸ்ரீ கைலாசநாதர் கோயிலின் கருவறை புறச்சுவரில் இடம்பெற்றுள்ள இவ்வதிஷ்டானம் 'பாதபந்தம்' வகையைச் சார்ந்ததாகும். இவ்வதிஷ்டானத்தில் அடங்கிய உறுப்புக்கள் முறையே கீழிருந்து உபானம், ஜகதி, குமுதம், கம்பு, பிரதிகம்பு, கண்டம், கம்பு, மகாபட்டிகை, மேல்கம்பு என்ற ஒன்பது உறுப்புகளைக் கொண்ட புதுமையான, புதிய கட்டுமானமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக முன்பு சொன்ன பாதபந்தம் அதிஷ்டானம் இடம் பெற்றுள்ள கோயில்களில் குமுதத்தின் மேல் கம்பு, கண்டம் என இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. அதாவது பிரதிகம்பு என்ற சிற்றுறுப்பு கூடுதலாக இடம் பெற்றுள்ளன. இவ்வகை அதிஷ்டானக் கட்டமைப்பைப் பற்றிக் காசியபம், மானசாரம் மற்றும் மதமயம் போன்ற சிற்ப நூல்களில் குறிப்புகள் ஏதுமில்லை. பல்லவர் மற்றும் சோழர் கால கோயில்களிலும் இக்கட்டுமானம் காணப்பெறவில்லை எனலாம்.

இத்திருக்கோயிலை எடுப்பித்த சிற்ப கலைஞன் எந்த சிற்ப நூலைப் பின்பற்றிப் படைத்தான் என்பது ஆய்வுக்குரியது. எனவே சிற்ப கட்டட இலக்கணத்திற்கு இக்கட்டமைப்பு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது எனலாம். ஆனால் பழமையான இவ்வதிஷ்டானக் கட்டமைப்பை ஏன் பின்பற்றவில்லை என்பது சிந்திக்கத்தக்கது.

## படைப்புக்கலை

அதிஷ்டான கட்டுமான அமைப்பானது பல சிற்றுறுப்புகளைக் கொண்டு அமையப் பெறுவதாகும். இவ்வுறுப்புகள் யாவும் அவற்றின் மேல் இடம் பெறும் பிற அங்கங்களின் சுமையைத் தாங்கும் படி வடிவம் கொடுக்கப்படுகின்றன. மேலும் விரிசல் அடையாமலும், சுமையினால் சரியாமலும் நிலத்தில் அமியாமலும் கணக்கீடு செய்து வடிவமைப்பர். படைப்புக்கலையில் தாங்கு தளமாக அமைந்துள்ள இக்கோயில் அதிஷ்டான அமைப்பை நுணுகி ஆராய்ந்தால் இடம் பெறும் ஜகதியின் உயர அளவிற்கேற்பக் குமுத அமைப்பு வலிமையான கட்டுக்கோப்புடன் அமையப்பெறவில்லை என்பதும் மஹாபட்டிகை கூடுதலான வலிமைப் பெற்றுச் சீரான கட்டமைப்பை பெறவில்லை என்பதனையும் அறியமுடிகின்றது. இக்கட்டமைப்பை சிற்ப நூலில் கூறப்பட்டுள்ள கட்டமைப்போடு ஒப்பு நோக்கின் எளிதில் உணரலாம்.

## முடிவு

அதிஷ்டானக் கட்டுமானம் வலிமையான கட்டுக்கோப்புடன் அமையப்பெறுவதாகும் எனக் கண்டோம். எனவே இக்கட்டமைப்பு சீராக அமையவில்லை என்றால் நாளடைவில் நலிவுற்று அழிவுற வாய்ப்பாகும். இவ்விதிக்கேற்ப இக்கோயில் அதிஷ்டானக் கட்டமைப்பு கணிப்புடன் எடுத்தாளப் படவில்லையாதாலால் இவ்வதிஷ்டான அமைப்பைப் பிறகோயில் கட்டமைப்பில் இடம் பெறச் செய்யவில்லையோ எனவும் ஐயுற வாய்ப்புள்ளது. இருப்பினும் இவ்வமைதி கலைப் பாணியைக் கொண்ட கோயில் இன்றளவும் நல்ல நிலையில் உள்ளதை நோக்கின் தொடர்ந்து ஏன் பின்பற்றவில்லை என்று சிந்தித்தால் சிற்ப நூல் மரபுப்படியே அமையப் பெறும் அதிஷ்டான அமைப்பு அதற்குண்டான நீட்சி, அடக்கம், ஒடுக்கம் முதலானவை முறையான அளவினைப் பெற வேண்டும். அங்கனம் வடிவமைக்கப்படாத காரணத்தாலேயே வலிமையுடன் இருந்த போதிலும் அதன்பின் வந்த சிற்ப கலைஞர்கள் தம் கட்டுமானங்களில் இவ்வதிஷ்டான அமைப்பை இடம் பெறசெய்திடாமல் சிற்ப நூல் மரபினையே பின்பற்றினர் என உறுதியாக நம்ப முடிகிறது

## குறிப்பு

இவ்வரலாற்றுச் சின்னம் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## பயன் பட்ட நூல்கள்

மயமதம், காஸ்யபம் - சிற்ப நூல்கள்

தஞ்சை சரஸ்வதி மகால் நூலக வெளியீடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும்

மக்கள் ஒன்றிணைந்து வாழத் தலைப்பட்ட நிலையில் 'சமூகம்' என்ற கட்டமைப்புத் தோன்றியது. தொடக்கத்தில் வேட்டுவச் சமூகமாக இருந்து, பின்னர் வேளாண் சமூகமாக மாறிய இம்மக்களின் தாய்த் தெய்வ வழிபாட்டுச் சிந்தனைகள் பற்றி உலகெங்கிலும் உள்ள ஆய்வாளர்கள் கட்டுரைத்து ள்ளனர். நதிக்கரை நாகரிக சமுதாயங்களில் இத்தாய் தெய்வ வழிபாடும் தலைமை வழிபாடுகளுள் ஒன்றாக இருந்தமைக்குப் பரவலாகச் சான்றுகள் கிடைத்துள்ளன. வழிபாட்டு நிலைக்குத் தாய் உயர்த்தப்பட்டமைக்கான காரணங்கள் குறித்து அறிஞர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

'வேளாண் தொழில் பெண்களின் கண்டுபிடிப்பு. அதன் காரணமாகவே பெண்கள் வழிபாட்டு நிலையைப் பெற்றனர்' என்பர் சிலர். சிந்து சமவெளியில் கிடைத்த முத்திரை வடிவத்தையும் குப்தர் கால சுடுமண் வடிவம் ஒன்றையும் இதற்கான சான்றுகளாக அவர்கள் முன்வைக்கின்றனர். இந்த முத்திரையில் பெண்ணொருவரின் பிறப்புறுப்பிலிருந்து செடியொன்று முளைத்து வருவதாக காட்டப்பட்டுள்ளது. சுடுமண் வடிவத்தில் பெண்ணின் கழுத்திலிருந்து தாமரை முளைத்துள்ளது. இவை இரண்டுமே பெண்ணின் தாய்மைப் பண்பை, வளமைப் பண்பை உணர்த்துவனவாகக் கொள்வதே பொருத்தமாக அமையும். பெண்ணின் கருவுயிர்க்கும் நிலையே அவளைத் தெய்வமாய் வழிபடும் நிலைக்கு உயர்த்தியதேயன்றி, பயிர்த்தொழில் கண்டுபிடிப்பல்ல என்பது இந்நூலாசிரியர்களின் துணிபாகும். அறிஞர்களால் தமிழ் நாகரிகமாக அடையாளப்படுத்தப்படும் சிந்து சமவெளியில் தாய்த் தெய்வமாக கருதப்படும் சுடுமண் வடிவங்கள் பலவாகக் கிடைத்துள்ளன. இத்தாய் தெய்வ வழிபாடே பெண்தெய்வ வழிபாட்டின் தோற்றவாயில் எனலாம்.

## கொற்றவை

தமிழர் தம் தொல்இலக்கண நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்திலேயே கொற்றவை நிலையாகப் பெண்தெய்வ வழிபாடு குறிப்பிடப்பட்டுள்ளது. போருக்கு செல்வோர் கொற்றவையின் பெருமைகளைக் கூறி அத்தெய்வத்தை வழிபட்டுச் செல்லுதலே கொற்றவை நிலை. இக்கொற்றவை தெய்வம் எப்படி வடிவமைக்கப்பட்டிருந்தது என்பதற்கான தடயங்களைத் தொல்காப்பியத்திலோ, பரிபாடல், கலித்தொகை, திருமுருகாற்றுப் படை, தவிர்த்த காலத்தால் முற்பட்ட சங்க இலக்கியங்களிலோ காணமுடியவில்லை. சங்க மறவர்களால் போர்த் தெய்வமாகக் கொண்டாடப்பட்ட கொற்றவையை 'வெற்றிவெல் போர்க் கொற்றவை' என்று பரவுகிறது திருமுருகாற்றுப்படை. கொற்றியென்றும் அறியப்பட்ட இவ்வம்மை பெருங்காட்டில் பேய்கள் சூழக் குடியிருந்ததாகக் கலித்தொகை கூறுகிறது. இக்கொற்றவைக்கென திட்டமான வடிவமைப்பு இருந்ததை 'கொற்றவை கோலம் கொண்டோர் பெண்' எனும் பரிபாடல் அடியால் அறியலாம்.

கொற்றவையின் மகனாக முருகனைச் சுட்டும் திருமுருகாற்றுப்படை, அவரைக் 'கொற்றவ சிறுவ' 'பழையோள் குழவி' என்றழைத்து சிறப்பு செய்கிறது. இப்பழையோள் என்ற சொல் கொற்றவையின் காலத்தால் முற்பட்ட நிலையை உறுதி செய்வது கவனிக்கத்தக்கது. முருகாற்றுப் படைக்குக் காலத்தால் முற்பட்ட சங்க நூலான பெரும்பாணாற்றுப் படையில் 'சேய்' எனுஞ் சொல்லால் குறிக்கப்படும் முருகனைப் பயந்தபெருவயிற்றுத் துணங்கையஞ் செல்வியாகக் கொற்றவை வெளிப்படுகிறார். இவ்விலக்கியமும் தீண்டி வருத்தும் தெய்வங்கள் சூழக் கொற்றவை இருந்ததைக் குறிப்பிடுகிறது. இக்குறிப்புகளையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது தொடக்க காலத் தமிழினம் கொற்றவையைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடமர்ந்த மறவர் தெய்வமாக, போர்க்கடவுளாக கொண்டிருந்தமையைத் தெளிவாக உணரலாம். இதனால் 'ஓங்குபுகழ் கானமர் செல்வி' என்று அகநானூறு குறிப்பதும் இவ்வம்மையையே எனத் தெளியமுடியும். இதற்கு மணிமேகலையும் காடமர் செல்வியின் கழிபெருங் கோட்டங் காட்டித் துணையாகிறது. இவ்வம்மை குறிஞ்சிப் பெண்களாலும் வழிபடப்பட்டமையை 'அடுக்கத்து விறல் கெழு சூலி' என்னும் குறுந்தொகை பாடலடி தெளிவு செய்கிறது.

குறிஞ்சித் தெய்வமான முருகன் கொற்றவையின் மகன் என்பது சங்க கலத்திலேயே அறியப்பட்டிருந்த செய்தியாகும். முருகனை சிவபெருமானின் மகனாக அறிமுகப்படுத்தும் கலித்தொகைப் பாடலடியைப் பெரும்பாணாற்றுப் படை செய்தியுடன் இணைத்துப் பார்த்தால் சிவன், கொற்றவை தாய் தந்தையாகவும் முருகன் அவர்தம் மகனாகவும் சங்க மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழிபட்டமை தொளிவாகத் தெரியவரும்.

ஆனால் இவ்விலக்கியங்கள் எவற்றிலும் சிவபெருமானின் மனைவியாகக் கொற்றவையோ, கொற்றவையின் கணவராக சிவபெருமானோ சுட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முருகனை வைத்தே அம்மையும் அப்பனும் இணையும் சங்க அதிசயம் கூர்ந்து சிந்திக்கத் தக்கது. பல்லவர் காலத்தில் வழக்கிற்கு வந்த சோமஸ்கந்தர் தொகுதிக்கு இச்சங்க சிந்தனையே தூண்டுகோலாய் அமைந்திருக்கலாம்.

அணங்குகள், வரையர மகளீர், சூரர மகளீர், சுவர் பாவைகள், கடல்கெழு செல்வியெனச் சிறுதெய்வ வணக்கமாகவும் பெண் தெய்வ வழிபாடு சங்க சமுதாயத்தின் ஒருபால் கிளர்ந்திருந்ததைப் பாடலடிகள் உணர்த்தினாலும், தனிப்பெருந் தெய்வமாய் தமிழர் வணங்கியது கொற்றவையையே என்பது தெளிவான உண்மையாகும்.

## உமை

சங்க நூல்களாக அறியப்பட்டாலும், சங்க காலத்தைத்தொடர்ந்தமைந்தகாலகட்டத்தில்எழுந்த இலக்கியங்களாகவே இன்றைய ஆய்வாளர்களால் அடையாளப்படுத்தப் பட்டிருக்கும் கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகிய மூன்றும் உமையை அறிமுகப்படுத்துகின்றன. இம்மூன்று இலக்கியங்களிலுமே உமை சிவபெருமானின் மனைவியாகக் காட்டப்படுகின்றார்.

இமயத்தை வில்லாக்கிய, கங்கையைத் தலையிலேற்ற இறைவன் உமையுடன் சேர்ந்து அமர்ந்திருந்த உயர் மலையைப் பத்து தலைகள் கொண்டிருந்த அரக்கர் அரசன் அசைத்த தகவலைத் தருகிறது கலித்தொகை. இதில் சிவபெருமானின் மூன்று செயல்கள் இடம் பெருகின்றன. இம்மூன்று செயல்களுக்குமே தனித் தனி இறைத்தோற்றங்களைப் பல்லவர் காலச் சிற்பிகள் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதும் அம்மூன்றினுள் திரிபுரம் எரித்தமை தவிர்த்த ஏனைய இரண்டு செயல்களிலும் சிவபெருமானுடன் உமையும் இடம்பெற்றுள்ளார் என்பதும் இங்கு நினைக்கத் தக்கன.

சிவபெருமான் உமையைத் திருமணம் செய்துக் கொண்டதைப் பரிபாடல் தெரிவிக்கிறது. ஆனால் முருகன், கார்த்திகை மாதர் அறுவரிடத்தே நீலகண்டப் பெருமானுடைய குமாரனாகப் பிறந்ததாகக் கூறுகிறது. இறைவனும் இறைவியும் இணைந்திருக்கும் அம்மையப்பர் தோற்றத்தை அறிமுகப்படுத்தும் திருமுருகாற்றுப் படை இதை வழிமொழிகிறது.

சங்க காலத்தின் பிற்பகுதியிலோ அல்லது சங்க காலத்திற்குப் பிற்பட்டோ உருவான தொன்மங்களின் தாக்கத்தையே இவ்விலக்கியங்கள் பதிவு செய்துள்ளதாகக் கருதலாம். உமையை முன்னிறுத்தும் இம்மூன்று இலக்கியங்களும் கொற்றவையை படம் பிடிப்பது குறிப்பிடத்தக்கது. சங்கத்தமிழரின் கொற்றவை, ஆலமர் செல்வன், முருகன் என்ற வழிபாட்டு நிலையில் ஆரியக் கலப்பு ஏற்பட்டதையும் அதன் விளைவாகக் கொற்றவையின் இடத்திற்கு உமை வரத் தொடங்குவதையும் முக்கட் செல்வர், ஈர்ஞ்சடை அந்தணனாக பைங்கட் பார்ப்பனனாக வர்ணிக்கப்படத் தொடங்குவதையும் இவ்விலக்கியங்கள் இனிதே உணர்த்துகின்றன.

முருகனை ஓரிடத்தில் 'கொற்றவை சிறுவ' என்றழைக்கும் முருகாற்றுப்படை, மற்றோரிடத்தில் அவரை 'மலைமகள் மகனே' என்றும் விளிக்கிறது. இறைவன் உயிர்ப்பை கார்த்திகை மாதர் கருவுற முருகன் பிறந்தார் என்றும் கூறுகிறது. முருகன் கார்த்திகை மாதர் பயந்தவரென்பதை விளக்கமுறச் சொல்லும் பரிபாடல் மற்றோரிடத்தில் அவர் நீலகண்டோருக்கும் மாசிலோளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தவர் என்கிறது. இந்த மாசிலோள் உமையா, கொற்றவையா என்பதில் தெளிவில்லை. முருகனின் பிறப்புப் பற்றி இவ்விரு இலக்கியங்களும் முரண்பட்ட தகவல்களைக் கூறுவதற்கு அக்காலத்து வழங்கிய சமயத் தொடர்பான சிந்தனைக் கலப்பே காரணமெனலாம். கலித்தொகை உள்ளிட்ட இம்மூன்று இலக்கியங்களும் தேவார காலத்திற்கு முற்பட்டவை என்பதற்கும் இச்சிந்தனை கலப்புகளின் பதிவுகளே உறுதியான சான்றுகளாகின்றன.

முருகன் கொற்றவையின் மகனே என்ற சங்க சமூகம் சார்ந்த பெரும்பாண் ஆற்றுப்படையின் தெளிவான தீர்க்கமான அறிவிப்பையும் விடமுடியாமல் அதே சமயம் சமகாலச் சிந்தனைகளின் தாக்கத்தையும் மறுக்க கூடாமல் இவ்விலக்கியங்கள் இருகாலத் தரவுகளையும் ஒழுங்குறத் தந்திருக்கும் வரலாற்று நேர்மையைப் பாராட்டாது இருக்க முடியவில்லை. சங்க காலத்தில் கொற்றவையும், சங்கக் காலத்தை தொடர்ந்து அமைந்த காலத்தில் கொற்றவையோடு உமையும் தமிழர் தம் முதன்மைப் பெண்தெய்வங்களாக விளங்கினர்.

போர்த் தெய்வமான கொற்றவை, போரையே தொழிலாகக் கொண்டிருந்த இனமரபுக் குழுக்களின் ஆட்சியில் முதன்மைத் தெய்வமாக அமைந்ததும் சமுதாய வளர்ச்சி நிலைப்பெற்ற காலத்து அமைதியான வேளாண் வாழ்க்கையில் உமை ஏற்றம் பெற்றதையும் ஆனால் அதே காலத்தில் ஊரகப் பகுதிகளில் இனமரபுக் குழுக்களின் மாடுபிடிச் சண்டைகள் தொடர்ந்த நிலையில் அங்குக் கொற்றவை தொடர்ந்து முதன்மையில் இருந்ததையும் சிற்பங்களும் கல்வெட்டுகளும் பின்னால் வந்த இலக்கியங்களும் மிகத் தெளிவாக உணர்த்துகின்றன.

## சிலப்பதிகாரத்தில் பெண்தெய்வச் சிந்தனைகள்

கொற்றவை, உமை, சிவபெருமான் எனும் மூன்று தெய்வங்களுக்கும் இடையில் ஏற்பட்ட பிணைப்பையும், உமையின் வரவால் கொற்றவைக்கு ஏற்பட்ட பின்னடைவையும், இப்பின்னடைவையும் தாண்டி ஊரகப் பகுதிகளில் கொற்றவை பெற்றிருந்த ஏற்றத்தையும் சிலப்பதிகாரம் மிக அருமையாகப் பதிவு செய்துள்ளது. பெண் தெய்வ வழிபாட்டின் படிநிலைகளை சமுதாயஞ் சார்ந்த சமயப் படப்பிடிப்பாகக் காட்டியிருக்கும் இளங்கோவடிகளின் வரலாற்று நோக்கு வியந்து போற்றுதற்குரிய ஒன்றாகும்.

சிலப்பதிகாரத்தில் மூன்று இடங்களில் மட்டுமே உமை குறிக்கப்படுகிறார். இம்மூன்று இடங்களிலுமே சிவபெருமானின் ஒரு பாதியாக அவ்வம்மை விளங்கும் செய்திதான் திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளது. சிவபெருமானின் கோயில்களைச் சுட்டும் இடங்களில்கூட உமைக்கு இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முக்கட் செல்வராகப் புறநானூறு அறிமுகப்படுத்தும் சிவபெருமானின் நெற்றிக்கண், சிலம்பில் நுதல்விழியாகச் சிறப்பிக்கப்படுகிறது. இந்நுதல் விழி பரிபாடலில் கொற்றவைக்கான அடையாளமாகக் கூறப்பட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது. சிலப்பதிகாரத்தில் சிவபெருமானுக்கும் கொற்றவைக்கும் பொதுவான அடையாளமாகச் சுட்டப்படும் இந்நுதல்விழி பத்திமை காலத்தில் மீண்டும் சிவபெருமானுக்கே உரிய தனிச்சிறப்பாய் மாறுகிறது. இவ்விலக்கிய பதிவுகள் தொன்மங்களின் காலநிரலான வளர்நிலைகளையும் அவை சமய ஒழுகலாறுகளில் ஏற்படுத்தும் தற்காலிக நிரந்தரத் தாக்கங்களையும் வரலாற்று ஒழுங்குடன் எடுத்துதோதுகின்றன.

உமையை மூன்று இடங்களில் மட்டும் சுட்டும் இளங்கோவடிகள் கொற்றவை வழிபாட்டை ஒரு கதையாகவே அமைத்திருக்கின்றார். 'வேட்டுவ வரி' என்ற தலைப்பில் அமையும் இக்காதை காட்டில் அமைந்திருந்த 'ஐயை' என்று அழைக்கப்பட்ட கொற்றவை கோட்டம் சார்ந்து நிகழ்ந்த மறவர் செயல்பாடுகளை முன்வைக்கிறது. இக்காதையின் தரவுகளைக் கொற்றவையின் தோற்றம் / வழிபாட்டு முறை என இரண்டாய்ப் பகுத்துப் பார்ப்பது அக்காலக்கட்ட பெண்தெய்வ வழிபாட்டின் தன்மைகளைத் தெளியவும் சிலப்பதிகாரத்தின் காலத்தை உணரவும் வழிகாட்டும்.

கொற்றவை தெய்வம் எப்படியிருந்தது என்ற கேள்விக்கு முதன் முதலாகச் சிலப்பதிகாரமே விரிவான விடையிறுக்கிறது. பாம்புக்குட்டி வடிவிலமைந்த தங்க நாணல் கட்டப்பட்ட நெடிய சடை (கரண்ட மகுடம்); சடையில் பிறைநிலவெனப் பன்றியின் தந்தம்; உடன் வெள்ளிய மலரிதழ்கள் நெற்றியில் இமைக்காத கண் பவழம் போல் வாயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்சிரிப்பும் கொண்டவள்; நஞ்சுண்டதால் கருத்த கழுத்தில் புலிப்பல் தாலி; மார்பகங்களை பாம்புக் கச்சால் மறைத்தவள்; வளைகள் அணிந்த கைகளில் சூலமும் வளைக்கப்பட்ட வில்லும் வெற்றியையுடைய வாளும் சங்கும் சக்கரமும் தாமரையும் கொண்டவள்; யானைத் தோல் போர்த்தவள்; இடையில் புலித்தோல்; சிங்கத்தோல் உடுத்தவள்; கால்களில் இடப்புறம் சிலம்பும் வலப்புறம் கழலும் அணிந்தவள்; கை வாளால் மகிடனை அழித்து அவன் தலைமீது நின்றவள்; சிங்கம் கலைமான் இவள் வாகனங்கள்.

ஓர் ஆகமத்தைப் போலக் கொற்றவையின் வடிவத்தை ஒரு கூறு விடாமல் வர்ணித்துள்ள இளங்கோவடிகள் கொற்றவை வழிபாட்டையும் தெளிவுற விளக்குகிறார். கொற்றவை கோட்டத்தில் தேவி கலைமானின் மீது எழுந்தருளியிருந்தார். அவர் திருமேனிக்கு வண்ணம் சந்தனம் பூசப்பெற்றன. அம்மையின் கொடி சிங்கக் கொடி தேவியின் திருவுருவத்திற்கு முன் பல்வகை மரங்கள் சூழ்ந்த பலிதளம் இருந்தது. அதில் கொற்றவைத் தரும் நன்மைகளுக்கு வேட்டுவர் தரும் விலையான மலரும் அவரை துவரை போன்ற புழுக்கு கறிகளும் எள்ளிள் கசிவும் நிணச்சோறும் பலியுணவாக இடம்பெற்றன. பூ, புகை, வாசனைப் பொருட்கள், பந்து, கழங்கு, பாவை ஆகியன வழிபாட்டில் இடம்பெற்றன. கிளி, கானக்கோழி, மயில் ஆகிய பறவைகள் இறைவியின் திருமுன் விடப்பட்டன. கொற்றவையை வழிபட்டவர்கள் அம்மையை, அமரி (அலங்கரித்தல் இல்லாதவள்), குமரி (அழியாதவள்), கௌரி, சமர் (போரில் வல்லவள்), சூலி (சூலத்தை உடையவள்), நீலி (நீல நிறமானவள்) எனப்பல பெயர்களில் விளித்து மகிழ்ந்தனர். கொற்றவை திருமாலுக்குத் தங்கையென்றும் கொண்டாடினர். பறை, சின்னம், துத்தரிக் கொம்பு, குழல், மணி முதலிய இசைக்கருவிகள் ஒலித்தன.

வழிபாட்டிற்குப் பிறகு வேட்டுவ மக்கள் பங்கேற்ற கூத்து நடந்தது. அதில் கொற்றவையின் பெருமைகள் பேசப்பட்டன.

1. நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானின் ஒரு பாகத்தை ஆள்பவள்.
2. தன் சடையில் திங்களைக் கொண்டவள்
3. கானத் தெருமையின் தலைமேல் நிற்பவள்
4. அசுரர் வாட, அமரருக்காக மரக்கால்களின் மேல் நின்று வாளமலை ஆடியவள்
5. சிவபெருமான், திருமால், நான்முகன் ஆகிய மூவரின் இதயத்திற்கும் விளக்கானவள்
6. திருமாலின் தங்கை

இளங்கோவடிகள் தொகுத்துத் தரும் கொற்றவைச் செய்திகள் அவர் காலகட்டத்தில் தமிழ்நாட்டில் கொற்றவை வழிபாடு மிகச் சிறந்த நிலையில் இருந்தமையைத் தெளிவுப்படுத்துகின்றன. கொற்றவையை மட்டுமே கொண்டாடிய சங்க காலத்திற்குப் பிறகு வந்த இலக்கியமென்பதால் இதில் இடம்பெற்றுள்ளார். சில அறிஞர்கள் கருதுமாறு போல இவ்விலக்கியம் தேவார காலத்திற்குப் பிற்பட்டதாக இருக்குமெனில் இளங்கோவடிகள் கொற்றவைக்குத் தந்த முக்கியத்துவத்தை உமைக்கும் தந்திருப்பார் அல்லது உமையின் பெருமைகள் கொற்றவையை விஞ்சியிருக்கும். இவ்விரண்டும் இல்லாத நிலையில் பரிபாடல், முருகாற்றுப் படை போல சிலப்பதிகாரத்தையும் தேவார காலத்திற்கு முற்பட்ட இலக்கியமாகவே கொள்ள முடியும். இந்த கால நிர்ணயத்தை சிலப்பதிகார உள்ளடக்கமே வலியுறுத்திப் பேசுகிறது. உமையின் நுழைவும் கொற்றவையின் பெருமையும் காலக் கட்டாயமாக இவ்விலக்கியத்தில் பதிவாகியுள்ளன.

தொல்காப்பியத்திலேயே கொற்றவை இடம் பெற்றுவிட்ட போதும் அவரை சிவபெருமானின் மனைவியாகச் சிலப்பதிகாரமே முதன் முதலாக நேரடியான முறையில் உறுதிப்படுத்துகிறது. சிவபெருமானின் அத்தனை புறக்குறியீடுகளையும் அம்மை பெற்றுச் சிறக்கிறார். தமிழ்நாட்டு இலக்கிய வரலாற்றில் முதன் முறையாகத் திருமாலின் தங்கையாக கொற்றவை அறிமுகமாவதும் திருமாலின் அடையாளக் கருவிகளான சங்கையும் சக்கரத்தையும் தம் கருவிகளாக பெற்றுச் சிறப்பதும் சிலப்பதிகாரத்தில் தான்.

இத்தனைக்கும் மேலே இன்னும் ஒருபடி கூடுதலாகப் போய் சிவபெருமான், விஷ்ணு, நான்முகன் ஆகிய மூவரின் அகமலருக்கும் கொற்றவையே விளக்காய் நிறைந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுவதைப் பார்க்கும் போது சங்க காலத்தை தொடர்ந்தமைந்த காலகட்டத்தில் ஆரியஞ்சார்ந்த சமய சிந்தனைகளுக்கும் தமிழினஞ் சார்ந்த சமய சிந்தனைகளுக்குமிடையே நிலவிய போட்டி மனப்பான்மையை மிகத் துல்லியமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிய முடிகிறது. சிலப்பதிகாரக் கால வேட்டுவர்கள் 'கண்ணுதலோன் பாகத்து மங்கையுருவாய், மறையேத்தவே நிற்பாய்' என்று முன்னிலைப் பரவலாய் இந்தப் போட்டியின் உச்ச நிலையை படம் பிடிக்கிறார்கள். மறைகள் வழிவந்த உமையை ஏற்க விழையாத மண்ணின் மைந்தர்கள் தங்கள் மண்ணோடு மணக்கும் கொற்றவையை அந்த மறைகள் ஏற்றுப் போற்றுவதே முறை எனுமாறு போல இப்பாடலடிகள் கண்சிமிட்டுகின்றன.

தமிழ்ச் சிந்தனைகளுக்கும் உள்நுழைந்த ஆரியச் சிந்தனைகளுக்கும் நிகழ்ந்த உராய்வில் மெல்ல மெல்ல ஆரிய சிந்தனைகள் வலுப்பெற்றுக் கொற்றவையின் இடத்தை உமைப் பெற்றாலும் சில காலம் தொடர்ந்து கொற்றவையும் துர்க்கை என்று பெயர்மாறித் தனித்தன்மையுடன் விளங்கியமையைப் பல்லவ, பாண்டியர் கால சிற்பங்கள் தெளிவாக உணர்த்துகின்றன மாமல்ல புரத்திலும், காஞ்சிபுரத்திலும், பனைமலையிலும் சிலப்பதிகார வண்ணணைகளை வடிவங்களா கவே பார்க்க முடிவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

பல்லவர் பகுதிகளில் துர்க்கையின் சிற்பங்கள் வளமையுற வேர்விட்டமைக்கு வலிமையான காரணமொன்றும் இருந்தது. சங்கத் தொடராய்ப் பல்லவ பூமியில் வெட்சி, கரந்தைப் போர்கள் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கக் காலம் வரைத் தொடர்ந்து நிகழ்ந்தமையை நூற்றுக்கணக்கில் கிடைத்திருக்கும் பல்லவர் கால நடுகற்கள் உறுதி செய்கின்றன. கொற்றவையை அறிமுகப்படுத்தும் தொல்காப்பியம், அம்மையைப்போர்தெய்வமாகவே காட்டுவதும் அக்கொற்றவையின்னிலையைப் போற்றியவர்கள் வெட்சிமறவர்களேஎன்பதும்இங்கு நினைக்கத் தக்கன. இலக்கியம், கல்வெட்டு, சிற்பம் எனும் முத்துறை தடயங்களும் இக்கால கட்டத்தின் பெண்தெய்வ வழிபாட்டு வரலாற்றை முறையாகப் பதிவு செய்திடப் பெருந்துணையாகின்றன.

## அன்னையர் எழுவர்

தமிழ்நாட்டுச் சமய வரலாற்றின் அடுத்த இயலையும் இளங்கோவடிகளே எழுதித் தருகிறார். தமிழ்நாட்டு இலக்கியங்கள் அனைத்துமே மிகச்சிறந்த வரலாற்றுக் களங்கள் என்றாலும் சிலப்பதிகாரம் தனித்தன்மையது. இம்மக்கள் மதுரை காண்டத்தில், பாண்டியன் அரண்மனை வாயிற்காவலன் வாய்மொழியாக அன்றிருந்த சமயச் சிந்தனைகளைப் பிரதிபலித்துள்ளது. இந்த இலக்கியத்தில் தான் முதன் முறையாக 'அன்னையர் எழுவர்' வழிபாட்டு சிந்தனையின் விதையைப் பார்க்க முடிகிறது.

'அறுவருக்கு இளையநங்கை, இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு, சூருடை கானகம் உகந்த காளி, தாருகன் பேருரம் கிழித்த பெண்' என்று புதியதொரு பெண் தெய்வத்தையும் அதன்வழி அன்னையர் எழுவர் வழிபாட்டின் தொடக்கத்தையும் சிலம்பின் வழக்குரை காதை வெளிச்சப்படுத்துகிறது. அறுவருக்கு இளைய நங்கை என்பதால் அன்னையர் எழுவரில் இளையவரான பெண்தெய்வம் என்பது பெறப்படும். இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு யாரென்பதைச் சிலப்பதிகாரத்திற்குச் சற்று பின் வந்த அப்பரும், சம்பந்தரும் கூட தங்கள் பதிகங்களில் பல இடங்களில் பதிவு செய்துள்ளனர்.

**'ஆடினார் பெருங்கூத்து காளி காண'**

**'காளி முன் காணக் கானிடை நடனஞ்செய்த'**

சிலப்பதிகாரமே மூன்றாவது சொற்தொடரில் இளைய நங்கையான இவ்வணங்கை 'காளி' எனப் பெயரிட்டு அறிமுகப்படுத்துகிறது. நான்காவது சொற்றொடர் இக்காளி தாருகனின் பேருரம் கிழித்தவள் என்கிறது. இந்த செய்தியையும் பின்னால் வந்த அப்பரும் சம்பந்தரும் உறுதிப்படுத்துகின்றனர்.

**'தாருகன் தன்னுயிர் உண்ட பெண்'**

**'வென்றிமிகு தாரகன் ஆருயிர் அடங்கக்**
**கன்றிவரு கோபம் மிகு காளி'**

சிலப்பதிகாரமும் தொடர்ந்து தேவார பதிகங்களும் சுட்டும் 'காளி'யைக் காரைக்காலம்மையார் குறிப்பிடுகிறார். பேயொன்று தம் பிள்ளைக்குக் காளியென்று பேரிட்டதாம். இறைவனாடும் காடு அணங்காடும் காடாம். காரைக்காலம்மையின் இக்கூற்றுக்கள் சிலப்பதிகார செய்திகளை உறுதிப்படுத்தும் பக்கத் துணையாவதுடன் அவர் காலத்தையும் உறுதி செய்கின்றன. ஏறத்தாழ சிலப்பதிகாரத்தின் காலமும் காரைக்காலம்மையின் காலமும் ஒன்றெனலாம்.

## காளி

அன்னையர் எழுவரின் பெயர்கள் அனைத்தும் இவ்விலக்கியங்கள் எவற்றிலும் இடம்பெறவில்லை ஆயினும் 'காளி' தனியிடமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிசிறப்பும் பெறுவது தமிழ்நாட்டின் காளி வழிபாட்டிற்கான தோற்றுவாயாக அமைவதுடன் தமிழ்நாட்டின் ஆடற்கலை வரலாறு பற்றிய புதிய சிந்தனைகளுக்கும் வித்திடுவது தெளிவு. இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு எனும் சிலம்பின் அடியும், 'இறைவனாடும் காடு அணங்காடும் காடு' எனும் காரைக்கால் மொழிவும் ஆழச் சிந்திக்கத் தக்கன. பத்திமை காலத்திற்கு முன் ஆடல் தலைமை அணங்கிடம் இருந்தமையையும் போட்டி ஒன்றின் வழியாக அத்தலைமை தகுதி இறைவனுக்கு மாற்றப்பட்டமையையும் இந்தக் காலக் கட்ட நிகழ்வுகளாக இலக்கியப் பதிவுகள் தெளிவு செய்கின்றன.

'அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணி பிடர்த்தலை பீடம் ஏறிய மடக்கொடி வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை' யைக் கூறிய பிறகே, காளியைப் பற்றிய செய்திகள் பேசப்படுவதன் மூலம் கொற்றவையான துர்க்கைக்கு அடுத்த நிலையிலேயே இவ்வன்னையர் எழுவர் வழிபாடு இருந்ததென்பதைச் சிலப்பதிகாரம் நன்கு விளக்குகின்றது.

அன்னையர் எழுவருள் காளியை உள்ளடக்கி அறுவர்க்கும் அவரை இளைய நங்கையாக்கிச் சிறப்புச் செய்யும் சிலப்பதிகாரச் சிந்தனை தேவார காலத்தில் மாற்றம் பெறுவதைப் பார்க்க முடிகிறது. அன்னையர் எழுவருள் மகேசுவரி (சிவபெருமானின் மனைவி), வைஷ்ணவி (திருமாலின் மனைவி), கௌமாரி (முருகனின் மனைவி), பிராமி (நான்முகனின் மனைவி), வராகி (வாரகப்பெருமானின் மனைவி), இந்திராணி (இந்திரனின் மனைவி) எனும் இவ்வறுவரும் தமிழ்நாட்டு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த ஆண் தெய்வங்களின் மனைவியர்கள். காளி மட்டுமே இறைவியின் அம்சமாகத் தோன்றியவள். அரக்கர்களை அழிப்பதற்காகவே தோற்றுவிக்கப்பட்டவள். அதனாலேயே சிலம்பு அவளை அறுவருக்கும் இளையநங்கை என்கிறது.

எவருடைய மனைவியாகவுமின்றி இறைவியின் அம்சமாகத் தோன்றிய காளியை அன்னையர் எழுவருடன் சில காலமே வைத்திருந்த சமய மரபுகள் அவளை அக்கூட்டத்திலிருந்து பிரித்து தனிமைப்படுத்தி தனியொரு தெய்வமாக்கி உயர்நிலைக்கு நகர்த்தின. அன்னையர் எழுவருள் காளியைத் தவிர வேறு யாருக்கும் சிறப்புச் செயற்பாடுகள் அமையவில்லை. ஆகமங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் இவர்கள் உடன் கூட்டத் தெய்வங்களாக மட்டுமே அறியப்படுவது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

தாரகன், சும்பர், நிசும்பர், எனும் அரக்கர்களை அழிப்பதற்காகவே காளி உருவாக்கப்பட்டதாகப் பிற்கால ஆகமங்கள் போதிக்கின்றன. சிவபெருமானை ஆடற்கலையின் தனிப்பெருந் தெய்வமாக உயர்த்தவும் இக்காளி பயன்பட்டிருப்பதை இங்கு எண்ணிப்பார்க்கலாம். தொன்மங்கள் வளர்ந்து கிளைத்த நிலையில் காளி எழுவர் அன்னையர் குழுவிலிருந்து விலகித் தனிபெருந் தெய்வமாகிறார். அன்னையர் எழுவர் தொகுதியில் காளியின் நகர்வால் ஏற்பட்ட வெற்றிடத்தை சாமுண்டி எனும் புதிய பெண்தெய்வம் கொண்டு நிரப்பிய சமயச் சூழலை அப்பர் மறைமுகமாகத் தம் பதிகமொன்றில் பதிவு செய்துள்ளார். 'சாமுண்டி சாமவேதம் கூத்தொடும் பாடவைத்தார்' எனும் நாவுக்கரசரின் சுட்டல் சாமுண்டி எனும் புதுப்பெயரைப் பெண்தெய்வ வழிபாட்டிற்கு வழங்குகிறது.

அப்பர் இச்சாமுண்டி எனும் பெயரால் குறித்தது காளியையா அல்லது வேறொரு பெண்தெய்வத்தையா என்பதைத் தெளிவுற அறியக்கூடவில்லைஎன்றாலும்பிற்காலஆகமங்கள் இச்சாமுண்டியை இயமனின் மனைவியாக்கி இயமி என்றும் பெயர் சூட்டி அன்னையர் எழுவர் தொகுதியில் அமர்த்தி விடுவதைப் பார்க்க முடிகிறது. தமிழ்நாட்டின் மிகத் தொன்மையான அன்னையர் எழுவர் சிற்பத் தொகுதிகள் அனைத்துமே இச்சாமுண்டியைக் கொண்டுள்ளன. திருக்கோளக் குடித் தொகுதியிலுள்ள சாமுண்டியின் திருவடிக் கீழ் எருமையின் தலையிருப்பது குறிப்பிடத்தக்கது. தேவாரக் காலத்து காளி வண்ணணைகளை இச்சாமுண்டியின் வடிவம் அப்பிடியே பெற்றிருப்பதும் கூர்ந்து நோக்கத்தக்கது.

**'பைதற் பிணக்குழைக் காளி'**

**'கோபம் மிகு காளி'**

**'கத்துங் காளி'**

சிலப்பதிகாரக் காலத்தில் அன்னையர் எழுவருள் ஒருவராக அறிமுகமாகும் காளி தேவார காலத்தில் தனித் தெய்வமாகிறார். அவர் இடத்திற்கு வரும் புதிய நுழைவான சாமுண்டி காளியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைகளைப் பெற்றவராகவே அமைந்து அன்னையர் எழுவர் தொகுதியில் சிறப்பிடம் பெற்றுக் கூட்டத்தின் நடுவிலும் தனித்தமையும் வாய்ப்பைப் பெறுகிறார். இந்த இடமாற்றங்களுக்கிடையில் தேவார வீச்சால் உமை மிக உயர்ந்த நிலைக்கு கொண்டுச் செல்லப்படுவதைக் காணமுடிகிறது. காரைக்காலம்மையால் கூட விதந்தோதப்பட்ட உமை காலபோக்கிற்கேற்ப அப்பராலும், சம்பந்தராலும் சைவ உலகின் முதற்பெண் தெய்வமாக சிவபெருமானின் உரிமையுடைய மனைவியாக அடையாளப்படுத்தப் படுகிறார். ஆறு திருமுறைகளும் உமையை அடிமுதல் முடிவரை வண்ணித்து களிக்கின்றன. இறைவனின் திருவிளையாடல்களுடன் உமையும் இணைக்கப்படுவதைப் பார்க்கின்றோம். இறைவன் ஆடலுக்கு அம்மை பாடுகிறார். உடன் ஆடுகிறார். இருவருமாய் இணைந்து பிள்ளையாரைப் பெற்றெடுக்கிறார்கள். முருகனின் தாயாகவும் அம்மை முழுமனதுடன் ஏற்கப்படுகிறார்.

உமையைக் கொண்டாடிப் பரவும் தேவார இலக்கியங்கள் கொற்றவையான துர்க்கையை முழுமையாகக் கைவிடுகின்றன. காளியின் புதுவரவை ஏற்கின்றன. சாமுண்டியை அறிமுகப்படுத்துகின்றன. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியும் காட்டும் இலக்கியம் சார்ந்த தமிழ்நாட்டுச் சமய நிலையில் இடம் பெறும் பெண் தெய்வங்களாக உமை தலைமையேற்க காளி கொற்றவையை நிகர் செய்கிறார். அன்னையர் எழுவர் சாமுண்டியுடன் சப்த மாதர்களாகிறார்கள்.

## கல்வெட்டுக்களில் சிற்பங்களில் பெண் தெய்வங்கள்

கி.பி 250ல் ஆந்திரத்தின் தென்பகுதியிலும் தமிழ்நாட்டின் வடபகுதியிலும் கால்கொண்ட பல்லவராட்சி கி.பி 590 வரை செப்பேடுகளைப் பிராகிருதத்திலும் வடமொழியிலும் வெளியிட்டுள்ள தெனினும் அவற்றுள் ஒன்றிலும் பெண் தெய்வங்கள் இடம்பெறவில்லை. இக்காலக்கட்டத்தில் பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சி நடந்தது. இக்காலத்தைச் சேர்ந்தாகக் கருதப்படும் பூலாங்குறிச்சி கல்வெட்டுகளும் தேவக் குலங்களைக் குறிக்கின்றனவே தவிர பெண்தெய்வங்களைச் சுட்டவில்லை. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் இடம்பெறும் முதல் பெண் தெய்வம் பார்வதியான உமையன்னைதான். திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டையின் மேல்குடைவரையிலுள்ள பல்லவ மன்னர் முதலாம் மகேந்திரவர்மரின் கல்வெட்டு நதிப்பிரியரான சிவபெருமானை அங்கு தனியே விட அஞ்சி மலையரசர் மகளும் உடன் வந்ததாகக் கூறுகிறது. மாமல்லபுரத்து அதிரணசண்டேசுவரத்திலும் காஞ்சிபுரம் மகேந்திரவர்மேசுரம் கோயிலிலும் கிடைக்கும் பல்லவ கல்வெட்டுக்கள் உமையை மலைமகளாகச் சுட்டி இறைவனுடன் உமையும் அக்கோயில்களைத் தங்கள் நிரந்தரக் குடியிருப்புகளாக்கிக் கொள்ளுமாறு வேண்டுகின்றன.

கி.பி ஆறாம் நூற்றாண்டின் இறுதிக்கும் எட்டாம் நூற்றாண்டின் இறுதிக்கும் இடையிலான காலகட்டத்தில் (கி.பி 590-796) தமிழ்நாட்டில் நிலவிய பெண்தெய்வ வழிபாட்டு அமைப்பை அறிய சிற்பங்களே பெருமளவிற்கு உதவுகின்றன. இந்த நூற்றாண்டு வடதமிழ்நாடு பல்லவராட்சியிலும் தென்தமிழ்நாடு பாண்டியர் ஆட்சியிலும் இடைப்பட்ட ஆண்டுகள் முத்தரையர் போன்ற சிற்றரசர்கள் ஆட்சியிலும் இருந்தன.

சங்க மக்களின் முழுமுதற் பெண் தெய்வமாய் விளங்கிய கொற்றவையைத் தேவாரப் பெரியவர்கள் மறந்தபோதும் மக்கள் விடவில்லை. குறிப்பாக வடதமிழ்நாட்டில் கொற்றவை வழிபாடு துர்க்கை வழிபாடாகிச் சீரோடும் சிறப்போடும் தொடர்ந்தது. உமையை ஏற்றுக் கொண்டபோதும் அவரையே சிவபெருமானுடன் உறையும் கருவறைத் தெய்வமாய் அமைத்த போதும் பல்லவ மன்னர்களால் வீரத்தெய்வமான பழங்கொற்றவையை விட்டுக்கொடுக்கக் கூடவில்லை. மக்கள் தெய்வமாக இருந்த காரணத்தாலேயே கொற்றவை தொடர்ந்து கோயில்களில் துர்க்கையாக எழுந்தருள முடிந்தது. கொற்றவை, பல்லவ மண்ணில் மட்டுமல்லாது பாண்டிய மண்ணிலும் தமக்கெனத் தனிக்கோயில் பெற்றார். கோட்டத் தெய்வமாகவும் இருந்தார். வடதமிழ் நாட்டினர் சீராட்டிய அளவிற்கு இல்லையாயினும் தென் தமிழ் நாட்டிலும் அவருக்கு இடமிருந்ததைப் பரங்குன்றம், குன்றக்குடி குடைவரைச் சிற்பங்கள் உணர்த்துகின்றன. தமிழ்நாட்டின் இருபகுதிகளிலும் உமை சோமஸ்கந்தர் தொகுதியில் இடம்பெற்றதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானுடன் இணைந்தமர்ந்து அவரை உமாசகிதராக்கினார். இறைவனின் பெரும்பாலான திருத்தோற்றங்களில் அவர் தேவிஎன்றநிலையிலும் காட்சி தந்தார். புதிய் வரவான எழுவர் அன்னையர் தொகுதி தென்தமிழ் நாட்டில் பெற்ற பரவலான வரவேற்பை வடதமிழ்நாட்டில் பெறக் கூடவில்லை. பாண்டியர் பகுதியில் திருக்கோளக்குடி, குன்னத்தூர், கோகர்ணம், பரங்குன்றம், மலையடிப்பட்டி எனும் ஐந்து குடைவரைகளில் இடம்பெற்ற இத்தொகுதி வடதமிழ்நாட்டில் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் மட்டுமே காணப்படுகிறது.

திருக்குறளில் தலைக்காட்டும் ஜேஷ்டை எவ்வித இலக்கிய பின்புலமும் அற்ற நிலையில் இக்காலக்கட்டத்துப் பெண் தெய்வமாய்த் தமிழ்நாட்டின் இரு பகுதிகளிலும் தோற்றம் காட்டுகிறார். காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலிலும், பரங்குன்றத்திலும் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுக்கால இடைவெளியில் அறிமுகமாகும் ஜேஷ்டை, தனிக் கோயில் தகுதியைப் பெற்றிருந்தமை அத்தெய்வத்தின் வழிபாட்டு முக்கியத்துவத்தை உணர்த்தவல்லதாகும்.

தந்திவர்மப் பல்லவர் காலத்திலிருந்து சோழர்களின் தொடக்க காலம் வரை (கி.பி 796-946) ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டு காலத்திற்குத் தமிழ்நாடெங்கிலும் பரவலாகக் கிடைக்கும் கல்வெட்டுகளைத் தொகுத்தாராய்கையில் பல அரிய தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது 'பிடாரி' எனும் சொல். கல்வெட்டுகளில் பிடாரி என்றும், பட்டாரி என்றும் வழங்கும் இச்சொல் பெண்தெய்வத்தைக் குறிக்கும் பொதுச் சொல்லாகவே வழங்கியுள்ளது. மாயா படாரி, மாகாளத்துப் பிடாரி, துர்க்கா படாரியார், உமா பிடாரி எனும் சொல்லாட்சிகள் இக்கருத்துக்கு அரணாகின்றன.

ஆலம்பாக்கம் கல்வெட்டில் அன்னையர் எழுவர் கோயில் படாரி கோயில் என்றே சுட்டப்படுகிறது. இக்காலக்கட்ட தமிழ் இலக்கியங்களிலோ, இவற்றிற்கு காலத்தால் முற்பட்ட தேவாரப் பதிகங்களிலோ ஆளப்பெறாத இச்சொல் கல்வெட்டுகளில் பெருவழக்குப் பெற்றிருப்பது எளிய மக்களிடையே இச்சொல்லுக்கு இருந்த செல்வாக்கை உணர்த்துவதாய் அமைகிறது. சாத்தம் படாரி, வேளான் படாரி, ஆதித்த படாரி, பட்டம் படாரி என மக்களும் அறியப்பட்டமை இக்கருத்தை உறுதி செய்கிறது. இச்சொல்லுக்கு இணையான ஆண்பாற் சொல்லாக படாரர் எனுஞ் சொல் கல்வெட்டுகளில் ஆண்தெய்வங்களை குறிக்க ஆளப்பட்டுள்ளது. இச்சொற்களே பின்னாளில் பட்டாரகர், பட்டாரகி என்று மாற்றம் பெற்றன. துர்க்கா படாரியார் என்று சீனிவாசநல்லூர்க் கல்வெட்டில் குறிக்கப்படும் துர்க்கை பட்டாராகியாகச் சுட்டப்படுவதும், உமா பிடாரி முதற் பரந்தகர் கல்வெட்டில் உமா பட்டாராகியாக அழைக்கப் பெறுவதும் இதைத் தெளிவாக்கவல்லன.

கல்வெட்டுகள் சுட்டும் பிடாரிக் கோயில்களுள் சில எத்தகு பெண்தெய்வத்தை என்பதை அறியக் கூடவில்லை. இத்தகு கோயில்களுள் குறிப்பிடத்தக்கது நியமத்திலிருந்த மாகாளத்துப் பிடாரிக் கோயில். இன்றைய செந்தலை கந்தேரேசுவரர் கோயின் முன்மண்டபத்தில் நிறுத்தப்பட்டுள்ள தூண்களில் காணப்படும் பல்லவ, பாண்டிய, முத்தரையர் காலக் கல்வெட்டுக்கள் இக்கோயில் தெய்வத்திற்கு நடந்த வழிபாடுகளையும் இவ்வம்மைக்கு அளிக்கப்பட்ட கொடைகளையும் சுட்டுகின்றன. இப்பிடாரியின் திருமுன் நந்தாவிளக்குகள் ஏற்றப்பட்டன. திருவமுது படைக்கப்பட்டது. இத்தேவியின் கோயிலில் ஆராதனை செய்தவர், திருவமுது சமைத்தவர், தூபமும் மணியும் பிடித்தவர், கோயிலைத் தூய்மை செய்தவர், நந்தவனப் பணியாளர் ஆகியோர் இருந்தனர்.

பல்லவ, பாண்டியச் சிற்பங்களிலும் பின்னாளைய பரணி இலக்கியங்களிலும் காணப்படும் கொற்றவைக்குத் தலையறுத்து தரும் காணிக்கைச் செயல் குறித்து ஒரு கல்வெட்டுக் கிடைத்துள்ளது. கம்பவர்மப் பல்லவரின் கல்வெட்டாக அமைந்துள்ள இதில் பட்டைப் பொத்தான் என்பானுக்கு படாரி நன்மை செய்ததென்று நாகன் ஒக்கதிந்தன் நவகண்டங் கொடுத்து, அத்துடன் நில்லாது தன் தலையையும் அறுத்து இறைவியின் பலித்தளத்தில் வைத்த செய்திக் காணப்படுகிறது. தலைக் காணிக்கை நிகழ்ந்துள்ளதால் இந்தப் படாரியை துர்க்கா படாரியாகக் கொள்ளலாம்.

படாரி என்றப் பெயரைப்போலவே துர்க்கை என்ற பெயரும் மக்களுக்கு வழங்கியது. துக்கையன் கிரமவித்தன், துக்கையன் சாத்தன், துக்கையன் ஆட்டி எனும் பெயர்களை இக்காலக் கல்வெட்டுக்களில் பெறமுடிகிறது. துர்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு சிறப்புற அமைந்திருந்தமையைப் பல கல்வெட்டுக்கள் சுட்டுகின்றன. புள்ளலூர்க் கோயிலில் துர்க்கா பட்டாரகிக்குச் சிவபிராமணர் திருவாராதனை செய்தனர். உத்தரமேரூரில் துர்க்கா பட்டாரகிக்கு சென்னடை, விளக்குகள், அர்ச்சனா போகம், ஸ்ரீபலி ஆகிய செலவினங்களுக்காக நிலம் வழங்கப்பட்டிருந்தது. திருவூறல் ஆழ்வார் கோயிலில் எழுந்தருளியிருந்த துர்க்கைக்கு நந்தா விளக்குகள் எரிக்கப்பட்டன. கங்கைக் கொண்டானிலிருந்த ஸ்ரீகைலாயத்து துர்க்கையருக்கு மூன்று சந்திக்கும் சந்தி விளக்குகள் எரிக்கப்பட்டன. கச்சிபேட்டிலிருந்த ஐஞ்சந்தி துர்க்கா பட்டாரகிக்குச் சிறப்பான வழிபாடுகள் அமைந்தன. முற்சோழர் கல்வெட்டுகள் சில, 'காடுகாள்' என்ற பெண்தெய்வத்தைச் சுட்டுகின்றன. இக்காடுகாள் துர்க்கையாகலாம்.

பல்லவர் காலத்தின் தொடக்கத்தில் தனிப்பெருந் தெய்வமாய் தனிக்கோயில்கள் பெற்றுச் சிறந்திருந்த துர்க்கைக்குக் கோட்டத் தெய்வமாகவும் விளங்கும் நிலை இராஜசிம்மர் காலத்தில் தொடங்கியது. பல்லவர்களின் இறுதிக் கால கோயில்களில் விமானத்தின் முன்னமைந்த மண்டபத்தின் வடகோட்டத்தில் துர்க்கைக்கு இடமளிக்கப்பட்டது. இந்த வைப்புமுறை சோழர்களால் மாற்றமின்றித் தொடரப்பட்டது.

சிராப்பள்ளி மாவட்ட ஆலம்பாக்கத்திலும், சென்னை வேளச்சேரியிலும், காஞ்சிபுரம் மாவட்டம் உத்தரமேரூரிலும் எழுவர் அன்னையரைக் குறிக்கும் பழங்காலக் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவற்றுள்ளும் காலத்தால் முற்பட்டது ஆலம்பாக்கம் செல்லியம்மன் கோயில் கல்வெட்டு. திருவொற்றியூரானான இராயர் அலங்காரப் பிரியனால் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட்ட இக்கோயில் இன்றும் நன்னிலையிலுள்ளது. இக்கோயிலிலுள்ள பெண் தெய்வங்களைக் கல்வெட்டு 'ஸப்தமாத்ருக்கள்' என்று அழைக்கிறது. இற்றைநாள்வரை கிடைத்திருக்கும் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் அன்னையர் எழுவருக்கென்றே அமைந்த முதல் தனிக்கோயிலாக ஆலம்பாக்கம் செல்லியம்மன் கோயிலை அடையாளப்படுத்தலாம். வேளச்சேரியிலும் உத்தரமேரூரிலும் கிடைத்திருக்கும் கல்வெட்டுக்கள் அன்னையர் எழுவர் கோயிலில் திருவிளக்கு ஏற்றவும், அத்திருமேனிகளுக்கு திருவமுது படைக்கவும், அர்ச்சனாபோகம், திருப்பலி ஆகியவற்றிற்காகவும் நிலக்கொடை அளிக்கப்பட்ட தகவலைத் தருகின்றன.

தனிக்கோயில் தகுதியைப் பெற்றிருந்த முற்சோழர் காலத்திலேயே அன்னையர் எழுவர் திருமேனிகள் மையக் கோயிலைச் சுற்றியமைந்த பரிவார கோயில்களுள் ஒன்றில் அடைக்கலமானதையும் காணமுடிகிறது. திருக்கட்டளை கந்தேசுவரர் கோயில், கீழையூர் அவனிகந்தர்வ ஈசுவரகிருகம் முதலிய முற்சோழர்கால கோயில்களில் அன்னையர் எழுவருக்கென அமைத்த பரிவாரத் திருமுன்கள் ஆங்காங்கே சிதைவுற்ற போதும் இன்றளவும் அதே கட்டமைப்பில் காணுமாறு உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

உத்தர மேரூர் சதுர்வேதி மங்கலத்தின் குமணப்பாடி ஏரிக்கரையிலிருந்த ஜேஷ்டை கோயிலை ஒரு பழங்கல்வெட்டுக் காட்டுகிறது. திருவையாறு கோயிலில் உள்ள கல்வெட்டொன்று அங்கிருந்த ஜேஷ்டைக்கு திரு நாரண மகாதேவி என்ற சோழ அரசி விளக்கறம் செய்ததை தெரிவிக்கிறது. முற்சோழர் காலத்து பரிவாரக் கோயில்களுள் ஒன்றில் ஜேஷ்டை இடம்பெற்றதைத் திருக்கட்டளை சுந்தரேசுவரர் கோயில் வளாகத்திலுள்ள ஜேஷ்டையின் சுற்றாலைத் திருமுன்னும் திருப்பராய்த்துறை கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றன.

இக்கல்வெட்டில் ஜேஷ்டை திருக்கோட்டைக் கிழத்தி என்று சுட்டப்படுகின்றார். இக்காலக்கட்டத்தைச் சேர்ந்த அற்புதமான ஜேஷ்டை சிற்பங்களை இந்நூலாசிரியர்கள் பல கோயில்களில் கண்டறிந்துள்ளனர். குமணப்பாடியில் கோனேரி நங்கை கோயிலொன்று இருந்ததாகவும் ஒரு கல்வெட்டால் அறியமுடிகிறது. இக்கோனேரிநங்கை எந்தப் பெண்தெய்வத்தைக் குறிக்கிறது என்பதை அறியக்கூடவில்லை.

முதன் முதலாகச் சிலப்பதிகாரத்திலும் காரைக்காலம்மையின் மூத்த திருப்பதிகத்திலும் சுட்டபெறும் காளியின் பெயரையும் மக்கள் கொண்டிருந்தமைக்குப் பல கல்வெட்டுகள் சான்றாகின்றன. காளி கேசன், காளி மாறன், நங்காளி, பொற்காளி, காளி நீலி, நக்கன் காளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன அவற்றுள் சில. ஆனால் இதுநாள்வரை கிடைத்துள்ள இக்கால கல்வெட்டுக்களுள் ஒன்று கூட காளி என்ற பெயரில் பெண்தெய்வம் அமைந்திருந்தமையைச் சுட்டவில்லை.

'தேவர்களும் பேய்கணங்களும் வணங்கும் திருவடிகளையுடைய நிசும்பசூதனியின் திருவருளால் நான்கு கடல்களாலும் சூழப்பெற்ற இந்த நில உலக ஆட்சியாகிய பாரத்தை ஒரு பூமாலையைப் போல தரித்த விஜயாலயன் அத்தெய்வத்தின் வடிவத்தைப்பிரதிஷ்டைசெய்தான்' என்றுகுறிப்பிடும் திருவலாங்காட்டுச் செப்பேடும் அச்செய்தியை வலியுறுத்தும் கன்யாகுமரி கல்வெட்டும் சுட்டும் நிசும்பசூதனியைத் தஞ்சாவூரில் அடையாளம் காணக்கூடவில்லை. விஜயாலயன் குறிப்பிடும் திருமேனியின் பெயர் நிசும்பசூதனி என்றிருப்பதால் அத்திருமேனி நிசும்பனைக் கொன்றதாக கூறப்படும் காளி அன்னையின் வடிவமாக இருக்க வேண்டுமென்றுக் கருதலாம். அப்படியாயின் தமிழ்நாட்டின் உறுதியான முதல் காளி வடிவமாக விஜயாலயர் நிறுவிய நிசும்பசூதனியைக் கொள்ள முடியும். இளங்கோ முத்தரையர் காலத்து நியமத்து மாகாளப் பிடாரியைக் காளியாகக் கொள்ளின் அது விஜயாலயர் எழுந்தருளுவித்த நிசும்பசூதனிக்கும் காலத்தால் முற்பட்ட காளிச் சிற்பமாக அமையும். இவ்விரண்டு சிற்பங்களுமே இன்றைக்குப் பார்வைக்குக் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காலத்தால் முற்பட்ட காளியின் சிற்பங்கள் சிற்றுருவ சிற்பங்களாக முற்சோழர் கோயில்களில் டாக்டர். மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய ஆய்வாளர்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன பொன்செய் நல்துணையீசுவரம், கொற்றமங்களம் விஷ்ணு கோயில், திருச்சென்னம் பூண்டிச் சடையாரி கோயில், திருச்செந்துறை சந்திரசேகரர், திருக்கோளில் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன.

இறைவனின் உடனுறைத் தேவியாகும் பெருமைக்குரிய சிறப்பு நிலைகளைப் பெற்றிருந்த போதும், துர்க்கை, ஜேஷ்டை, அன்னையர் எழுவர் போல உமைக்குத் தனிக் கோயில் அமைந்திருந்ததாக அறியக் கூடவில்லை. உமையை மட்டும் தனித்துக் காட்டும் பழஞ்சிற்பங்களும் இதுநாள் வரையிலும் கிடைத்தில்லை. காலத்தால் முற்பட்ட கல்வெட்டுகளிலும் உமைக்கு மட்டுமென அமைந்த தனித்த நிலையிலான வழிபாட்டுச் சுட்டல்களைக் காணக்கூடவில்லை. முற்சோழர் காலத்தில் தான் உமாபட்டாரகி எனனும் பெயருடன் செப்புத் திருமேனிகள் இறைவனுக்கான தேவியென்ற நிலையில் அமைக்கபெற்று வழிபாட்டு நிவந்தங்கள் பெறுவதை கல்வெட்டுகள் வழி அறிய முடிகிறது. இந்நிலையில் பழங்கால அம்மன் கோயில்களாக வழக்கில் அறியப்படும் மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, ஆகியவற்றின் பழைமைத் தன்மை கேள்விக் குறியாதல் தெளியலாம்.

## முடிவுரை

தாய்த்தெய்வ வழிபாட்டில் தொடங்கிய பெண்தெய்வ வழிபாட்டுச் சிந்தனைகளின் முதற்படி கொற்றவை. சங்க காலத்தின் பிற்பகுதியிலே கொற்றவை துர்க்கையாகி சிவபெருமானினின்றும் நீங்கத் தொடங்க புதுவரவான உமை அவ்விடம் பெறுகிறாா். இறைவனை நீங்கத் தொடங்கிய நிலையிலும் சிலப்பதிகார காலம் வரை கொற்றவை சிவபெருமானின் மனைவியாகவே கருதப்படுகிறாா். பல்லவர்கள் அவரைத் தொடர்ந்து போற்றிப் பின் அவரைக் கோட்டத் தெய்வமாக்கி மண்டபத்திற்கு அனுப்புகிறார்கள்.

சிலப்பதிகாரம் அடைாளப்படுத்தும் அன்னையர் எழுவரும் காளியும் தனிக்கோயில்கள் பெற்றாலும் துணைத் தெய்வங்களாக அமைகின்றனர். இவ்விருவருள் அன்னையரின் செல்வாக்கு அதிகமாகியுள்ளதைக் கோயில்களும் சிற்பங்களும் கல்வெட்டுகளும் உணர்த்துகின்றன. வள்ளுவர் வழியில் வரும் ஜேஷ்டை, கல்வெட்டிலும் இடம்பெற்றுத் தனிக்கோயிலும் பெற்றுச் சோழர்கள் காலத்தில் பரிவாரக் கூட்டத்திற்குள் அடங்கிப் போகிறார். இப்பெண்தெய்வங்களுடன் கோனேரி நங்கை போன்ற பெயரிடப்பட்ட பெண் தெய்வங்கள் சிலவும், பெயரிடப்படாத பிடாரிகள் பலவும் வழிபாட்டில் இருந்ததை உணர முடிகின்றது. இவை கடல்கெழு செல்வி, சூரர மகளிர், வரைய மகளிர், அணங்குகள் போன்றவற்றின் தொடர் நிலைகளாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வரலாற்று தொன்மை மிக்க
# கோறளைப்பற்று தெற்கு பிரதேசம்

அருணாசலம் சதானந்தன் - கிழக்குப் பல்கலைகழகம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2009ஆம் ஆண்டிலிருந்து சாசனவியல் பயிலரங்கு நடாத்தப்பட்டு வருகின்றது. இப்பயிலரங்கு ஆரம்ப, உயர் நிலையில் நடாத்தப்பட்டது. இப்பயிலரங்கில் பயிற்சி பெற்ற திரு. அ.சதானந்தன் அவர்களால் இச்சாசனம் கண்டுபிடிக்கப்பட்டது. தாம் பெற்ற பயிற்சியின் பலனை சமுதாயத்திற்கும், வரலாற்றிற்கும் அவர் தந்துள்ளார் என்பதை திணைக்களம் உவகையுடன் தெரிவித்துக் கொள்கிறது.

தேசமொன்றின் வரலாற்றினைக் கூறுவது இலக்கியங்களும் தொல்பொருள் மூலாதாரங்களுமே யாகும். எனினும் இலக்கியங்கள் அது எழுதப்பட்ட காலத்திற்கும் அதனை எழுதியவரின் கற்பனா சக்திக்கும், மனோநிலைக்கும் உட்பட்டவை. எனவே இலக்கியங்கள் வரலாற்றினைக் கூறும் அதே வேளையில் அவை மிகைப்படுத்திக் கூறுவதற்கான சந்தரப்பங்களும் உள்ளன. ஆனால் தொல்லியல் ஆதாரங்கள் அவ்வாறனவையன்று. அவை நம்பகமான வரலாற்றுத் தன்மையினைக் கூறும் இயல்புடை யவை. இலங்கையின் ஆரம்பகால வரலாறானது ஐதிகங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது. எனினும் தொல்லியலில் ஏற்பட்ட வளர்ச்சி நிலை இந்நிலையில் மாற்றங்களை உண்டு பண்ணி ஆதாரங்களுடனான வரலாற்றினைக் கட்டியெழுப்பியது. தமிழர்களின் பூர்வீக தேசமான மட்டக்களப்பு வரலாற்றில் தொல் லியல் ஆய்வுக்கான முயற்சிகள் இடம் பெற்றிருந்த போதும் அவை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு முழுமையான நிலையை அடையாமை கவலைக்குரியது. இங்கு தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப் படுமாயின் மட்டக்களப்பு வரலாற்றின் வளர்ச்சிப் படிகளை கண்டுகொள்ள முடியும்.

கிழக்கிலங்கையின் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பல பிரதேசங்கள் தொல்லியல் ஆதாரங்கள் நிரம்பப் பெற்றவை. ஆயினும் அவை இன்னும் அடையாளப்படுத்தப் படாதவை. அடையாளப்படுத்தப் படவேண்டியவை. இங்கு குறிப்பாக குடும்பிமலை, பத்தாவெடி போன்ற பிரதேசங்கள் தொல்லியல் ஆதாரங்கள் நிரம்பப் பெற்றவை. இப்பகுதிகளில் கல்வெட்டுகள் பலவற்றை எம்மால் அடையாளங் காணமுடிந்துள்ளது.



படம் 1

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேசத்தின் சந்தியிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் பாதையில் 25 கி.மீற்றர் பயணம் செய்தால் குடும்பி மலை பிரதேசத்தை அடையலாம். தொல்லியல் ஆதாரங்களை கண்டறியும் ஆய்வு முயற்சியொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிரதேச கிராம சேவையாளர், ஊர்த்தலைவர், கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்களாகிய க. சந்திரமோகன், நிராஜ்மேனன் ஆகியோரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் அங்கு பல தொல்லியலாதாரங்களை கண்டுகொள்ள முடிந்தமை மகிழ்ச்சிக்குரியது.

கி.மு.மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டு வரை தென்னாசிய துணைக்கண்டத்தில் எழுதப் பட்டுள்ள ஆவணங்கள் எல்லாம் பிராமி எனும் வகைக்குரிய வரிவடிவங்களில் எழுதப்பட்டுள்ளன. தமிழகத்தில் வழங்கிய இந்த எழுத்து முறையில் தமிழுக்குச் சிறப்பான எழுத்துக்கள் அமைந்திருந்தமையால் அது தமிழ் பிராமி என்று அழைக்கப்பட்டது. இலங்கையில் 2000க்கும் மேலான பிராமி சாசனங்கள் உண்டு. இவை பெரும்பாலும் மலைகளிலும், பெருங்கற்பாறைகளிலும் குகைத்தளங்களிலும் வெட்டப்பட்டுள்ளன. இவற்றிலே காணப்படும் சொற்களும் சொற்றொடர்களும் பெரும்பாலும் பொதுவானவை. இவற்றில் பெரும்பாலானவை ஓரிருவரிகளில் துறவிகளுக்கு அக்கால சமூகத்தின் பலதரப்பட்ட மக்கள் அளித்த நிலம், கால்வாய், குகை, கற்படுக்கை, உணவு போன்ற தானங்கள் பற்றிக் கூறுகின்றன. இவற்றில் பலவற்றில் தானமளித்தவர் பெயரோடு அவரின் வம்சம், பட்டம், பதவி, தொழில், சமயம், இனம் போன்றவையும் அவர்கள் வாழ்ந்த இடம், ஊர் போன்ற செய்திகளும் கூறப்படுகின்றன. இவை நாவலந் தீவின் பொது வழக்கான பிராகிரு மொழியில் அமைந்தவை. குடும்பி மலை, பத்தியவெளி போன்ற இடங்களில் சிலசாசனக் குறிப்புகள் உள்ளடங்கலாக தொல்லியல் தடயங்களும் கிடைக்கப் பெற்று ள்ளன.

குடும்பிமலை பிரதேசத்தில் காணப்படும் கல்வெட்டு சாசனமா னது 5 அடி நீளமும் 2 அடி அகலமும் கொண்டது. (படம் 1) 5 வரிகளில் பொறிக்கப்பட்டுள்ள இதில் மேலுள்ள ஒரு வரி நேர்த்தியில்லாதது. மீதமாகவுள்ள நான்கு வரிகளும் கட்டமைக்கப்பட்ட செவ்வக வடிவில் அமைந்த பரப்பினுள் அமைந்தவை. நேர்த்தியானவை. இதில் 2ஆம், 3ஆம் வரிகளின் இடைநடுவில் சில எழுத்துக்கள் அழிந்துப் போயுள்ளன. இவ்வெழுத்துக்களின் வளர்ச்சியடைந்த போக்கை காணமுடிகிறது. கி.பி 2ஆம் நூற்றாண்டு காலப்பகுதிக்குரியவையாகக் கருதமுடிகின்றது. பிராகிருத மொழி வழக்கானவை.

இச்சாசனத்தினை முழுமையாக படிக்க




படம் 2 (தூண்கள்)

முடியவில்லை. எனினும் அதில் 'மகாராஜா அபயஹ' எனும் சொற்கள் காணப்படுகின்றன. இதன்படி இப்பிரதேசத்தின் அரசனான அபயன் என்பவனால் நடத்தப்பட்ட ஏதோவோர் நிகழ்ச்சி பற்றி இச்சாசனம் குறிப்பிடுகின்றது. இச்சாசன பொறிப்பினை ஓர் தானசானமாகக் கொள்ளலாம். இதிலுள்ள இச்சொறொடரிற்கும் அதன் சூழலிற்கும் தொடர்பிருப்பதைக் காண முடிகின்றது.

சிறியதும் ஆழம் குறைந்ததுமான குளங்கள் இப்பகுதிகளில் பல இடங்களில் காணப்படுகின்றன. இவை நீர் வசதி குறைந்த இப்பிரதேசத்தில் மக்களினுடைய தேவைக்காக அல்லது தனிப்பட்டோருக்காக அமைக்கப்பட்டு தானமாக வழங்கப்பட்டிருக்கலாம் என யூகிக்க முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் அவை உறுதியாக கூற முடியாதவை. வரலாற்றாய்வாளர்களின் பரிசீலனை க்கு உட்பட வேண்டியவை. இதிலுள்ள அபயஹ எனும் சொல்லில் அபய என்பது வட மொழி வழக்கானவை.


படம் 3 (புத்தாவெடி கல்வெட்டு)

இலங்கையில் கிடைக்கின்ற சாசனங்களில் இதுபோன்ற சுமன, தீச, விஸாக, குடும்பிக, சமண முதலான சொற்பிரயோகங்கள் இடம் பெறுகின்றன. இவ்வகையான சொற்பிரயோகங்கள் இடம்பெறும் போது அவை அன் விகுதி சேர்த்து படிக்கப்படுகின்றது. இதன்படி அபய என்பது அபயன் என்றே படிக்க வேண்டும். இது அப்பிரதேசத்தின் தலைவனாக இருந்த அபயன் எனும் குறுநில மன்னனையே குறிக்கின்றது எனலாம்.

இப்பிரதேசத்தின் மற்றுமொரு தொல்லியலாதார மாக அங்கு காணப்படும் தூண்கள் அவை நேர்த்தியாக செதுக்கப்படவில்லை. நிலத்தில் நாட்டப்படும் மண்ணில் புதைபட்டதுமாகக் காணப்படுகின்ற அவை பல உண்டு. எதற்காக உருவாக்கப்பட்டன என்பதினை உறுதியாக கூறமுடியாதுள்ளது. (படம் 2) தென்னிந்தியாவில் இறந்த வீரர்களில் நினைவாக வீரகற்கள் நிறுவப்பட்டன. பழந்தமிழ் இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, ஐந்திணை ஐம்பது, தொல்காப்பியம் முதலான இலக்கியங்களில் நடுகல் வழிபாடு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பெருங்கற்காலத்தில் இறந்தோரின் நினைவாக குத்துக்கல் எனப்படும் நினைவுகற்கள் எழுப்பப்பட்டன. இவை முற்றிலும் உருவம் வரையப் படாதவை. கி.மு 1000 முதல் கி.மு 500 வரையான காலத்தில் இந்நிலையைக் காணலாம். இதனை அடிப்படையாகக் கொண்டு இப்பகுதிகளில் நடுகல் வழிபாடு பேணப்பட்டுள்ளது என்கிற முடிவிற்கு வரமுடிகின்றது.

இதனோடு மலையில் குளியல் தடாகம் போன்ற அமைப்பும் உள்ளது. அதன் அருகே மலையில் இருவேறாகக்கப்படும் வகையில் சங்கிலி போன்ற அமைப்பில் தொடராக ஒரு கோடு நீண்டு செல்கிறது. அது அலங்கார வேலைப் பாடாகவோ அல்லது மலையினை இருவேறாக பிரித்த எல்லைக் கோடாகவே இருக்கலாம். இங்குள்ள கோயிலிலுள்ள ஒது தட்டையான கல்லில் அலங்கார உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. அது இரண்டடி நீள, அகலங்களைக் கொண்டது. இரு பகுதிகளாக பிரிக்கப்பட்ட இக்கல்லின் இரு பகுதிகளிலும் ஒரே விதமான அலங்காரம் பொறிக்கப்பட்டுள்ளது. தற்போது வழிபாட்டிற்குரிய கற்களை நீளமான தூண் கல்லில் வைத்துள்ளன. கீழ் அமைந்திருக்கக் கூடிய அலங்கார வேலைப்பாடுகள் உண்டு.

இங்கு கிடைக்கப்பெறும் மற்றுமொரு தொல்லியல் ஆதாரமாக கலவோடுகளை கூறலாம். அவை சற்றுக் கனமானவை. பூசப்படாத மேற்பரப்பினை உடையவை. இவை ஏராளமாகக் காணப்படுகின்றன. அளவில் பெரிய செங்கற்கள் காணப்படுகின்றன. இதனடிப்படையில் இங்கு களிமண்ணாலான பொருட்களின் உற்பத்தி நடைபெற்றிருக்க வேண்டும். அப்பகுதிகளில் தோண்டப்பட்ட நிலையில் காணப்பட்ட குழிகளை நாம் ஆராய்ந்த போது அடுக்கப்பட்ட நிலையில் செங்கற்கள் காணப்படுகின்றன. எனவே இங்கு கட்டிடத் தொகுதிகள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கப் பெறுகின்றன. ஓரிடத்தில் மலையின் ஒருபகுதி குடைந்துள்ளதைப் போன்று வெட்டப்பட்ட மலை உண்டு. அதிலே நீர் வழிந்தோடுவதற்கான கற்பீலிகள் அமைந்துள்ளது. கல்வீடு என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படும் இவ்விடம் சமய துறவிகள் தங்குவதற்காக அமைக்கப்பட்டிருக்கலாம்.

எனினும் இங்கு சாசன பொறிப்புகள் கிடைக்கவில்லை. இதன் அருகிலுள்ள கல்லில் ஓர் பாத அடையாளமும் உண்டு. பொதுவாக இவை பெருங்கற்கால பண்பாட்டு மக்கள் இப்பகுதிகளில் வாழ்ந்தமைக்கான உறுதியான சான்றுகளாக நாம் கொள்ள முடியும். எனினும் பூரணமான ஆய்வுகள் செய்யப்படாத நிலையில் இது பற்றிய உறுதியான முடிவினைக் கூற முடியாதுள்ளது.

குடும்பி மலையிலிருந்து சற்று 3 கிலோமீற்றர் தொலைவில் பத்தாவெடி எனும் ஓர் இடம் உண்டு. அங்கே ஒருவரியில் சாசனம் ஒன்று கிடைத்துள்ளது. (படம் 3) அடர்ந்த காட்டினுள் அமைந்த இது அங்கு வரும் வேளாண்மை செய்பவர்களாலும், மாடு வளர்ப்பவர்களாலும் வணங்கப் படும் அவர்களின் குலதெய்வம் இருக்கும் இடத்திற்கு அருகில் அமைந்துள்ளது. 9 எழுத்துக்களினை கொண்ட இது 3 அடி நீளமானது. முன்பு குறிப்பிட்ட குடும்பி மலை சாசன எழுத்தின் சமகாலத்தவை. இதில் முரண் எனும் சொல் இடையில் தென்படுவதினைக் காணலாம். இது தமிழிற்குரிய சிறப்பு சொல்லாகும். இச்சாசனம் காணப்படும் இடத்திற்கு சற்று அருகாமையில் கருங்கற்கள் அடங்கிய திட்டுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பெருங்கற்படைக் காலம் என்பது கி.மு 1000 முதல் ஆரம்பமாகின்றது. பெருங்கற் பண்பாட்டை உருவாக்கிய மக்கள் இறந்தோரை அடக்கம் செய்வதற்கு பெருங்கற்களால் ஆன ஈமச்சின்னங்களை அமைத்தமையினால் இவர்கள் கால பண்பாடு 'பெருங்கற்கால பண்பாடு' என்ற பெயர் பெறுகின்றது.

எனவே இக்கற்திட்டுகள் பெருங்கற் படைகாலத்தில் வாழ்ந்த இம்மக்களினால் ஈமக்கிரியைகளின் போது உருவாக்கப் பட்டிருக்கலாம். பெருங்கற் படை காலத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்யும் போது இறந்தவர்கள் பயன்படுத்திய பொருட்கள், அவர்களுக்கு விருப்பமானவைகள், ஏனைய தானியங்கள் போன்றவை அவர்களினுடைய உடலோடு வைத்து அடக்கம் செய்யப்படும். எனவே இவ்விடத்தினை அகழ்வாய்வு செய்யும் போது பெருங்கற்படைகால மக்கள் பயனபடுத்திய பொருட்கள் அவர்களினுடைய வாழ்க்கை முறை, இதனோடிணைந்த இலங்கையின் ஆதிகால வரலாற்று மரபின் உற்பத்தி மரபுகள் முதலான பல விடயங்களினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவற்றுடன் இக்கருங்கல் திட்டுகளுக்கு அண்மையில் மக்கள் வீடுகள் கட்டி இருந்தமைக்கான தடயங்களும் கிடைக்கின்றன. இதன் படி வீட்டினுடைய அமைப்பு அறைப்பிரிப்புகள் கொண்டதாக அமைந் துள்ளது. சிறுசிறு அறைகளாக குறிப்பாக 6 அடிநீளமும் 3 அடி அகலமும் கொண்டதாக அவை பிரிக்கப்பட்டிருப்பதினைக் காணலாம். எனவே இது வீடு அமைக்கப்பட்டதற்கான இடமாகக் கொள்ள முடிகிறது. இது போன்று ஓரிரு இடங்களில் உண்டு. இதனை அக்கால சமூதாய அமைப்பின் ஓர் அம்சமாக கொள்ள முடியும். இவ்வீடு போன்ற அமைப்பினைச் சுற்றி கருங்கற்கள் ஒவ்வொரு அடிநீள இடைவெளியில் வேலிபோன்ற அமைப்பில் நடப்பட்டு இருப்பதினைக் கொண்டு அவை ஒவ்வொரு வீட்டின் நிலப்பரப்பின் எல்லையை சுட்டுவதாக அமைந்தவை எனலாம். எனவே அக்கால மக்கள் எல்லைகளை வகுத்து வாழ்ந்தமை தெரிகின்றது. இங்கும் செங்கற்கள் கிடைக்கப்பெறுகின்றன. அவை அளவில் பெரியவை. ஒன்றன் மேல் ஒன்று அடுக்கப்பட்ட நிலையில் உள்ளவை. வலிமையானவை. குடும்பிமலை பிரதேசத்தில் கிடைத்த செங்கற்கள் போன்றவை. கருங்கல் திட்டுகள் உள்ள இடத்தில் அதிகமாகக் கிடைக்கின்றன.

இப்பிரதேசங்களில் உள்ள தொல்லியல் ஆவணங்கள் முக்கியமானவை, பாதுகாக்கப்பட வேண்டியவை. இவற்றுடன் இவை கூறும் விடயங்கள் என்னவென்பது ஆய்வுக்குட் படுத்தப்பட வேண்டியவை. ஆதிகால வரலாற்று அம்சங்களைக் கொண்டுள்ள இப்பிரதேசங்கள் அகழ்வாய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியவை. இதற்கு சட்ட ரீதியான அனுமதியும், ஆதரவும் கிடைக்கும் பட்சத்தில் எம்மால் எமது பிரதேசம் பற்றிய வரலாற்றம்சங்களை அடையாளப்படுத்தப்படவும், ஆவணப்படுத்தவும் முடிகின்ற வேளையில் இப்பிரதேசத்தினுடைய வரலாற்றிணோடு இணைந்த வகையில் மட்டகளப்பின் வரலாறும் கட்டியெழுப்பப்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி அமாவாசை விரதம்

ஆடி அமாவாசை விரத நன்னாள் ஒரு புனிதம் நிறைந்த மகோன்னதமான நாளாகும். ஆடி மாதம் சிறப்புகள் பல நிறைந்த ஒரு மாதம். இந்த மாதத்தில் ஆடிப்பிறப்பு, ஆடிப்பூரம், ஆடிச்செவ்வாய், ஆடிக் கார்த்திகை, ஆடி அமாவாசை என்று விசேடங்கள் பலவாகும்.

ஆடி அமாவாசை பிதிர்க்கடன் செலுத்தும் பொன்னான நாள். இந்த நன்னாளில் சைவ சமயத்தை அனுட்டிப்பவர்கள் அனைவரும் உபவாசமாக விரதங்காத்து, இப்பூவுலவாழ்க்கையை நீத்துவிட்டு புகழுடம்பைப் பெற்று இறைவன் திருவடி நீழலையடைந்த தமது பிதாவாகிய தந்தைக்குப் பிதிர் கடன் செலுத்துவர்.

'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்ற கூற்றுப்படி எம்மை இந்தப் புவியில் நல்லவழியில் நடக்க வைத்து, மற்றவர் வகையில் வாழ வைத்த அன்பு நிறைந்த அறிவுத் தெய்வமான நம் தந்தைக்கு அவரது ஆத்மா சாந்தி அடையும் பொருட்டு செய்யப்படும் ஆன்மீக வழிபாடு மிகவும் முக்கியமாததொன்றாகும்.

நம்முன்னோர்கள் இப்பரந்த நிலவுலகின் கண்ணே, புனிதப்பிறவியான மனிதப் பிறவி எடுத்த நாம் இப்படித்தான் வாழவேண்டுமென்று ஒரு வரன் முறையை, விதிமுறையை வகுத்துச் சென்றிருக்கின்றார்கள். அதன்படி ஒழுகுவதே நமக்கு நன்மை பயக்கும்.

எனவே, இறையடி சேர்ந்த தந்தையின் ஆத்மாவுக்கு நன்றி செலுத்துகின்ற இந்த பிதிர்கடன் செலுத்துகின்ற நெறிமுறையில் நாம் சற்றேனும் வழுவுதல் தகாது. பிதிர்க்கடன் கட்டாயம் செய்ய வேண்டும்.

இப்பூவுலக வாழ்வை விடுத்து தேகவியோகம் அடைந்து விட்டால் அந்தப் பிதிர்களுக்கு பிரீதி செய்ய வேண்டியது எமது தலயாய கடனாகும். இந்த ஆடி அமாவாசையில் ஓர் அந்தணருக்கு தான தர்மங்கள் செய்து, தர்ப்பை வாங்கி அணிந்து, எள்ளும் தண்ணீரும் அறைத்துப் பிதிர்கடனை நிறைவேற்ற வேண்டும். இந்த பிதிர்த்தர்ப்பணஞ் செய்யும் போது தந்தையின் ஆத்மாவை நினைந்து சாந்திப் பெற பிரார்த்திக்க வேண்டும்.

'அமா' என்பது ஓரிடத்திற் பொருந்தியது, குவிந்தது, அடுத்தது என்று பொருள்படும். சூரியனும் சந்திரனும் ஓர் இராசியிற் சஞ்சரித்து உறவாடும் நாளே அமாவாசை எனப்படுகிறது. இந்த உலகம் இயங்குவதற்கு சூரியன் தான் மூலக்காரணர். சந்திரன் மகிழ்ச்சிக்கும் இன்பத்திற்கும் தெளிந்த அறிவுக்கும் தலைவர். இவற்றை நாம் பெற்றுக் கொள்வதற்கு அமாவாசை விரதம் அனுஷ்டித்தல் வேண்டும். அபுத்திபூர்வமாகச் செய்த வினைகள் அந்தியேட்டி, தகனக்கிரியைகளால் மாறும். புத்திபூர்வமாகச் செய்த வினைகள் நாம் அனுபவித்தேயாக வேண்டும். பிதிர்க்கடன் செய்யாது விடுதல் பாவமாகும்.

'தந்தையோடு கல்விபோம்' என்பார்கள். பெரிய தனமான கல்விச் செல்வத்தை எமக்கு அளிப்பவர் தந்தையே. அவர் இல்லையேல் நாம் கல்வியில் முன்னேற்றங் காணமுடியாது.

மனிதர்களுக்கு ஒருவருடம் தேவர்களுக்கு ஒருநாள் கணக்கில் தை மாதம் முதலாக ஆனி மாதம் ஈறாக வருகின்ற ஆறுமாதங்களும் பகற்பொழுதாகும். இதனை உத்தராயண காலம் என வழங்குவர். பின்பு ஆடிமாதம் முதலாக மார்கழி ஈறாக வருகின்ற ஆறு மாதங்களும் தேவர்களுக்கு இரவுப்பொழுதாகும். இதை தக்ஷணாயனகாலம் என வழங்குவர்.

இதனாலேயே ஆடி அமாவாசை நாளானது பிதிர்கடன் செலுத்துவதற்கு ஏற்ற நாளாகக் கருதப்படுகிறது. இந்த புண்ணிய நாளில் அறுசுவை உணவு ஆக்கிப் படைத்து ஆன்மாக்களை வழிப்படுவது வழமை.இதில் காத்தோட்டிக்காய் சேர்க்கும் ஒரு சம்பிரதாயமும் தொன்றுதொட்டு நிலவி வருகிறது. இதன் தாற்பரியம் என்னவென்று தெரியவில்லை. புராண வரலாறுகளிலும் ஆதாரங்கள் கூறப்படவில்லை. ஆனால் பிதிர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசப்புணவில் பிரீதி அதிகம் என்று நம் முன்னோர் கருதிய காரணத்தால் காத்தோட்டிக்காய் படைக்கும் பழக்கம் வந்ததாகவும் சொல்லுவோர் உளர்.

எமது உடம்பில் வருகின்ற வாயு சம்பந்தமான வியாதிகளுக்கு இந்தக் காத்தோட்டிக்காய் மருந்தாகவும் பயன்படுகிறது. தாங்கள் சமைத்த அன்னம், கறி, பொரியல், சம்பல் முதலியவற்றை முதலில் காகத்திற்கு வைத்து அது சாப்பிட்ட பின்னர் விரதகாரர் உண்ணுவார். இதுவே வழமை.

ஏழைகளுக்கு வயிறார உண்ணக் கொடுத்து அவர்கள் போதும் போதும் என்று சொல்லுமளவிற்கு தாராளமாக உணவை அள்ளி வழங்கி அன்னதானம் செய்தால் ஆடி அமாவாசை விரத பலன் பூரணமாகக் கிடைக்கும்.

தானத்தில் சிறந்த தானம் அன்னதானம். எனவே, இந்தப் புனித நன்னாளில் மனிதப்பிறவி எடுத்த நாம் வறுமைப்பட்ட ஏழை எளியவர்களுக்கு தான தர்மம் செய்வதே உத்தமம். ஆகவே, ஆடி அமாவாசை தினத்தில் பிதிர்க்கடனை நிறைவேற்றி இந்த உலகில் மனிதப் பிறவி எடுத்ததன் பயனைப் பெற்று இம்மையிலும் மறுமையிலும் அம்மையிலும் நாம் நற்பயனுக்கு வழித்தேடிக் கொள்வோமாக.

## விவேகானந்தரின் அறிவுரைகள்

மனிதனுக்கு மன அமைதியைத் தருவது தான் மதத்தின் அடிப்படை இலட்சியமாகும். மறு உலகத்தில் இன்பம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த உலக வாழ்கையில் துன்பத்தை அனுபவிப்பது அறிவுடைய செயலாகாது. ஒருவன் இங்கேயே, இப்போதே, இன்பத்தைப் பெற வேண்டும். இப்படிப்பட்ட இன்பத்தைத் தரக்கூடிய மதம் எதுவாக இருந்தாலும் இந்த மதம் தான் சமுதாயத்திற்கு ஏற்ற உண்மையான மதமாகும்.

எப்போதெல்லாம் எந்த ஒரு மதம் வெற்றி பெறுகிறதோ அப்போதெல்லாம் அந்த மத்திற்கு பொருளாதார வலிமை இருக்க வேண்டும். அதைப் போல ஆயிரக்கணக்கான மதப்பிரிவுகள் அதிகாரத்துக்கு வரப் போராடியப்படி இருக்கலாம். ஆனால் உண்மையில் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய மதம் மட்டுமே பொருளாதாரத்தைக் கைப்பற்றும். வயிறு தான் மனிதனுக்கு வழிகாட்டியாக இருக்கின்றது. அவன் நடந்துச் செல்லும் போது வயிறுதான் முதலில் போகின்றது. பிறகு அதைத் தொடர்ந்து அவனது தலை போகின்றது. இதை நீங்கள் பார்த்ததில்லையா? மனிதனின் தலை முதலில் போக பல யுகங்கள் ஆகும். உங்களுடைய குழந்தைக் கனவுகள் கலையை ஆரம்பித்து, பொருள்களை உள்ளது உள்ளப்படியே நீங்கள் பார்க்க ஆரம்பிக்கும் போது, உங்களுடைய தலை போய் விடுகிறது. தலை முதலில் போக ஆரம்பிக்கும் அதே சமயத்தில் நீங்களே வெளியே போய்விடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Printed by
United Merchants Printers - 011 2434281

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org